# இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

# ஆண்டறிக்கை - 2011

2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின்
15 ஆவது வாசகத்திற்கிணங்க பாராளுமன்றிற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

# சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் தொனிப்பொருள் கீதம்

ஸ்ரீ லங்கா சிவில் குவன் சேவா அதிகாரிய
கித் யாசின் கதலே
ஹெலி தொட்ட ஹெலி ஹெலே

சக்வித்தி ராவண ஆருதி யுகேன்
தண்டு மொனரின் குவன தினா
விஸ் அமதி லக்தன வாரிய பொலனுத்
பாவிது நுவன மனா

உவதுரு தொர பவ சந்தஹா முல்வெமு
வெய்பெர வெக்கிய அபே
இக்மன் அய மகநெகுமகி முல்வெவ
மேவெய் தமக்கும அபேய்

ரடவெசி யுதுகம இடுவன அயுரின்
மௌபிம ஹா பெதமு
சமாஜ மெஹவர சாரதாஹம் ரெக
வககீமென் புதமு

| | | |
|---|---|---|
| **ஆக்கம்** | : | அரிசன் அஹுபுது |
| **பாடல்** | : | கலாநிதி பண்டிதர் டப்ள்யூ.டி. அமரதேவ |
| **இசையமைத்தவர்** | : | கலாநிதி பண்டிதர் டப்ள்யூ.டி. அமரதேவ |

# கௌரவ அமைச்சர், சிவில் விமானப் போக்குவரத்து

இவ் ஆண்டறிக்கை 2002 இன் 34 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின் 15வது வாசகத்தின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் 31 டிசம்பர் 2011 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை சிவில் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் செயற்பாடுகளை உள்ளடக்குகின்றது.



ஜெனரல் ரொகான் டி. சில்வா தளுவத்த
தலைவர்,
இலங்கை சிவில் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

24 பெப்ரவரி 2012.

# உள்ளடக்கம்


சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் தொனிப்பொருள் கீதம் 3

சுருக்கமான சொற்றொடர்கள் 10

விபரக்கொத்து 13

தலைவரின் பார்வையில் 15

சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் அறிக்கை 18

பக்கத்தோற்றம் 23
- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் உறுப்பினர்கள் 24
- தலைவர் 24
- உபதலைவர் 25
- உறுப்பினர்கள் 26

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் ஆளுகையும் பொறுப்புடமையும் 29
- அதிகாரசபையின் பொறுப்பு 29
- நிறுவனக் கட்டமைப்பு 29
- அதிகாரசபைக் கூட்டங்கள் 29
- ஊழியர் குழு 30
- நிதிக் குழு 30
- திட்டமிடற் குழு 30
- கணக்காய்வுக் குழு 31
- சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் கல்விக் குழு (CADEC) 31
- நிறுவனத்தில் அக்கறை கொண்டோருடனான தொடர்பு 31
- அதிகாரசபையினதும் சிரேஷ்ட உறுப்பினர்களதும் பொறுப்பு 32
- பொறுப்புடமை 32
- ஆர்வ ரீதியான முரண்பாடுகள் 32

உள்ளகக் கணக்காய்வு 32
சட்டக் கடப்பாடு 32
ஒழுக்க விழுமியங்கள் 33

**இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை 34**
தூரநோக்கு 34
குறிக்கோள் 34
குறிக்கோள் வாசகம் 34
தத்துவம் 34
இலக்குகள் 34
தந்திரோபாயங்கள் 34
மதிப்பீடுகள் 34
இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் முன்னிலைப்படுத்தப்பட்ட இலக்குகள் 35
விளைவுகள் 35
வெளியீடுகள் 36

**வழிகாட்டல் மற்றும் முகாமைத்துவம் 37**
அதிகாரசபையும் அதன் குழுக்களும் 37
பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் 37
இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் கூட்டங்கள் 37

**சிரேஷ்ட முகாமைத்துவம் 37**
ICAO USOAP ஆய்வு முடிவுகள் 37
COSCAP தெற்காசியாவின் 20 ஆவது வழிப்படுத்துகைக் குழுக் கூட்டம். 38
வானூர்தி விபத்து விசாரணை அலகு 38
உள்ளகக் கணக்காய்வுப் பகுதி 39

**வானியல் சேவைகள் பிரிவு 40**

**விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பகுதி 40**
விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பயிற்சி 40
திரை சான்றுப்படுத்தல் 40
போர்த் தளபாடங்களைக் கையாள்வதற்கான அனுமதி 40
விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு மற்றும் கூட்டங்கள் 41
விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு கற்கைநெறி மற்றும் செயலமர்வு 41

**விசேட செயற்றிட்டப் பகுதி 41**
தேசத்திற்கு மகுடம் கண்காட்சி 41
COSCAP-SA செயற்றிட்டத்திற்கு உதவிபுரிதல் 41
CAASL இன் பயிற்சிக் கல்லூரி (CAATA) 42
விமானப் போக்குவரத்து எரிபொருள் விலையிடற் கண்காணிப்பு 42
ஆண்டறிக்கை 2010 42
உபகாரப் பொருட்கள் 42

விமானத்தளம் மற்றும் வான்செலவு சேவைகள் பகுதி 42
ATC தரமிடல் மதிப்பீடுகள் 42
சோதனை நடவடிக்கைகள் 42
நீர் விமானத்தளம் 43
உயர் அடுக்கு மாடிக்கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கான அனுமதி 43
நடாத்தப்பட்ட பயிற்சி நெறிகள் 43
மேலாகப் பறத்தல் மற்றும் தரையிறங்கலுக்கான அனுமதிகள் 43
வானியல் தகவற் சேவை 43
அம்பாந்தோட்டை சர்வதேச விமான நிலைய நிர்மாணிப்பதற்கான நியதிச்சட்ட உதவிகள் 43

விமானப் பயணப் பாதுகாப்புப் பிரிவு 44

தனிநபர் அனுமதிப்பத்திரப் பகுதி 44
அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனத்திற்கான பாதுகாப்பு முகாமைத்துவ முறைமையின் அமுலாக்கம் 44
விமானப் பறத்தற் சோதனைப் பரீட்சகர்களின் நியமனம். 44
வெளிநாட்டு விமானி அனுமதிப்பத்திரதாரரின் அறிவினைச் சோதனையிடல் 44
தனிநபர் அனுமதிப்பத்திரப் பகுதியின் தொழிற்பாடுகளை தன்னியைபாக்கல் 45
மருத்துவச் சோதனைக்கான வைத்தியசாலையொன்றினை நியமித்தல் 45

செயற்பாட்டுப் பகுதி 45
வெளிநாட்டு வான் செயற்பாட்டாளர் சான்றுப்படுத்தல் 45
மாதிரிகைகளுக்கான அனுமதிகள் 45
நியமனம் பெற்ற பரிசோதனை விமானிகள் 45
வான் செயற்பாட்டாளர் சான்றுப்படுத்தல் 45
பின்வரும் செயற்பாட்டாளர்கள் வழிகாட்டல் நூல் மீதான திருத்தங்கள் மீள்பார்வை செய்யப்பட்டதுடன் அனுமதியளிக்கப்பட்டது. 46
உள்நாட்டுச் செயற்பாட்டாளர்களின் பின்வரும் பயிற்சிநெறித் திட்டங்கள் செயற்பாட்டுப்பகுதியால் மீள்பார்வை செய்யப்பட்டு அனுமதியளிக்கப்பட்டன. 46
USOAP ஆய்வு 46

வான்தகைமைப் பகுதி 46
தொடர்ச்சியான வான்தகைமை 46
வானூர்திப் பராமரிப்பு நிறுவனங்கள் 47
வானூர்திப் பதிவு 47
பாதுகாப்புச் சோதனை நடவடிக்கை 47
விஸா பரிந்துரைகள் 47
பராமரிப்புப் பொறியியலாளருக்கான அனுமதிப்பத்திரம் 47
உதிரிப் பாகங்களுக்கான அனுமதி 47

கூட்டாண்மைப் பிரிவு 48

வான் போக்குவரத்து மற்றும் சட்ட விவகாரங்கள் பகுதி 48
வான் போக்குவரத்துப் புள்ளி விபரங்கள் 48
விமான சேவைச் செயற்பாட்டாளர்கள் 48
பயணிகள் மற்றும் சரக்கு நகர்வுகள் 48
இடைநிற் பயணிகள் 48

| | |
|---|---|
| உள்நாட்டு விமானப் போக்குவரத்து | 48 |
| பயண முகவர்கள் | 49 |
| வான் சேவைகள் பேச்சுவார்த்தை | 49 |
| EU கிடை ரீதியான உடன்படிக்கை | 50 |
| வான் சேவைகள் ஒதுக்கீடு மற்றும் கட்டணங்கள் அறவிடுகைக் கற்கைநெறி | 50 |
| SLOT ஒழுங்கியக்கம் | 50 |
| பொதுப் பரிசோதகர் வேலைத்திட்டம் | 50 |
| APIG (விமானத்தள நடவடிக்கைகளை முன்னேற்றும் குழு) | 50 |
| நுகர்வோர் முறைப்பாடுகளைக் கையாளல் | 51 |
| வான் போக்குவரத்துக் கைத்தொழில் மற்றும் வர்த்தகத் திணைக்களம் என்பனவற்றின் நலன் விரும்பிகளுடனான கூட்டங்கள் | 51 |
| **மனித வளங்கள் மற்றும் அலுவலக முகாமைத்துவப் பகுதி** | **51** |
| ஊழியரிடல் | 51 |
| ஊழியர் நலன்புரி | 51 |
| பயிற்சிகள், கருத்தரங்குகள், வேலைப்பட்டறைகள், கூட்டங்கள், மற்றும் மாநாடுகள் | 52 |
| தொழிநுட்ப நூலகம் | 52 |
| CAASL இணையத்தளம் | 52 |
| CAASL இன் கூட்டிணைவுத் திட்டமும் வேலைத்திட்டமும். | 52 |
| CAASL இனைத் தன்னியக்கப்படுத்தல் | 52 |
| புரியதொரு அமைவிடத்திற்கு CAASL ஐ நகர்த்துதல் | 53 |
| நுழைவுக் கட்டுப்பாட்டு முறைமை | 53 |
| CAASL ஊழியர்களால் பயன்படுத்தப்பட்ட விடுமுறைகள் | 53 |
| **நிதி முகாமைத்துவப் பகுதி** | **53** |
| செயற்றிட்டப் பாதீடு | 53 |
| CAASL இன் வருமானம் | 53 |
| **செயற்சாதனைச் சுருக்கம் - 2011** | **54** |
| CAASL இன் செயற்சாதனை - 2011 | 54 |
| பகுதி தனிச்சிறப்புச் செயற்பாடுகள் - 2011 | 55 |
| வழிகாட்டல் மற்றும் முகாமைத்துவம் | 55 |
| விமான போக்குவரத்துப் பாதுகாப்புப் (AV-SEC) பகுதி | 55 |
| விஷேட செயற்றிட்டங்கள் (SP) பகுதி | 55 |
| வான்செலவுச் சேவைகள் (ANS) பகுதி | 55 |
| தனியார் அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் பகுதி (PEL) | 56 |
| செயற்பாடுகள் (OPS) | 57 |
| வான்தகைமை பகுதி (AW) | 57 |
| விமான போக்குவரத்து மற்றும் சட்ட விவகாரங்கள் பகுதி (AT & LA) | 58 |
| மனிதவள மற்றும் அவலக முகாமைத்துவப் பகுதி (HROM) | 58 |
| நிதி முகாமைத்துவம் (FM) | 59 |
| உள்ளகக் கணக்காய்வு (IA) | 59 |
| விமான விபத்து மற்றும் நிகழ்வு விசாரணை அலகு (AIU) | 59 |
| கைத்தொழிலின் செயற்சாதனை - 2011 | 60 |

நிதி அறிக்கைகள் - 2011 61

நிதி அறிக்கையிடலுக்கான அதிகாரசபை உறுப்பினர்களின் பொறுப்புக் கூறல் கூற்று 61

ஐந்தொகை 62

வருமானக் கூற்று 63

உரிமை மாற்றற் கூற்று 64

காசுப்பாய்ச்சற் கூற்று 65

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 66

கணக்கீட்டுக் கொள்கைகள் 85

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 89

சீ.ஏ.ஏ.எஸ்.எல் இன் பதிலுரைகள் 96

இணைப்பு - 1 : CAA இன் நிர்வாகக் கட்டமைப்பு 104

இணைப்பு - 2 : விமானப் போக்குவரத்துச் சம்பவங்கள் - 2011 105

இணைப்பு - 3 : USOAP ஆய்வு முடிவுகள் 106

இணைப்பு - 4 : விமானப் போக்குவரத்து எரிபொருள் விலை முரண்பாடுகள் 108

இணைப்பு - 5 : ஏற்றல் வரிச் சேகரிப்பு 109

இணைப்பு - 6 : CAA ஊழியரால் பயன்படுத்தப்பட்ட விடுமுறைகள் 110

இணைப்பு - 7 : பயணிகள் வெளியேறுகைகள் மற்றும் உள்வருகைகள் 111

இணைப்பு - 8 : தொலைதொடர்புக் கோபுரங்களின் நிர்மாணம் 112

# சுருக்கமான சொற்றொடர்கள்

| | |
|---|---|
| A&NS | விமானத்தளங்கள் மற்றும் வான்செலவு சேவைகள் |
| AA | உதவிக் கணக்காளர் |
| AAI | உதவி விமானத்தளப் பரிசோதகர் |
| AA(I) | உள்ளகக் கணக்காய்வு உதவியாளர் |
| AASI | உதவி விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பரிசோதகர் |
| AASL | வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் (இலங்கை) கம்பனி |
| AATO | உதவி வான் போக்குவரத்து உத்தியோகத்தர் |
| AAwE | உதவி வான்தகமைப் பொறியியலாளர் |
| Acct | கணக்காளர் |
| AFM | உதவி நிதி முகாமையாளர் |
| AFTN | வானியல் நிலையான தொலைத்தொடர்பு வலையமைப்பு |
| AGOI | உதவி தளச் செயற்பாட்டுப் பரிசோதகர் |
| AI | விமானத்தளப் பரிசோதகர் |
| AIU | விபத்து விசாரணைப் அலகு |
| AISO | வானியல் தகவல் சேவைகள் உத்தியோகத்தர் |
| AME(BL) | வானூர்திப் பராமரிப்புப் பொறியியலாளர் (அடிப்படை அனுமதிப் பத்திரம்) |
| AML | வானூர்திப் பராமரிப்பு அனுமதிப் பத்திரம் |
| AMO | அங்கீகரிக்கப்பட்ட பராமரிப்பு அமைப்பு |
| AMT | வானூர்திப் பராமரிப்பு தொழிநுட்பக் கலைஞர் |
| ANR | வான்செலவுகள் ஒழுங்குக் கோவை |
| ANS | வான்செலவுகள் சேவைகள் |
| ANSI | வான்செலவுகள் சேவைகள் பரிசோதகர் |
| AOC | வான் செயற்பாட்டாளர் சான்றுப்பத்திரம் |
| AS | வானியல் சேவைகள் |
| ASI | விமானப் போக்குரத்துப் பாதுகாப்புப் பரிசோதகர் |
| ASN | விமானப் போக்குரத்துப் பாதுகாப்பு அறிவித்தல்கள் |
| AT&LA | வான் போக்குவரத்து மற்றும் சட்ட விவகாரங்கள் |
| ATC | விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாடு / கட்டுப்பாட்டாளர் |
| ATO | வான் போக்குவரத்து உத்தியோகத்தர் |

| | |
|---|---|
| Av. Sec | விமானப் போக்குவரத்து பாதுகாப்பு |
| Aw | வான்தகமை |
| AwE | வான்தகமைப் பொறியியலாளர் |
| BIA | பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் |
| CAASL | இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை |
| CAATA | சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பயிற்சிக் கல்லூரி |
| CEO | பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் |
| CIA | பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் |
| COSCAP-SA | செயற்பாட்டுப் பாதுகாப்பு மற்றும் தொடர்ச்சியான வான்தகமையினை விருத்தி செய்வதற்கான தெற்காசிய ஒத்துழைப்பு வேலைத்திட்டம் |
| Cp | கூட்டாண்மை |
| CSI | வானறைப் பாதுகாப்புப் பரிசோதகர் |
| C of R | பதிவுச் சான்றிதழ் |
| DCA | சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களம் |
| D | பணிப்பாளர் |
| DD | பிரதிப் பணிப்பாளர் |
| DGCA | சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் |
| DO | ஆவண உத்தியோகத்தர் |
| DPIG | அபிவிருத்தித் திட்டமிடல் மற்றும் அமுலாக்கற் குழு |
| ELP | உபகரணங்கள் ஏற்றும் திட்டம் |
| EU-SA | ஐரோப்பிய ஒன்றியம்- தெற்காசியா |
| FAL | அனுசரணை |
| FIR | விமானப் பறப்புத் தகவல் வலயம் |
| FOI | விமானப் பறப்புச் செயற்பாட்டுப் பரிசோதகர் |
| FS | விமானப் பறப்புப் பாதுகாப்பு |
| GOI | தளச் செயற்பாட்டுப் பரிசோதகர் |
| GSA | பொது விற்பனைப் பிரதிநிதி |
| HR&OM | மனித வளங்கள் மற்றும் அலுவலக முகாமைத்துவம் |
| HR&OMA | மனித வளங்கள் மற்றும் அலுவலக முகாமைத்துவ உதவியாளர் |
| HR&OMO | மனித வளங்கள் மற்றும் அலுவலக முகாமைத்துவ உத்தியோகத்தர் |
| IA | உள்ளகக் கணக்காய்வு |
| ICAO | சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பு |
| MEL | குறைந்த பட்ச உபகரணப் பட்டியல் |
| NOTAM | விமான சேவையிலுள்ளோருக்கான அறிவித்தல்கள் |
| Ops | செயற்பாடுகள் |
| PA | நேர்முக உதவியாளர்கள் |
| PEL | தனிநபர் அனுமதிப் பத்திரங்கள் வழங்கல் |
| PLO | தனிநபர் அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் உத்தியோகத்தர் |
| PA-AAI | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்- விமான விபத்து விசாரணை |
| PA-AE | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்- விமான சேவைப் பரீட்சைகள் |
| PA-IT | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்- தகவல் தொழிநுட்பம் |
| PA-SP | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்- விஷேட செயற்றிட்டம் |

| | |
|---|---|
| S/CAASL | செயலாளர் / இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை |
| SD | சிரேஷ்ட பணிப்பாளர் |
| SAISO | சிரேஷ்ட வானியல் தகவல் சேவைகள் உத்தியோகத்தர் |
| SARPs | தரம் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடுகள் |
| SARAST | தெற்காசிய பிராந்திய விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புக் குழு |
| SATO | சிரேஷ்ட விமானப் போக்குவரத்து உத்தியோகத்தர் |
| SAwE | சிரேஷ்ட வான்தகமைப் பொறியியலாளர் |
| SFOI | சிரேஷ்ட விமானப் பறப்புச் செயற்பாட்டுப் பரிசோதகர் |
| SLCAP | இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து முறைமைகள் |
| SP | சிரேஷ்ட செயற்றிட்டம் |
| SEP | பாதுகாப்பு மற்றும் அவசர சந்தர்ப்ப செயலொழுங்கு நடைமுறைகள் |
| SMS | பாதுகாப்பு முகாமைத்துவ முறைமை |
| SPLO | சிரேஷ்ட தனிநபர் அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் உத்தியோகத்தர் |
| SSP | அரச பாதுகாப்பு வேலைத்திட்டம் |
| TRCSL | இலங்கை தொலைதொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு |
| USAP | உலகளாவிய பாதுகாப்பு சோதனை வேலைத்திட்டம் |
| USTDA | அமெரிக்க வர்த்தக மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனம் |
| USOAP | உலகளாவிய பாதுகாப்பு மேற்பார்வை சோதனை வேலைத்திட்டம் |

# விபரக்கொத்து

| | | |
|---|---|---|
| பிரதான அலுவலகம் | : | **இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை** |
| | | இல. 04, ஹுணுபிட்டிய வீதி, கொழும்பு-02. |
| | | தொலைபேசி : 94-11-2304632 |
| | | தொலைநகல் : 94-11-2304644 |
| | | மின்னஞ்சல் : info@caa.lk |
| | | இணையத்தளம் : www.caa.lk |
| | | தபால் முகவரி : த.பெ.இல. 535, கொழும்பு |
| | | தபால் தந்தி முகவரி : AIRCIVIL |
| | | AFTN முகவரி : VCCCYAYX |
| கிளை அலுவலகம் | : | **இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை,** |
| | | "ஹில்டொப்", நைகந்த, மினுவாங்கொட வீதி, கட்டுநாயக்க. |
| | | தொலைபேசி : 94-11-2251076 |
| | | தொலைநகல் : 94-11-2251076 |
| | | மின்னஞ்சல் : katcaa@caa.lk |
| உப அலுவலகங்கள் | : | **வான்தகைமை உப அலுவலகம்,** |
| | | இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை, |
| | | பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கொழும்பு கட்டுநாயக்க. |
| | | தொலைபேசி : 94-11-2252269 |
| | | மின்னஞ்சல் : aidbcaa@caa.lk |
| | : | **விமானதகைமை உப அலுவலகம்,** |
| | | இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை, கொழும்பு விமான நிலையம், இரத்மலானை. |
| | | தொலைபேசி : 94-11-2635756 |
| | | மின்னஞ்சல் : aidccaa@caa.lk |
| கணக்காய்வாளர் | : | இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் கணக்காய்வாளர் நாயகம். |
| சட்டத்தரணிகள் | : | இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் சட்டமா அதிபர் |
| வங்கியாளர் | : | இலங்கை வங்கி |
| காப்புறுதியாளர் | : | வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் |
| | | வ/ப செலிங்கோ காப்புறுதிக் கம்பனி |

# தலைவரின் பார்வையில்.....



இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை தோற்றம் பெற்று அதன் ஒன்பதாவது வருடமான 2011 ஆம் ஆண்டில், அதிகாரசபைலும் அதேபோன்று இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்திலும் சில குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் அடையப்பட்டமையினை காணமுடிகின்றது.

2011 இல் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்ட பிரதான செயற்பாடுகளானது, அடிப்படையில் நாட்டில் சர்வதேச நியமங்களின் நடைமுறைப்படுத்தல்களை கவனத்திற் கொண்டதாகக் காணப்பட்டது. 2010 ஆம் ஆண்டு சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பால் மேற்கொள்ளப்பட்ட சர்வதேச நியமங்கள் மற்றும் தேவைப்பாடுகளின் அடைவு மட்டத்தினை ஒரு நாட்டில் மதிப்பிடும் சோதனையின் போது, இலங்கையானது அந் நாட்டில் சர்வதேச நியமங்கள் மற்றும் தேவைப்பாடுகளின் செயற்றிறன் மிக்க அமுலாக்கத்தில் 86.5% எனும் உயர் மதிப்பீட்டுப் பெறுமதியொன்றினை கொண்டுள்ளது என்பது, வெளிப்படுத்தப்பட்டது. இந்த செயற்சாதனையானது, சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பினால் வெளியிடப்பட்ட அறிக்கையின் பிரகாரம் இலங்கையானது தெற்காசிய நாடுகளிடையே முதன்மை நிலையினையும் ஆசியா-பசுபிக் பிராந்தியத்தில் நான்காம் நிலையினையும் அடைவதற்குத் துணைபுரிந்தது. இது ஒரு பாரிய அடைவு எனக் குறிப்பிட்டுக் கொள்ளவேண்டிய தேவையுள்ளது. எவ்வளவிற்கு கொரியா, சிங்கப்பூர், மற்றும் யப்பான் போன்ற நாடுகளில் விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு நியமங்களின் பராமரிப்பு கருத்திற் கொள்ளப்படுகின்றதோ அதே மட்டத்திற்கு இலங்கையால் அடையப்படும் செயற்பாட்டு மட்டமும் விஞ்சி நிற்கக் கூடியதாக உள்ளது. ஏற்கனவே குறைபாடுகளைச் சரிசெய்தல் மற்றும் குறையற்ற போக்குவரத்துப் பாதுகாப்பு முறைமையினை அமுலாக்கும் பொருட்டு, சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பால் ஏறத்தாழ முழுமையாக ஏற்றுக்கொள்ளக் கூடிய சீர்செய்யும் செயற்பாட்டுத் திட்டமொன்று இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையால் முன்மொழியப்பட்டது.

சிவில் விமானப் போக்குவரத்தின் கௌரவ அமைச்சர் அவர்களால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையொன்றினூடாக 2010 இன் 14 ஆம் இலக்க புதிய சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டமானது 04 பெப்ரவரி 2011 இலிருந்து அமுலாக்கத்திற்கு வந்தது. மேலே கூறப்பட்ட செய்முறை தொடர்பில் அனைத்து வேண்டிய செயற்பாடுகளையும் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது வெற்றிகரமாக நிறைவுறுத்தியுள்ளது மட்டுமல்லாது புதிய சட்டத்தின் ஏனைய தொடர்புபட்ட ஏற்பாடுகளையும் தற்போது முன்னெடுப்பதற்கு செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. குறித்த சட்ட ஏற்பாடுகளில் அடையாளம் காணப்பட்டவாறு குறிப்பிட்ட வானியல் சேவைகளை வழங்குவதற்கு நியதிச் சட்ட சேவை வழங்குனரொருவரை நியமிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதுடன், இச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஏனைய சேவை வழங்குனர்களை நியமித்தல் தொடர்பான செய்முறையை நிறைவு செய்வதற்கு படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கு மேலாக, புதிய ஒழுங்குவிதிகள் தேவைப்படும் பகுதிகள் ஏற்கனவே அடையாளங்காணப்பட்டுள்ளதுடன், ஆரம்பகட்டப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுவருகின்றன.

மேலும் வானூர்தியொன்றினால் மேற்கொள்ளப்படும் நபர், பொதிகள், மற்றும் பொருட்களின் சர்வதேச காவுகை மீதான பொறுப்பினை நியதிப்படுத்தும் மொன்றியல் உடன்படிக்கையைச் சரிசெய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மேலும், இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது மத்தளவில் நிர்மாணிக்கப்படும் இரண்டாவது சர்வதேச விமான நிலையம் தொடர்பில் நியதிச்சட்ட விடயங்களை ஆரம்பித்துள்ளது. மத்தள விமான நிலையத்திற்கான பிரதான திட்ட வரைபு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் சிவில் விமானப் போக்குவரத்தின் எதிர்கால எதிர்பார்ப்பானது ஒரு சாதகமான திசையில், மலர்ந்துள்ள சமாதான சூழலுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக இலங்கை போன்ற தீவு நாடொன்றில் சுற்றுலாத்துறை மற்றும் விமானப் போக்குவரத்துத் துறை என்பன ஒன்றிலொன்று தங்கியுள்ளவை. 2011 இல் சுற்றுலாத்துறையானது, அதன் உத்வேக வளர்ச்சியில் வெற்றிகரமாக 857,975 சுற்றுலாப் பயணிகளின் நகர்வினைக் கண்டுள்ளது. இதனை நோக்குகையில் குறித்த கைத்தொழிலானது இந்தச் சாதகமான போக்கின் பிரதிபலிப்பிற்கு அதன் இலக்குகளை விரைவாகத் தீர்மானித்துக்கொள்ள முடியும். சிறிலங்கன் விமான சேவையின் கடல் விமானச் செயற்பாடானது இதன் வெற்றிகரத்தன்மையினை நிரூபித்துள்ளதுடன், மேலும் பல கடல் விமானங்கள் அவர்களது விமான சேவையில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளன. 2011 காலப்பகுதியில் அதிகாரசபை 15 நீர் விமானத்தளங்களின் செயற்பாட்டிற்கான அங்கீகாரங்களை வழங்கியுள்ளது.

பாதுகாப்பினைக் கருத்திற் கொண்டு உள்நாட்டு சிவில் வானூர்திகளின் மீது விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் 2011 இல் அதிகாரசபையால் தளர்த்தப்பட்டுள்ளதுடன், உள்நாட்டு விமானப் போக்குவரத்துத் துறையினரை அவர்களின் செயற்பாடற்ற நிலையிலிருந்து மீண்டெள இடமளித்துள்ளது.

உள்நாட்டு சிவில் விமானப் போக்குவரத்தில் ஈடுபட ஆர்வம் காட்டிவரும் உள்நாட்டு சமூகத்தினரால் சிவில் விமானப் போக்குவரத்திலிருந்த கட்டுப்பாடுகளின் தளர்வுகள் வரவேற்கப்பட்டன. நாட்டிற்கு குறிப்பிடத்தக்க அளவு பொருளாதார மற்றும் சமூக ரீதியில் நன்மை தரக்கூடிய அபிவிருத்தியுடன் கூடியதான ஓய்வுநேரப் பறப்பு மற்றும் வான்வெளிசார் விளையாட்டுக்களான ஹங் ஹிளைடிங், ஹெலி ஸ்கில், பரா ஜம்பிங், பரா செஜ்லிங் போன்ற சுவாரசீகமானவற்றை இது உள்ளடக்குகின்றது.

2011 இல் 6.1 மில்லியன் பிரயாணிகளின் நகர்வு மற்றும் 157 மெற்றிக்தொன் சரக்குகளின் நகர்வுடன் வான் போக்குவரத்துத் துறையின் வளர்ச்சிக்கு சமாதான சூழலின் பிரதிபலனானது நேரடிப் பங்களிப்பினை வழங்கியுள்ளதனை வெளிப்படுத்தியுள்ளது. இது கடந்த ஆண்டுத் தரவுகளுடன் ஒப்பீடு செய்யுமிடத்து ஏறத்தாழ வான் பிரயாணிகள் 17% அதிகரிப்பினையும் வான் சரக்கு 21% அதிகரிப்பினையும் வெளிப்படுத்தியுள்ளது.

தேசிய பொருளாதார விருத்திக்குப் பிரதான மாற்றம் பெறுதல் என்பதனை எதிர்கால நோக்காகக் கொண்டுள்ள சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை, தற்போது கிடைக்கப் பெற்றுள்ள சந்தை வாய்ப்புக்களைப் பயன்படுத்துவதன் மூலம் நாட்டினுடைய பலத்தின் மீது முதலிடுதலினூடாக “மஹிந்த சிந்தனை” யின் மூலம் இலங்கையை ஒரு விமானப் போக்குவரத்தின் கேந்திர நிலையமாக உருவாக்கும் அரசாங்கத்தின் தூர நோக்கினை அடைவதற்கு வழிவகையினை மேற்கொள்ளும் பாரிய பங்கொன்றினைக் கொண்டுள்ளது.

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் வேலைத்திட்டங்கள் பல முக்கிய விடயங்களைக் கொண்டிருந்தது. சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட அதன் ஒரு பங்காளர் தரப்பினரான இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது, சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பால் (ICAO) ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளானது உள்நாட்டில் அமுலாக்கப்படுகின்றனவா மற்றும் வினைத்திறனான வகையில் செயற்படுத்தப்படுகின்றனவா என்பதனை உறுதி செய்து கொள்ளும் பெரும் பொறுப்பினைக் கொண்டுள்ளது.

எனவே விமானப் போக்குவரத்துக் கைத்தொழிலின் தேர்ச்சித்திறனை நிலை நிறுத்தும் பொருட்டு திறன் மற்றும் தகுதிவாய்ந்த தொழிநுட்ப உத்தியோகத்தர்களை இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது வேண்டிநிற்கின்றது. எதிர்காலத் தேவையினை எதிர்கொள்வதற்கு தேவையான ஊழியர்களை ஆட் சேர்க்கும் முகமாக இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது, அதன் நிறுவனக் கட்டமைப்பினை மீள்வடிவமைப்பதற்கான முன்மொழிவொன்றினை ஏற்கனவே அங்கீகரித்துள்ளது.

விமானப் போக்குவரத்துப் பாகாப்பினை உறுதிப்படுத்துவதற்கான மிக முக்கிய அளவு கோல்களில் ஒன்றாகக் கருதப்படுவது யாதெனில், தேவைப்படும் பயிற்சிநெறிகள், பரீட்சைகள், மற்றும் சோதனைகளின் முடிவின் பின்னர் தனிநபர் அனுமதிப் பத்திரம் வழங்கற் செய்முறையின் மூலம் அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொண்ட நபர் எவராவது இக்கட்டான விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு வேலையினை எதிர் கொள்ளுவாராயின் அதனைக்குறிக்கும்.

கடந்த வருடம் முழுவதும், இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் இலக்கினை அடைவதற்கு துணை நிற்கும் மிக முக்கியம் வாய்ந்ததும், பெறுமதியுடைய சொத்துதாகக் காணப்படும் அதன் மனித வளத்தின் அபிவிருத்தி மற்றும் பயிற்சியளித்தல் மீது முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது அதன் ஊழியர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய குடும்ப அங்கத்தவர்களுக்குமென நலன்புரி வசதியொன்றினை வழங்கும் பொருட்டு, மருத்துவக் காப்புறுதித் திட்டமொன்றினைத் தொடர்ந்திருந்தது. அவ்வாறே ரூபா 23.9 மில்லியன் தொகையினை ஊழியர் கடன் வசதியளித்தலின் பொருட்டு செலவு செய்திருந்தது.

மேலும் பெரும்பாலான ஊழியர்களுக்கு குறிப்பிட்ட எண்ணிக்கை கொண்ட உள்நாட்டுப் பயிற்சி நெறிகளை ஒழுங்கு செய்ததற்கு மேலாக, கடல் கடந்த நிகழ்வுகளில் பங்குபற்ற வசதியளிக்கப்பட்டிருந்தது.

சிவில் மற்றும் இராணுவக் கூட்டிணைவு கடந்த வருடம் முழுவதும் அனேகமான அளவிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதுடன், உள்நாட்டு விமானப் போக்குவரத்துக் கைத்தொழில் விருத்திக்கு சிவில் மற்றும் இராணுவக் கட்டமைப்புகளுக்கிடையிலான குறிப்பிடத்தக்கதொரு வளர்ச்சி இக்காலப் பகுதியில் உதவி புரிந்ததாகக் கொள்ளப்படுகின்றது. இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது, சிவில் மற்றும் இராணுவக் கட்டமைப்புக்களை வேலையில் ஒருமித்த ஈடுபடுத்தும் போது குறித்த நாடானது மிக முக்கியமான நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை விளக்கியிருந்ததுடன், அவ்வாறான ஒருமித்த நிலையினைத் தொடர்ந்து தக்க வைப்பதற்கு தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது.

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது விமானப் போக்குவரத்துத் துறையில் பொது மக்களுக்கு, குறிப்பாகப் பாடசாலை மாணவர்களுக்கு அடிப்படை அறிவு புகட்டலை இலக்காகக் கொண்டு 2010 இல் ஆரம்பிக்கப்பட்ட கல்வியூட்டும் திட்டமானது வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. மீள்பார்வைக்குரிய காலப்பகுதியில், நாட்டிலுள்ள ஐந்து கல்வி வலயங்களை உள்ளடக்கி 160 பாடசாலைகளிலிருந்து கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பிரிவு ஏறத்தாழ 2600 மாணவர்கள் இதன் மூலம் நன்மையினை அனுபவித்துள்ளனர். விமானப் போக்குவரத்துத் துறையில் பாடசாலை மாணவர்களின் அறிவுத்திறனை மேம்படுத்தும் நோக்குடன் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையால் காலாண்டுக் கல்விச் சஞ்சிகையான “குவான்ஷர” சஞ்சிகையானது கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்பினை நடாத்தும் 2800 பாடசாலைகளுக்கு இலவசமாக வினியோகிக்கப்பட்டு வருகின்றது. கல்வி சார் நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, கல்விசார் இணையத்தளம் “குவான்ஷர” 2011 பெப்ரவரியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பிரதான வருமான மூலகமாக, கடல் கடந்த நாடுகளிலிருந்து கொள்வனவு செய்யப்படும் விமானப் பயணச் சீட்டுகளின் மீது அறவிடப்படும் மிகைக் கட்டணமானது தொடர்ச்சியாக முன்னிலை வகிக்கின்றது. 2011 இல் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் மொத்த வருமானம் மற்றும் மொத்த செலவீனம் முறையே ரூபா. 744 மில்லியன் மற்றும் ரூபா. 315 மில்லியன்கள் ஆகும். மேலும் கையிலுள்ள சேமிப்பானது கீழ்க் கட்டுமானப் பணிகளின் மேம்பாட்டிற்கு உதவும் வகையிலும், வேறுபட்ட வகையினதான அனுமதிப் பத்திரங்கள் மற்றும் தரங்கள் போன்றன வழங்குவதற்கு விமானிகளுக்கு நியதிச் சட்ட பரீசிலனையை மேற்கொள்ள வசதி கொண்டதான விமானமொன்றினைக் கொள்வனவு செய்யும் நோக்குடனும் பேணப்பட்டு வருகின்றது. மேலும், சேமிப்பிலிடப்பட்ட நிதியானது நியதிச்சட்டத் தொழிற்பாடுகளுக்குத் தேவைப்படும் கீழ்க் கட்டுமான வசதிகளை மேம்படுத்துவதற்காகவும் வழங்கப்படும். இவை மட்டுமன்றி இலங்கையானது 2011 இல் விபத்துக்களோ அல்லது அபாயகர நிகழ்வுகளின் பதிவுகளோ இடம்பெறாத வகையில் விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு மீது சிறந்த பெறுபேறொன்றினை அடைந்துள்ளது எனலாம். இவ்வாறானதொரு சிறந்த பாதுகாப்புப் பதிவுகளை எதிர்வரும் ஆண்டுகளிலும் பேணி வர இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

இலங்கையில் நியதிச் சட்டக் கட்டமைப்பாக இருந்து அதிகாரசபையின் தூரநோக்கு மற்றும் இலக்குகள் அடையப்படுகின்றன என்பதனை உறுதிசெய்யும் அதேநேரம், தொடர்ச்சியான எண்ணங்களின் பரிமாற்றம் மற்றும் கைத்தொழில் தொடர்புகளை மேம்படுத்தல் என்பன சிறந்த வேலைத் தொடர்பொன்றினை பேணுவதற்கு அதிகாரசபைக்குத் துணைபுரிகின்றன எனலாம்.

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம், அதன் அனைத்து மட்டங்களிலுமுள்ள ஊழியர்கள் மற்றும் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து செயற்பாடுகளுக்கும் நன்றியினை நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். மேலும் எல்லா சந்தர்ப்பங்களிலும் எனக்கு வழங்கிய ஒத்துழைப்பு மற்றும் வழிநடத்தலிலும் அக்கறை கொண்டிருக்கும் பணிப்பாளர் சபைக்கும் நான் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். மேலும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் செயலாளர், அனைத்து உத்தியோகத்தர்கள், மற்றும் அவர்கள் எனது அலுவலகத்திற்கு வழங்கிய ஒத்துழைப்பு, கூட்டிணைவு, மற்றும் வழிப்படுத்துகைகளுக்காக அவர்களுக்கும் நன்றிகளைக் கூற விரும்புகின்றேன்.



**எயார் சீப் மார்ஷல் டப்ள்யு.டீ.ஆர்.எம்.ஜே. குணதிலக,**
**தலைவர்.**

தலைவரின் பார்வையில்



# சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் அறிக்கை

## உலகளாவிய நிலை

வான் போக்குவரத்தானது உலகளாவிய வர்த்தகமாகவும் அரசாங்கங்களின் இன்றியமையாத சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியின் உருவாக்கல் காரணியுமாக இருந்து வருகின்றது. இது கட்புலனான எதிர்பார்க்கப்படும் எதிர்கால நீண்ட தூரத்திற்கு பாதுகாப்பாக மக்களை நகர்த்துதலை அடிப்படையிற் கருத்திற் கொள்வதாக இருப்பதுடன், உலகில் நல்லவற்றிற்கான வலிமையொன்றாக இது உருவாகியுள்ளது. விமான போக்குவரத்தானது கண்டுபிடிப்பிற்கான பயணங்களை மேற்கொள்வதற்கும், கூட்டிணைக்கப்பட்ட தொகுதிகளாக, சந்தைகளுக்கு மக்களையும், பொருட்களையும் ஒன்றிணைப்பதற்கும் உதவுகின்றது. இது ஒரு ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட கைத்தொழிற்துறையாக இருப்பதனைக் காணமுடிகின்றது. எனவே விமான போக்குவரத்தின் தொடர்ச்சியாக நிலையானது கைத்தொழில் பங்காளர்கள் மற்றும் அவர்களின் செயற்பாட்டுகளில் மட்டும் தங்கியதாக அல்லாமல் அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகளிலும் தங்கியுள்ளது.

2011 இல், ஏறத்தாழ 2.8 பில்லியன் மக்கள் விமான பறத்தலில் ஈடுபட்டதுடன், 50 மில்லியன் தொன்னுக்கு கிட்டிய பண்டங்கள் 38 மில்லியன் விமான பறத்தல்களினால் காவுகை செய்யப்பட்டது. வர்த்தக அட்டவனைப்படுத்தப்பட்ட பறத்தல்களின் கொள்ளவிற்கான விருத்தி 2011 இல் 3.5% என்கின்ற வீதத்தில் தொடர்ந்தது. இவ் அதிகரிப்பானது உலக உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 3.7% அதிகரிப்புக்கு வழிகாட்டுகிறது. விமான போக்குவரத்து பண்டங்கள் உலக வர்த்தக பண்டமாற்றுகளில் ஒரு சதவீத கொள்ளளவாக இருந்தபோதிலும், இது 35 சதவீத பரிமாற்றப்பட்ட சரக்குகளின் பெறுமதியினை உள்ளடக்கியது. எனவே அதி உயர் பெறுமதி பண்டங்கள் மற்றும் சடுதியான நேர காலாவதி அல்லது நேர பாதிப்பு சரக்குகளை உள்ளடக்கியிருந்தது.

ATAG இனால் வெளியிடப்பட்ட புள்ளிவிபரங்களின் படி 2011 இல் 1600க்கு மேற்பட்ட விமான சேவை செயற்பாட்டாளர்கள், உலகில் 35,000 நகர முடிவிடங்களுக்கு மேற்பட்டவற்றை சேவைக்கு ஈடுபடுத்தி, 3500 விமான நிலையங்களுக்கான உள்நோக்கிய அல்லது வெளிநோக்கிய பறத்தல்கள் மூலம், 23,800 க்கு மேற்பட்ட விமான தொகுதிகளை செயற்பாட்டில் ஈடுபடுத்தியிருந்தனர். இது 190 விமான வழிகாட்டல் சேவை வழங்குனர்களிலும் மேலதிகமானவர்களின் சேவை வழங்கலினால் சிக்கலான ஆகாயபகுதியில் 5 திரிலியன் பயணிகள் கிலோ மீற்றர் மற்றும் சரக்குகளுக்கான 172 பில்லியன் தொன் கிலோமீற்றர் என்கின்ற செயற்திறனையும் காட்டியது. விமான போக்குவரத்தானது நாடொன்றிற்கு உரியதாக இருந்ததால், ஆண்டிற்கான 539 பில்லியன் அமெரிக்க டொலர்களின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) என்கின்ற வடிவில் உலகில் 19வது இடத்திற்கு தரப்படுத்தப்பட்டது.

விமான போக்குவரத்து வழங்குகின்ற தனித்துவமான இணைப்புபானது மில்லியன் வேலைவாய்ப்புகளுக்கு உதவுவதுடன் பொருளாதார நடவடிக்கைகளில் திரில்லியன் டொலர்கள் வருமானத்திற்கு பங்கினை வழங்குகிறது. 56 மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் உலகளாவிய ரீதியில் விமானப் போக்குவரத்து மற்றும் அதனுடன் சார்ந்த உல்லாசப் பிரயாணத் துறையில் வேலை வாய்ப்பினைப் பெற்றுள்ளனர். இதில் 8.36 மில்லியன் மக்கள் நேரடியாக விமானப் போக்குவரத்து துறையில் சேவையாற்றுகின்றனர். விமான போக்குவரத்து துறை மேலதிகமாக 250,000 விமானிகள், 400,000 விமான பராமரிப்பு பொறியியலாளர்கள், மற்றும் 40,000 வான் வழிக் கட்டுப்பாளர்கள் அதிகரிக்கின்ற தேவையினை பூர்த்தி செய்வதற்கு 2030 இற்குள் வேண்டப்படுவார்கள் என எதிர்வு கூறுப்படுகிறது. ICAO ஆனது, நிகழ்ச்சித் திட்டங்களை வடிவமைப்பதன் ஊடாக எதிர்ப்பார்க்கப்பட்ட அதிகரிப்பினை நிலை நிறுத்தலுக்கு மனிதவள கொள்ளளவை மேம்படுத்தும் அறிவுரைகளை நாடுகளுக்கு வழங்குகிறது.

2011 இல், உலக விமானப் பறத்தல்கள் 2 சதவீதம் என்கின்ற $Co_2$ இன் அனைத்து உலக உற்பத்தியினை பிரதிபலிப்பதுடன், 676 மில்லியன் தொன் $Co_2$ இனை சூழலுக்கு வெளியிட்டது. விமான போக்குவரத்தின் $Co_2$ இன் பங்கெடுப்பு 74 சதவீதம் என்கின்றபோது, தெருப் போக்குவரத்துடன் இது ஒப்பிடும் போது, 12 சதவீதமாக இருக்கிறது. விமான போக்குவரத்து மூலமான 80 சதவீதத்திற்கு மேற்பட்ட $Co_2$ வெளிப்பாடு, செயற்பாட்டு ரீதியிலான பிரதியீட்டு செயல்முறை இல்லாத 1500 km க்கு மேலான பிரயாண தூரம் கொண்ட நீண்ட தூர விமான பறத்தல்களின் மூலம் ஏற்படுகிறது.

இத் துறை சக்தியின் பிரதியீட்டு முதலாக Algae, Jatropha மற்றும் Calamine போன்ற உயிரியல் எரிபொருள்களின் தெரிவின் மூலமான சூழல் பாதுகாப்பு அவசியத்திற்கு நேர் பதில் மூலமான பிரதிபலிப்பை காட்டியிருந்தது. விமானப் போக்குவரத்து நெரிசல் அபிவிருத்தியானது வருடத்திற்கு 6 சதவீதமாக காணப்பட்ட போதிலும், புறப்படுகையின் போது ஏறத்தாழ 83dB ஒலி வெளிப்படுகையினை கொண்ட புதிய மற்றும் அரைப்பகுதி விமானங்களின் சந்தை நுழைவின் மூலம் விமான நிலைய சுற்றுவட்டங்களில் ஒலி இரைச்சல் அளவு குறைந்து கொண்டு வருகிறது. 5200 கி.மீ. பிரயாண தூரம் மட்டும் பயணித்த முதல் ஜெட் விமானத்துடன் ஒப்பிடும் போது 100 பயணிகள் கிலோ மீற்றருக்கான 3.5 லீற்றர் எரிபொருள் பயனளிப்புடன் இன்றைய விமானங்கள் 15,200 கி.மீ. இடை நிறுத்தல் அற்ற விமான பறத்தல்களில் ஈடுபட முடியும்.

விமான சேவை வழங்குனர்களின் வருமானத்தின் சராசரி 32% இனை காட்டுகின்ற அதிகரிப்புடன் கூடியதான எரிபொருள் செலவீனம், செயற்பாட்டு செலவுகளில் சடுதியான அதிகரிப்பை ஏற்படுத்துகின்ற போதிலும் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியை காட்டுகின்ற பிரயாண செலவுடன் வான் பயணம் ஒரு போட்டி நிறைந்ததாக உருவாகி வருகின்றது. 2011 இல் விமான சேவைக் கைத்தொழில் துறையானது மிகச் சிறிய மாறுதலுக்குரிய காரணி என்பதனைக் காட்டி, இத்துறையானது 600 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானத்திலிருந்து 0.6 சதவீத இலாப இடைவெளியுடன் 3.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை உலகளவிலான இலாபமாக அடைந்திருந்தது.

விமான போக்குவரத்து நிலைத்திருத்தலில் தற்பாதுகாப்பு ஆனது முதன்மையானதாக தொடர்ந்து காணப்படுகின்றது. 2011 இல் அட்டவணைப்படுத்தப்பட்ட வர்த்தக பறத்தல்களுடன் தொடர்புபட்ட விமான விபத்துகளின் எண்ணிக்கை 126 ஆக இருப்பதுடன், இது மில்லியன் விமான ஏற்றல்களுக்கான உலக விபத்துகள் வீதத்தில் 3.4 இனை காட்டுகிறது. 2004 ஆம் ஆண்டில் இருந்து 2011 வரை பாதுகாப்பான ஆண்டாக குறித்துக்காட்டி, இறப்புகளின் எண்ணிக்கை 414 என்கின்ற மொத்த எண்ணிக்கையுடன் 41.4 சதவீத வீழ்ச்சியினைக் காட்டியது. 2011 இல் துாரபாதை பாதுகாப்பில் ஏற்படுத்தப்பட்ட விருத்தி இவ் வீழ்ச்சிக்கான பிரதான காரணமாக இருந்ததுடன், இவ்வாண்டில் ஒருபாதை பாதுகாப்பு தொடர்பான எந்தவொரு விபத்துகளும் நடைபெறவில்லை.

2005 - 2011 கால இடைவெளிக்கான விபத்து தகவல்களின் உள்ளடக்கத்தை அடிப்படையாக கொண்டு ICAO ஒருபாதை பாதுகாப்பு சம்பந்தமான நிகழ்வுகள், பறத்தல் போதான கட்டுப்பாடு இழப்பு, கடற்பரப்பிற்குள்ளான கட்டுப்படுத்தப்பட்ட பறத்தல் ஆகிய மூன்று உயர் - அபாய விபத்து நிகழ்வுகளின் காரணியாக அடையாளம் கண்டுள்ளதுடன், இவை மேலும் விபத்து வீதத்தினை குறைப்பதற்கு அதிகரித்த முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்பட்டது.

ICAO இன் பூகோளவியல் தற்பாதுகாப்பு மேற்பார்வை சோதனை நிகழ்ச்சி மற்றும் பூகோளவியல் பாதுகாப்பு சோதனை நிகழ்ச்சித் திட்டம் ஆகியவை விமான போக்குவரத்து பாதுகாப்பு, தற்பாதுகாப்பு மற்றும் ஒழுங்கமைப்பை உலகளாவிய ரீதியில் பலமளிக்கும் நோக்குடன் ICAO இன் பாதுகாப்பு மற்றும் தற்காப்பு சம்பந்தமான SARPs இன் அமைப்பு ரீதியான அமுல்படுத்தலினை விருத்தி செய்யும் நோக்குடன் தொடர்கிறது. 2011 இன் முடிவின் பிரகாரம் 9 சதவீத விமான பறத்தல்களை கொண்டிருக்கின்ற 95 சதவீத உறுப்பு நாடுகளுக்கான USOAP சோதனை பகுப்பாய்வு நிறைவு பெற்றுள்ளது. சோதனை முடிவின் பிரகாரம், ICAO சர்வதேச சிவில் விமான போக்குவரத்தில் அதன் சிறப்பான உயர்வினை வெளிப்படுத்துகின்ற பதினொரு (11) உறுப்பு நாடுகள் மீதான சிறப்பான தற்பாதுகாப்பு கவனத்தினைத் திருப்பியுள்ளது.

மிகைப்படுத்தப்பட்ட விமானப் போக்குவரத்து தற்பாதுகாப்பானது உலக தரத்தினை பயன்மிக்க அமுல்படுத்தலுக்கு கைத்தொழிற்துறை இணைவாளர்களால் மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் பலனாக அடையப்பெற்றதாகும். ICAO அதன் USAP மற்றும் USOAP சோதனை நிகழ்ச்சியில் அதன் அரசாங்களுடன் நெருங்கிய உறவினை கொண்டிருக்கிறது. தற்காலத்தில் IOSA சோதனை தரத்தின் ஊடான, விமான சேவை வழங்குனராக (செயற்பாட்டாளர்க களுடனான) IATA இன் வேலைத்திட்டம், IATA, ICAO, US இன் போக்குவரத்து திணைக்களம் மற்றும் EU மத்தியிலான உடன்படிக்கை பாதுகாப்பு தகவல்களை பங்கிடுவதற்காக உள்வாங்கப்பட்டுள்ளதுடன், சிறந்த நடைமுறைகளின் அமுல்படுத்துபவர்களுக்கான விரிவாக்கத்தினை உலக ரீதியில் மேற்கொள்ள சர்வதேச தரத்தின் இணக்கமின்மை காரணமாக, EU ஆகாய பரப்பினுள் இயக்கப்படுகின்ற முந்நூறு விமான சேவை வழங்குனர்களை தடை செய்திருந்தது.

அதிகரிக்கும் விமான நெரிசல்களுடன் உலக ஆகாயப் பரப்பில் அரைப்பங்கானது நிரந்தரமாகவே சிவில் விமானப் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டதுடன், மீதியானது இராணுவத்தினால் கட்டுப்படுத்தப்படுகிறது. மேலதிக ஆகாய பரப்பின் கொள்ளளவிற்கான அதிகரிக்கும் அவசியத்தின் நோக்கத்துடன் ICAO நிலையான தருவித்தலுக்கு பதிலாக, தேவை அடிப்படை பிரகாரம் விமானப் பரப்பினை வழங்குகின்ற, மாறுதல் ஆகாய பரப்பு முகாமைத்துவத்தினை அமுல்படுத்துமாறு நாடுகளை வேண்டுகின்றது.

## பிராந்திய நிலை

2011 இல், ஆசியா பிராந்தியத்தில் உலகில் அனைத்து பிராந்தியத்தின் பிரதிபலிப்புகளிலும் உயர் சதவீத அதிகரிப்பான 7.8 சதவீதம் சராசரி ஆண்டு விமான நெரிசலில் அதிகரிப்பு பதிவாகியுள்ளது. இதன் பெறுபேறாக, ஆசியாவின் மொத்த பிரயாண அளவு 2011 இல் வட அமெரிக்காவுக்கு அடுத்ததாக 2[வது] இடத்திற்கு நிரல்படுத்தப்பட்டது.

2011 காலப்பகுதியில், வர்த்தக செயற்பாடுகளின் போது ஆசிய பிராந்தியத்திலுள்ள விமான சேவைச் செயற்பாட்டாளர்கள் 22 விமான விபத்துக்களை சந்தித்ததுடன், அவற்றில் மூன்று விபத்துகள் 98 உயிர் இழப்புகளை கொண்டிருந்தது.

இப்பிராந்தியத்திலுள்ள பெரும்பாலான அரசாங்கங்கள், திருப்புமுனையுடைய பொருளாதாரச் செய்முறை ஒன்றாக எதிர்பார்த்து விமானப் போக்குவரத்தினை தந்திரோபாயமாகப் பயன்படுத்தியுள்ளது. அதன் பிரகாரமாக, அந்த நாடுகள் விமானப் போக்குவரத்துத் துறையினை கட்டுப்படுத்தப்பட்ட பொருளாதார ஒழுங்கமைப்பு மற்றும் தளர்த்தப்பட்ட வரி கொள்கை என்பவற்றிலிருந்து வேறுபடுத்தி பார்த்தது. இப் பிராந்தியத்தில் இத்துறை அதிக கவனத்தை செலுத்திக் கொண்டிருக்கின்ற மூன்று பிரதான வெளிப்பாடுகளாக கட்டமைப்பு, முதலீட்டு கொள்கைகள், மற்றும் பிரயாணம் மற்றும் எரிபொருள் மீதான வரிவிதிப்பு என்பவை அமைந்திருந்தது.

பொது தனியார் பங்குபற்றல் வடிவமைப்பு (PPP) அறிமுகப்படுத்தலுக்கு கவனத்தினை திருப்புகின்ற அதிக நாடுகளுடன் விமானநிலைய கட்டமைப்பு அபிவிருத்தியில் ஆசிய பிராந்தியம் சிறந்த செயற்பாட்டினை காட்டியது. நடுநிலை சேர்க்கை மூலம் பிரதியிடப்படுகின்ற வெளிநாட்டு விமான சேவைச் செயற்பாட்டாளர்களுடனான பரந்த அமைப்பினை ஏற்படுத்தலுக்கு அனுமதியளிக்கின்ற உள்ளக விமான சேவையில் வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்காக அதன் தேவைகளில் இப்பிராந்தியம் அதிக பொறுப்பாளியாக இருந்தது.

மிக சரியான பாதைகளின் தெரிவு, விமானப் போக்குவரத்து பிரயாண முகாமைத்துவம், புதிய மற்றும் அதிக பயன்மிக்க எரிபொருள் பாவனை, விமானங்களுக்கான முதலீடு, பண்டங்கள் கையாளுகைகளுக்கான தாள்கள், மற்றும் பயன்பாடற்ற இலத்திரனியல் பண்டமாற்று பிரயோக உத்தி என்பவை இபிராந்தியத்தில் முதன்மையானவையாக இருந்திருந்தது. விமான பண்டங்களில் பயன்மிக்க மற்றும் போட்டித்தன்மையினை மேம்படுத்துவதற்காக இலத்திரனியல் (E-Freight) பண்டமாற்றம் மிக முக்கியதுவம் வாய்ந்த திட்டமாக இருந்ததுடன், இவ் பிராந்தியம் இதன் அமுலாக்கத்தில் அதிக கவனத்தினை வெளிக்காட்டியது.

2011 இல் ஆசியா - பசுபிக் விமான சேவையாளர்கள் அதிக உண்மை இலாபத்தை அடைகின்ற விமான செயற்பாட்டாளர்களின் சாதனையுடன் 5.3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் கொண்டிருத்தார்கள்.

அயல் நாடான இந்தியாவின் விமானக் கைத்தொழில் துறையாக உலக சராசரியின் இருமடங்கு அதிகரிப்பை காட்டுகின்றதுடன், இது உள்நாட்டில் ஏறத்தாழ 12 சதவீதத்தினையும் 8-9 சதவீதத்தினை சர்வதேச ரீதியிலும் காட்டியது. வருடாந்தம் மூன்று மில்லியன் தொன் சரக்குகளுடன் Hong Kong உலகின் முதன்மை மையமாக சர்வதேச சரக்குகள் பரிமாற்றத்தில் மாறியதுடன், அதன் தேசிய விமான செயற்பாட்டாளரான Cathay Pacific பண்டங்கள் தொன் - கிலோமீற்றர் என்ற பதத்தில் உலகில் மூன்றாவது இடத்திற்கு நிரல்படுத்தப்பட்டது.

## உள்ளக நிலை

2009 இல் சமாதானத்திற்கான மீள் வருகையின் பின், இலங்கை அதன் விமானப் போக்குவரத்து துறையினை மீள் புனரமைப்புச் செய்தது. 2011 இல் குறிப்பிடத்தக்க அதிகரிப்பானது உணரப்பட்டதுடன், அது 15% (6-2 மில்லியன்), 20% (158 ஆயிரம் மெற்றிக் தொன்கள்) மற்றும் 27% (44 ஆயிரம்) அதிகரிப்பு வீதமானது பிரயாணிகள், சரக்குகள் மற்றும் விமான நுகர்வுகள் என்பன 2010 இற்கான பொருத்தமான தரவுகளின் ஒப்பிடுகையுடன் காட்டப்பட்டது. 3.1 மில்லியன் இறங்கு பிரயாணிகளில், ஏறத்தாழ 24% (711 ஆயிரம்) பிரயாணிகள் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தினூடாக பிரயாண மாற்றுகைக்கு உட்பட்டார்கள். இது BIA கேந்திர நிலையம் என்கின்ற நிலையை நோக்கி செல்கின்றது என்பதை எடுத்து காட்டுகிறது. 98% அதன் இடைத்தங்கல் பிரயாணிகள் ஸ்ரீலங்கன் விமான சேவைச் செயற்பாட்டாளர்களினால் இலங்கைக்குள் கொண்டுவரப்பட்டார்கள் என்பது பயனுள்ள தகலாக இருக்கிறது.

2011 இல், உள்ளூர் விமான சேவைகளிற்காக விமானங்களில் பயணித்த பயணிகளின் எண்ணிக்கை சிறப்பான அதிகரிப்பை காட்டவில்லை. இருந்த போதிலும் நாட்டிற்கு உள்ளான ஹெலிகொப்டர் பயணங்களுக்கான தேவை அதிகரித்துக் கொண்டிருந்தது. இவை வியாபாரிகளாலும் மற்றும் சுற்றுலா பயணிகளாலும் பயன்படுத்தப்பட்டது. மீள்பார்வைக்கு

உட்படுத்தப்பட்ட இக்காலப்பகுதியில் துணைநிலைக்காக ஸ்ரீலங்கன் ஏயார் லைன்சினால் செயற்படுத்தப்பட்ட நீரில் தரையிறக்கப்படக்கூடிய விமான சேவைகள் மற்றும் வாயு பலூன்கள் மூலமான விமான பிரயாணங்கள் பிரசித்தம் பெற்றதாக மாறியது.

தேசிய பொருளாதார அபிவிருத்தியினை விரைவுபடுத்துதலின் பொருட்டு, உருவாக்கப்பட வேண்டிய ஐந்து பிரதான மையங்களில் ஒன்றாக விமானப் போக்குவரத்தினை அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது. அதன் பிரகாரம், CAA ஒரு ஒழுங்குபடுத்துனராக இருந்து விமானப் போக்குவரத்துத் துறையின் நாட்டில் பாதுகாப்பு, தற்காப்பு, வினைத்திறன், மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் போன்றவற்றை உறுதிசெய்வதன் மூலம் விமானப் போக்குவரத்து மையமொன்றை உருவாக்குவதற்காக இயலுமைமிக்க சூழலொன்றினை உருவாக்கிக் கொள்வதில் பெரும் பங்கொன்றினை வகுத்து வருகின்றது. இதன் பிரகாரம் மேலும், CAA ஆனது நாட்டில் நிறைவானதொரு விமானப் போக்குவரத்தின் உருவாக்கலுக்கான அடித்தளமிடும் பொருட்டு, நாட்டிற்காகவும் அதன் சார்பாகவும் செயற்பட்டு தேச பாதுகாப்பு கண்காணித்தற் கொள்ளளவினை பலப்படுத்துவதற்கு தொடர்புடைய அரச நிறுவனங்கள் மற்றும் கைத்தொழில் பங்காளர்களுடன் ஒருங்கிணைந்து அளவீடுகளின் தொடருரொன்றினை மேற்கொள்ளவேண்டியிருந்தது.

இதுவரையில் அமுலாக்கத்திலிருந்த 1950 இன் 15 ஆம் இலக்க வான்செலவுச் சட்டத்தினை பிரதிநிதித்துவம் செய்யும் 2010 இன் 14 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டமானது 2011 பெப்ரவரி 04 முதல் அமுலாக்கம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும் கைத்தொழிலின் தற்போதைய தேவைப்பாடுகளை எதிர்கொள்வதற்கு சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ், புதிய செயற்பாட்டு ஒழுங்குவிதிகளின் கட்டாயப்படுத்தப்பட்ட தொகுதியொன்றினை அறிமுகம் செய்வதற்கு படிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

பணிபுரியும் ஊழியர்ளுக்கு அதிக இடப்பரப்பு, முன்னேற்றம் மிக்க வசதிகள் மற்றும் சேவைகளை வழங்கிக் கொள்ளும் வகையிலும், CAA இன் வாடிக்கையாளரின் மனங்களில் கவர்ச்சிமிக்க தோற்றமொன்றினை உருவாக்கிக் கொள்ளக் கூடியதான சிறந்ததொரு வெளித்தோற்றத்தினை கொடுத்துக் கொள்ளும் இலக்குடனும் CAA ஆனது, இல 04, ஹுணுப்பிட்டி வீதி, கொழும்பு 02 எனும் முகவரியிலுள்ள சிறப்பான கட்டிடமொன்றிற்கு இடமாற்றம் செய்யப்பட்டது. மைக்ரோ சொப்ற் பரிமாற்றத்தின் உதவியுடன் சிறந்ததொரு தொலைத்தொடர்பு வலையமைப்பொன்று CAAக்கு வழங்கப்பட்டது. செயற்பாட்டு உத்தியோகத்தர்களுக்கு மேலுள்ள தரத்திலான அனைத்து ஊழியர்களுக்கும், உள்ளக பிரதேச வலையமைப்பு வசதியுடன் கூடிய கணனிகள் வழங்கப்பட்டன.

இதற்கிடையில், CAA தலைமை அலுவலகத்தினை நிர்மானிப்பதற்கான பொருத்தமான நிலப்பரப்பொன்றினை அடையாளம் காணுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் கடந்த சில ஆண்டுகள் மீதான வருமான வெளியேற்றங்களால் இது தடைப்படுத்தப்பட்டது.

பாதுகாப்பு மற்றும் தற்காப்பு மேற்பார்வைத் தொழிற்பாடுகளின் செயற்றிறன் மிக்க கடமை நிறைவேற்றலுக்கு நேரடியான பொறுப்புடமையைக் கொண்ட, மிக முக்கியமான தொழினுட்ப பதவி நிலைகளுக்கான ஊழியரிடல், CAA ஆல் முகங்கொடுத்த மிக பிரதானதொரு சவாலாக இருந்து வந்தன. தேசிய துறைகளில் வேலைவாய்ப்புக்கான வெளியீடு செய்யப்படும் வழிகாட்டல்களை நிறைவுபடுத்தக் கூடிய போதுமானதன்மையும் வேண்டப்படும் உள்நாட்டு நபர்களின் போதியளவில் இன்மையுமானது சிவில் விமானப் போக்குவரத்தினை ஒழுங்குபடுத்தும் செயற்பாடுகளில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இதன் தொடர்ச்சியாக, பிரயோகிக்கக் கூடியதான சர்வதேச நியமங்களின் பிரகாரம் கைத்தொழிலின் செயற்றிறனான பாதுகாப்பு மற்றும் தற்காப்பு மேற்பார்வைகளை உள்ளடக்கிய CAA இன் சட்டப்படியான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் கொள்ளளவினை அடைதலின் தேவைக்கு அதிகப்படியான முக்கியத்துவம், நிறை, மற்றும் முன்னுரிமை போன்றவற்றினை CAA கொடுக்க வேண்டியிருந்தது.

2011-2013 காலப்பகுதிக்கான கூட்டாண்மைத் திட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டிருப்பது போல், வேலைத் தந்திரோபாயங்களின் பிரகாரம், கூட்டாண்மை இலக்குகள் மற்றும் கருத்திட்டங்களை அடையும் அதேவேளை, பிரத்தியேக நிபுணத்துவத்திற்காக ஊழியர்களுக்கு தேவைப்படும் பயிற்சிகள் ஒழுங்குபடுத்தப்பட்டன.

2010 ஒக்டோபர் 24 முதல் நவம்பர் 04 வரையான காலப்பகுதியில் இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட பாதுகாப்பு மேற்பார்வை ஆய்வில் ICAO அடையாளம் கண்டிருந்த குறைபாடுகளுக்காக ICAOக்கு சரியாக்கல் செயற்பாட்டுத் திட்டமொன்றினை சமர்ப்பிக்கும்படி CAA பணிக்கப்பட்டிருந்தது. ICAO இன் இறுதி ஆய்வு அறிக்கையில், மொத்த 973 வினாக்களில் இலங்கை திருப்திகரமான பதிலை வழங்காதிருந்த 100 ஆய்வு உடன்படிக்கை வினாக்கள் மீது ICAO 34 ஆய்வுக் கண்டுபிடிப்புகளைச் சமர்ப்பித்திருந்தது.

வானூர்தி விபத்து மற்றும் சம்பவ விசாரணைகளை நடாத்துவதற்கு சுயாதீனமான அமைப்பொன்றினை உருவாக்குதலுடன் தொடர்புபட்ட கண்டுபிடிப்பொன்றுடன் CAA உடன்படவில்லை என்பதுடன், அது தொடர்பாக ICAOக்கும் அறிவிக்கப்பட்டது. ஊழியரிடம் மற்றும் அவர்களது பயிற்சித் தேவைப்பாடுகளுடன் தொடர்புடைய

கண்டுபிடிப்பு ஒன்றிற்கான விடையளிப்புத் தவிர, ICAO ஆல் எஞ்சிய 33 ஆய்வு கண்டுபிடிப்புகள் தொடர்பில் CAA ஆல் வழங்கப்பட்ட எஞ்சிய சீராக்கல் செயன்முறைத் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. CAA ஆனது, ஆய்வு கண்டுபிடிப்புகளை சீர்செய்வதற்கான நீண்டகால தீர்வொன்றினை கண்டறிந்து கொள்ள தந்திரோபாயம் ஒன்றினை அபிவிருத்தி செய்ய வேண்டி உள்ளது.

2011 வருடத்தில் இறுதிக்காலங்களில், ICAO இன் சர்வதேச பாதுகாப்பு மேற்பார்வை ஆய்வுத் திட்டத்தின் கீழ், 2005 இல் ஆரம்பிக்கப்பட்ட ஐந்து வருட சுற்றினை உடைய ஆய்வின் கீழ், அதனால் ஆய்வு செய்யப்பட்ட அனைத்து நாடுகளின் ஆய்வு முடிவுகளுடன் தொடர்புபட்ட தரவுகளினை ICAO வெளியிட்டிருந்தது. இந்த தரவுகளின் பிரகாரம், இலங்கையில் ICAO-SARPs இன் செயற்றிறன் மிக்க அமுலாக்கமானது, உலக சராசரி மட்டத்திற்கு மிக உயர்வு கொண்டதான 87% இற்கும் அதிகப்படியாக இருப்பதாக மதிப்பீடு செய்யப்பட்டது. ICAO ஆல் வெளியீடு செய்யப்பட்ட அனைத்து முடிவுகளின் பிரகாரம், இலங்கையானது தெற்காசியாவில் முதலாம் இடத்திற்கு வரிசைப்படுத்தப்பட்டிருந்ததுடன், ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் (34 நாடுகளுள்) நான்காம் இடத்திலும் சர்வதேச ரீதியில் (177 நாடுகளுள்) 1997 இல் மதிப்பீடொன்றில், ICAO இனால் காட்டப்பட்டிருந்த இலங்கையின் நிலையுடன் ஒப்பிடுகையில் இது ஒரு கவர்ச்சிமிக்க அடைவு ஆகும்.

அடிப்படையில் CAA இன் முதிர்ச்சிமிகு ஊழியர்களின் அடைதல் மட்டத்தின் கிடையளவின் மீது, CAA இன் முறையான கடமைகள் மற்றும் செயற்பாடுகளின் தொடர்ச்சியான செயற்றிறன் மிக்க வெளிப்படுத்தல்கள் மற்றும் ஒன்றிணைக்கப்பட்ட தேசிய பாதுகாப்பு மேற்பார்வை வேலைத்திட்டங்கள் தங்கியிருக்கும். ஒழுங்கமைப்பின் பிரத்தியேக பதநிலைகளில் தகுதிவாய்ந்த ஊழியர்கள் இருந்தாலன்றி, CAA ஆனது தனது தொழிற்பாடுகளை செயற்றிறன் மிக்க வகையில் முன்னெடுக்க முடியாது. தற்போதைய மற்றும் வெளிப்படுத்தப்படுகின்ற பன்முகப்படுத்தப்பட்ட சவால்களின் கீழ், அடையப்பட்ட பெறுபேற்றை நிலை நிறுத்திக் கொள்ளக் கூடிய இந்த விடயத்தை முன்னெடுப்பதற்கான உடனடி மற்றும் நீண்டகாலத் தீர்வொன்றினை அடைந்துகொள்ள CAA இன் கரங்களில் இந்த பாரிய சவால் காணப்படுகின்றது.

இவ் அறிக்கையின் பின்வரும் பக்கங்கள் மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் CAA இன் அடைதல்களை சுருக்கமாக வெளிப்படுத்துகின்றது.

கௌரவ சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர், அவரது செயலாளர், சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் அனைத்து ஊழியர்கள், தலைவர் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைப் பணிப்பாளர்கள் என்போருக்கு இவ் அலுவலகத்திற்கு பணிக்கப்பட்ட கடமைகளை மேற்கொள்வதற்காக, தொடர்ச்சியான ஆதரவினையும், உற்சாகத்தினையும், கூட்டிணைவினையும் வழங்கியதற்காக நான் இச்சந்தர்ப்பத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். அதே நேரத்தில் பின்வரும் அத்தியாயங்களில் சுருக்கப்பட்டுள்ள பெறுபேறுகளை அடைவதற்கு அவர்களது பங்களிப்பினை வழங்கியதற்காக CAA இன் அனைத்து ஊழியர்களுக்கும் நன்றியை தெரிவிக்க விரும்புகின்றேன்.



எச்.எம்.சீ.நிமல்சிறி

**சிவில் விமான போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்.**

# பக்கத்தோற்றம்

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது 2002 இன் 34 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் 27 டிசம்பர் 2002 இல் தாபிக்கப்பட்டதுடன், இது இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசின் அரசியல் யாப்பின் 154 வது வாசகத்திற்கமைய கணக்குகளின் கணக்காய்வு நோக்கங்களுக்காக நியதிச் சட்ட நிறுவனமாகக் கருதப்படுகின்றது.

சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பால் (ICAO) ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச நியமங்கள் மற்றும் முன்மொழியப்பட்ட பரிந்துரைகளுக்கிணங்கிய வகையிலும், 2010 இன் 14 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கிய வகையிலும், சிவில் விமானப் போக்குவரத்தில் பாதுகாப்பு, அதன் செயற்றிறன், மற்றும் அது சார்ந்த நியதிச்சட்ட விடயங்களை மேம்படுத்துதல் மற்றும் இலங்கைப் பிரஜைகளின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தி, அதன் தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு பிரதான பங்காளியாக சிவில் விமானப் போக்குவரத்துத் துறையினை வழிப்படுத்தல் என்பன இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பிரதான தொழிற்பாடுகளாக அமைகின்றன.

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை எட்டு (08) உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. அவர்களில் ஐவர் (05) சிவில் விமானப் போக்குவரத்துத் துறைக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரால் நியமனம் பெறுகின்றனர். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், நிதித் துறைக்குப் பொறுப்பான அமைச்சரின் பிரதிநிதியொருவர், மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகம் என்போர் பதவிவழி நியமனம் பெற்றோராக இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையில் சேவையாற்றுகின்றனர். நியமனம் பெற்ற உறுப்பினரது உத்தியோக பூர்வ பதவிக் காலமானது நியமனம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று வருடங்களாகும். அதிகாரசபையானது தற்போது சிவில் விமானப் போக்குவரத்துத் துறைக்குப் பொறுப்பாகவுள்ள சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சரின் வழிகாட்டல் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் தொழிற்படுவதாக அமையும்.

## இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் உறுப்பினர்கள்

அமைச்சரினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்

எயார் சீவ் மார்ஷல் டப்ள்யூ.டி.ஆர்.எம்.ஜே. குணதிலக (தலைவர்)

திரு. ஜே.எம்.எஸ்.டப்ள்யூ. ஜயசுந்தர (உபதலைவர்)

திரு. கே.ஜே.வி.என். ஜெயவர்த்ன (உறுப்பினர்)

திரு. ஷஹி அலீப் (உறுப்பினர்)

திரு. டினேஷ் ஹாலகே (உறுப்பினர்)

பதவி வழி நியமனம் பெற்ற உறுப்பினர்கள்

பாதுகாப்புச் செயலாளர் (திரு. கோட்டாபேய ராஜபக்ஷ)

நிதியமைச்சின் பிரதிநிதி (திரு. டப்ள்யூ. ஐ. திசேரா)

சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் (திரு. எச்.எம்.சீ.நிமல்சிறி)



## தலைவர்
## எயார் சீவ் மார்ஷல் டப்ள்யூ.டி.ஆர்.எம்.ஜே. குணதிலக
## RWP & bar, VSV, USP, ndc, psc

எயார் சீவ் மார்ஷல் டப்ள்யூ.டி.ஆர்.எம்.ஜே. குணதிலக அவர்கள் பம்பலப்பிட்டி புனித பீட்டர்ஸ் கல்லூரியில் தனது கல்விச் செயற்பாடுகளை நிறைவு செய்ததுடன், இவர் அங்கு கல்விச் செயற்பாடுகளிலும், விளையாட்டுத் துறை சார்ந்த செயற்பாடுகளிலும் சிறந்து விளங்கினார். இவர் இலங்கையின் ஐந்தாவது விமானப்படைத் தளபதியான எயார் சீவ் மார்ஷல் ஹரி குணதிலக அவர்களின் சிரேஷ்ட புதல்வனுமாவார்.

எயார் சீவ் மார்ஷல் டப்ள்யூ.டி.ஆர்.எம்.ஜே. குணதிலக அவர்கள், 13 ஜனவரி 1978 இல் மாணவர் படையணி உத்தியோகத்தராக இலங்கை விமானப் படையின் பொதுக் கடமைகள் விமானி கிளையில் தன்னை இணைத்துக் கொண்டார். பறத்தற் பயிற்சிகளின் வெற்றிகரமான நிறைவில், 24 ஆகஸ்ட் 1979 இல் விமானி அலுவலர் என்ற தரத்திற்குத் தரமுயர்த்தப்பட்டார். இவரது 28 வருட கீர்த்திமிக்க சேவைக்காலத்தில், இவர் நிறைவேற்று, செயற்பாட்டு, மற்றும் நிர்வாக நியமனங்களில் பல பதவிகளை வகித்துள்ளார். இவர் நிலையான மற்றும் சுழலும் இறக்கைகளுடைய விமானங்களில் (Fixed and rotary wings) பல மணிநேர பறப்பு மணித்தியாங்களைப் பதிவுகளாகக் கொண்டிருந்தமையால், இலக்கம் 04 ஹெலிகொப்டர் படைப்பிரிவினதும், இலக்கம் 03 கடல் சார் நடவடிக்கைப் பிரிவினதும் கட்டளையிடும் அதிகாரியாகவும் செயற்பட்டு விமானி தரத்திலும் சேவை புரிந்துள்ளார். மேலும், இவர் வடக்கு மற்றும் கிழக்கு வலயங்களில் வலயக் கட்டளை அதிகாரியாக சிரேஷ்ட செயற்பாட்டுக் கட்டளையிடும் நியமனங்களைப் பெற்றுக்கொண்டார்.

இவர் மேலும் கட்டுநாயக்க, அனுராதபுரம், மற்றும் சீனக்குடா விமானப்படைத் தளங்களின் கட்டளையிடும் அதிகாரியாகவும் பதவி வகித்துள்ளார். 11 யூன் 2006 இல் இலங்கை விமானப்படையின் 12வது விமானப்படைத் தளபதியாகப் பொறுப்பேற்கும் வரை அதாவது ஆளணியினரின் பிரதானியாக பதவி வகிப்பதற்கு முன்னர், இவர் விமானப்படையின் ஆளணிச் செயற்பாடுகளின் உதவிப் பிரதானியாக, அதாவது செயற்பாட்டுப் பணிப்பாளராக மிக நிறைவானதொரு கடமையாற்றினார். இவர் 28 பெப்ரவரி 2011 இல் விமானப்படைத் தளபதி பதவியிலிருந்து ஓய்வு பெற்றதுடன், மேலும் அவர் பாதுகாப்பு ஆளணியின் பிரதானி என்ற பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

மனிதாபிமான நடவடிக்கைகளின் வெற்றிகரமான நிறைவுடன், அதாவது 18 மே 2009 இல் குணதிலக அவர்களின் பெறுமதிமிக்க சேவையைக் கௌரவிக்கும் பொருட்டு, இவர் அதி மேதகு ஜனாதிபதி அவர்களால் எயார் சீவ் மார்ஷல் என்ற தரத்திற்கு தரமுயர்த்தப்பட்டார். சேவையில் இருக்கும் போது எயார் சீவ் மார்ஷல் என்ற தரத்திற்கு தரமுயர்வு பெற்ற முதலாவது விமானப்படைத் தளபதி இவர் மட்டுமே என்பதால் இவரது பதவியுயர்வு விஷேடமாகக் குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும்.

05 ஒக்டோபர் 2009 இல் இவர் இவரது இலங்கை விமானப்படைத் தளபதியென்ற அவரது கடமைகளுக்கு மேலதிகமாக அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவராக நியமனம் பெற்றார். மேலும் இங்கு குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கு மேலதிகமாக, பாதுகாப்பு ஆளணியினரின் பிரதானியின் அலுவலகத்தினை மேற்பார்வை செய்யும் கடமைகளும் பொறுப்புகளும் இவர் வசமே வழங்கப்பட்டன.

எயார் சீவ் மார்ஷல் குணதிலக அவர்கள் 1994 இல் அமெரிக்காவிலுள்ள அலாபாமா பல்கலைக்கழகத்தின் வான் கட்டளை மற்றும் ஆளணியினர் கல்லூரியில் பட்டமொன்றினைப் பெற்றுக்கொண்டார் என்பதுடன் மேலும் 2001 இல் பாகிஸ்தானிலுள்ள பெருமதிப்புப் பெற்ற தேசிய பாதுகாப்புக் கல்லூரியிலும் கல்வி கற்றுள்ளார். இவரது தனித்துவமான சேவையை மேன்மைப்படுத்தும் முகமாக இவருக்கு அதி உத்தம சேவைப்பட்டம் வழங்கப்பட்டதுடன், இரண்டு சந்தர்ப்பங்களில் பயங்கரவாதத்திற்கு எதிரான செயற்பாடுகளின் போது துணிகரமாக எதிரியை முகங்கொடுத்தமைக்காக “ரண விக்கிரம பதக்கம்” வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

## உபதலைவர்
## திரு.ஜே.எம்.எஸ்.டப்ள்யூ. ஜயசுந்தர



திரு.ஜே.எம்.எஸ்.டப்ள்யூ.ஜயசுந்தர அவர்கள் அவரது ஆரம்பக் கல்வியினை கண்டி தர்மராஜாக் கல்லூரியில் பெற்றுக் கொண்டார் என்பதுடன், இவர் ஒரு விளையாட்டு வீரருமாவார். இவர் 1971 இல் பொலிஸ் திணைக்களத்தில் தன்னை இணைத்துக் கொண்டதுடன், அவரது 37 வருடகால சேவையின் பின்னர் ஒரு பிரதிப் பொலிஸ் மா அதிபராக ஓய்வு பெற்றார். இவர் அவரது முன்னுதாரணம் மிக்க சேவைக் காலத்தில் பயிற்சியின் நிமிர்த்தம் ஜப்பான், மலேசியா, ஸ்கொட்வான்ட் யாட், அமெரிக்க ஐக்கிய இராச்சியம், மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இருந்தார். மேலும் இவர் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் உதவித் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினராக கடமைகளை ஏற்பதற்கு முன்னர், வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்து சேவைகள் (இலங்கை) கம்பனியில் விஷேட நடவடிக்கைப் பணிப்பாளராக இருந்தார்.

# உறுப்பினர்கள்



## திரு. கோட்டாபேய ராஜபக்ஷ - RWP,RSP

பாதுகாப்பு அமைச்சு (பாதுகாப்புச் செயலாளர் (பதவிவழி உறுப்பினர்)

திரு கோட்டாபேய ராஜபக்ஷ RWP,RSP அவர்கள் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியினைப் பெற்றார். இவர் தியத்தலாவ இராணுவப் பயிற்சி நிலையத்தில் பயிற்சியினை நிறைவு செய்ததுடன், 26 மே 1972 இல் இவர் இலங்கைத் தரைப்படையின் சமிஞ்சைப் பிரிவிற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டார்.

1974 இல் இலங்கைத் தரைப்படையின் சிங்க படைப்பிரிவிற்கு மாற்றம் செய்யப்பட்டார். இவர் மேலும் 1980 களில் ராஜரட்ட ரைபிள் படைப்பிரிவிலும், 1983 களில் கஜபா படைப்பிரிவிலும் இவர் ஒரு லெப்டினற் கேர்ணல் பதவி நிலையில் 1991 இல் தனது முதிர்வு பெறாத ஓய்வுறுத்தற் காலம் வரை பணிபுரிந்தார். திரு ராஜபக்ஷ அவர்களின் முன்னுதாரணம் மிக்க இராணுவ சேவைக் காலத்தில், அமெரிக்க ஐக்கிய இராச்சியத்தில் தரைப்படை வீரருக்கான உயர்நிலைப் பாடநெறி மற்றும் இந்தியாவின் வெலிங்டனிலுள்ள பாதுகாப்பு சேவைகள் ஆளணியினர் கல்லூரி உள்ளடங்கலாக மிக முக்கியம் மிக்க பயிற்சி நெறிகளைத் தொடர்ந்தார்.

திரு ராஜபக்ஷ அவர்கள் வடமராட்சி நடவடிக்கைகளில் கலந்து கொண்ட ஒரு இராணுவவீரராவர். இவர் இந்த நடவடிக்கைகளின் போது கஜபா ரெஜின்மென்ற் முதலாவது படைப்பிரிவிற்குக் கட்டளையிடும் அதிகாரியாகத் தொழிற்பட்டார்.

இவர் 1990 இல் “முப்படைப் பலம்” மற்றும் “ஜயசக்தி” இராணுவ நடவடிக்கைகளின் போது வெற்றிகரமாகத் தனது அதே படைப்பிரிவிற்கு கட்டளையிடும் அதிகாரியாகச் செயற்பட்டார். மேலும் இவர் கொத்தலாவல பாதுகாப்புப் பயிற்சி நிலையத்தின் பிரதிக் கட்டளையதிகாரி எனும் பதவி வகித்ததுடன், இவரது தன்னிகரற்ற சேவையைப் பாராட்டி இவருக்கு “ரண விக்கிரம” மற்றும் “ரணசூர” பதக்கங்கள் அணிவிக்கப்பட்டார்.



## திரு. எச்.எம்.சீ.நிமல்சிறி

சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர். (பதவிவழி உறுப்பினர்)

திரு.எச்.எம்.சீ.நிமல்சிறி அவர்கள், 2002 இல் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை ஏற்படுத்தப்பட்ட காலத்திலிருந்து அதனது பணிப்பாளர் நாயகமாகவும், பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராகவும் பணியாற்றிவருகின்றார். இவர் 1987 இலிருந்து சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களத்தில் செயற்பாட்டுகள் பிரிவின் உதவிப் பணிப்பாளராகக் கடமையாற்றி வந்துள்ளதுடன், இவர் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையில் பலம்மிக்க ஒரு உத்தியோத்தராகச் செயலாற்றி வருகின்றார். திரு. நிமல்சிறி அவர்கள், சிவில் விமானப் போக்குவரத்தின் புதிய சட்டக் கோட்பாட்டு வரைபினைத் தயாரிக்க முன்னோடியாகச் செயற்பட்ட உத்தியோத்தர்களில் ஒருவராவார். இவர் சிவில் விமானப் போக்குவரத்துச் சட்ட வரைபின் அறிமுகத்திற்கும், இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் தோற்றத்திற்கும் வழி சமைத்த முன்னைய சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களத்தின் மறுசீரமைப்பினை அறிமுகப்படுத்தினார்.

இவர் வான் போக்குவரத்து, வான் போக்குவரத்துப் பாதுகாப்பு, வான்செலவு சேவைகள், பாதுகாப்புச் சோதனை, மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைகள் சம்மந்தமான பலதரப்பட்ட பயிற்சி நெறிகளில் கலந்து கொண்டுள்ளதுடன், சிவில் விமானப் போக்குவரத்துச் சம்மந்தமான பரந்தளவான அறிவு மற்றும் அனுபவத்தைக் கொண்டுள்ளார். இவர் தற்போதைய இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை மற்றும் முன்னைய சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களம் என்பனவற்றைப் பிரதிநிதித்துவம் செய்து வெளிநாடுகளுடன் இருதரப்பு வான் சேவைகள் கலந்துரையாடல்களில் பங்குகொண்டுள்ளதுடன், சிவில் விமானப் போக்குவரத்துத் தொடர்பான வேறுபட்ட பிராந்திய மற்றும் சர்வதேச மாநாடுகளில் பங்குகொண்டுள்ளார். 2007 இல் இவர் இலங்கை அரசாங்கம் இவருக்கு வழங்கிய விடுமுறையொன்றின் கீழ், மூன்று வருடங்கள் சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பின் கீழ் அமுலாக்கப்பட்டு வரும் COSCAP-SA இன் பிராந்திய நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளராக ICAO இல் இரண்டாந் தர நியமனத்தினைப் பெற்றிருந்தார்.

திரு.நிமல்சிறி அவர்கள், கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து விஞ்ஞானமாணி (B.SC) பெற்றிருந்தார் என்பதுடன், அதே பல்கலைக்கழகத்தில் கணணி விஞ்ஞானத்தில் விஞ்ஞான முதுமாணி (M.SC) பட்டத்தினையும் பெற்றிருந்தார். மேலும் இவர் ரஷ்யா அல்லிறோவிஸ்க் இல் தகைமைமிக்க கற்கை நெறியொன்றைத் தொடர்ந்த பின்னர், பறப்பு செயற்பாட்டு உத்தியோகத்தர் அனுமதிப் பத்திரமொன்றையும் பெற்றுக்கொண்டுள்ளார். மேலும் திரு. நிமல்சிறி அவர்கள், விமானப் போக்குவரத்தினை ஒரு பாடவிதானமாகக் கொண்ட போக்குவரத்து மற்றும் உதவிப் போக்குவரத்து முகாமைத்துவத்தினை விஞ்ஞானமாணி விஷேட பாடமாகக் கொண்ட மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் ஒரு வருகை விரிவுரையாளராகக் கடமையாற்றினார்.

திரு.நிமல்சிறி அவர்கள், ஏசியா மற்றும் பசுபிக் வலயத்திலுள்ள நாடுகளின் வான் செலவு விடயங்களின் திட்டமிடல் மற்றும் அமுலாக்கலுக்கென ICAO இனால் ஒழுங்குபடுத்தப்படும் ஏசியா மற்றும் பசுபிக் வான் செலவு திட்டமிடல் மற்றும் அமுலாக்கற் குழு (APANPIRG) இன் இரண்டாவது தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



## திரு. டப்ள்யூ. ஐ. திசேரா

### நிதியமைச்சின் பிரதிநிதி (பதவிவழி உறுப்பினர்)

திரு. ஐவன் திசேரா அவர்கள், 1982 இல் ஒரு அரச கணக்காளராகத் தனது தொழிலை ஆரம்பித்தார். இவர் 1982 முதல் 1993 வரையான காலப்பகுதியில் பதுளை மாவட்ட செயலகத்தில் ஒரு கணக்காளராகப் பணிபுரிந்தார். பின்னர் 1993 இல் பிரதிப்பணிப்பாளராகத் தரமுயர்வு பெற்ற இவர், தேசிய கணக்குகள் மற்றும் பொதுத் திறைசேரி திணைக்களத்தில் இணைக்கப்பட்டார். தேசிய கணக்குகள் திணைக்களத்தில் இவர் பணியாற்றிய போது, காசு முகாமைத்துவம் மற்றும் வருமானம் போன்ற வேறுபட்ட துறைகளில் பணிபுரியும் சந்தர்ப்பத்தினைக் கொண்டிருந்தார். தேசிய கணக்குகள் திணைக்களத்தில் இவர் பணியாற்றிய காலங்களில் குழுவின் தலைவராக இருந்து அரச நிலையான சொத்து முகாமைத்துவம் மீதான புதிய கைநூல் ஒன்றையும், இலங்கை இராணுவத்தின் நிதி முகாமை மீதான முழுமையான அறிக்கையொன்றினையும் சமர்ப்பித்திருந்தார். 2000 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் திரு திசேரா அவர்கள் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தில் நிதி முகாமைத்துவப் பிரிவின் தலைவராகவும், ஒரு சிரேஷ்ட ஆலோசகராகவும் நியமிக்கப்பட்டார். இவர், 2004 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் உயர் கல்வி அமைச்சில் பட்டப்படிப்புகள் கற்கையின் முன்னேற்ற மற்றும் தர விருத்தியில் (IRQUE) கேள்விப்பத்திர நிபுணர் பதவியினைப் பெற்றுக் கொண்டார். 2004 ஆம் ஆண்டு ஒக்டோபரில் தேசிய கேள்விப்பத்திர முகவர் (NPA) உருவாக்கப்பட்ட போது திரு திசேரா அவர்கள் அம் முகவர் ஸ்தாபனத்தின் கொள்ளளவு, கட்டுமானம், ஆராச்சி, மற்றும் அபிவிருத்திப் பணிப்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திரு திசேரா அவர்கள் அரச கேள்விப்பத்திரத் துறையில் உள்நாட்டு நிபுணர்களை விருத்தி செய்வதற்கு “அரச கேள்விப்பத்திர முறை மற்றும் ஒப்பந்த நிர்வாகம் என்ற தலைப்பில் ஒரு புதிய டிப்ளோமா நிகழ்ச்சியொன்றை அறிமுகஞ் செய்ததுடன், ஆயிரக்கணக்காண அரசதுறை ஊழியர்களைப் பயிற்றுவித்தார். தேசிய கேள்விப்பத்திர முறைமை நிறைவடைந்தவுடன், இச் செயற்பாடுகள் அரச நிதித் திணைக்களத்திற்கு மீண்டும் மாற்றப்பட்டதுடன், திரு திசேரா அவர்கள் கேள்விப் பத்திர முகாமைத்துவத்திற்கு அதற்குப் பொறுப்பான மேலதிக பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டார். 2011 ஆம் ஆண்டு ஜனவரியில் இருந்து நிதித் திட்டமிடல் அமைச்சின் வெளிநாட்டு உதவிகள் மற்றும் பாதீட்டு மேற்பார்வைத் திணைக்களத்தில் மேலதிகப் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு திசேரா அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழதத்தில் ஒரு பொருளியல் பட்டதாரியாக இருப்பதுடன், அவர் அவுஸ்ரேலியா லொவோங்கோங் பல்கலைக்கழகத்திலிருந்து பொருளியலில் வர்த்தகம் எனும் முதுமாணிப் பட்டமொன்றையும் பெற்றுள்ளார். இவர் பொது நிதி மற்றும் அபிவிருத்தி நிதியியல் நிறுவனத்தின் ஆயுட்கால உறுப்பினருமாவார்.

தற்போது இவர் இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் இலங்கைத் தர நிர்ணய நிறுவனம் மற்றும் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை என்பனவற்றின் பணிப்பாளர் சபை உறுப்பினராகப் பணியாற்றுகின்றார்.



## திரு. கே.வி. என். ஜெயவர்த்தன

திரு. கே.வி. என். ஜெயவர்த்தன அவர்கள் 1983 இல் இலங்கை மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் தன்னை ஒரு வழக்கறிஞராக ஈடுபடுத்திக் கொண்டார் என்பதுடன், 1990-1991 கல்வியாண்டில் வான் மற்றும் ஆகாயம் எனும் துறையில் விஷேடத்துவம் கொண்ட பயிற்சி நெறியின் வெற்றிகரமான முடிவில் இலண்டன் பல்கலைக்கழக் கல்லூரியால் இவருக்குப் பொதுச் சட்டத்துறையில் முதுமாணிப்பட்டம் வழங்கப்பட்டது. திரு. ஜெயவர்த்தனா அவர்கள் 1998 ஆம் ஆண்டு முதல் 2005 மே வரையான காலப்பகுதியில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் வான் சட்ட மேற்பார்வை உத்தியோகத்தராகப் பணிபுரிந்து விமானப் போக்குவரத்துச் சட்டம் சம்மந்தமாக பரந்த அறிவினைக் கொண்டுள்ளார். மேலும் திரு. ஜெயவர்த்தன அவர்கள் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை சட்டவாக்க வரைபு மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து சட்டவாக்க வரைபு என்பவற்றைத் தயாரிப்பதில் மிக ஈடுபாடு காட்டியது மட்டுமன்றி சிவில் விமானப் போக்குவரத்து திணைக்களத்தில் ஒரு சட்ட ஆலோசகராகத் தொழிற்பட்டார். மேலும் இவர் இலங்கை சார்பாக பல எண்ணிக்கையான இருநாட்டு விமான சேவை ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கான பேச்சுவார்த்தைகளில் பங்குகொண்டுள்ளதுடன், இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்து இப் பேச்சுகளில் கலந்து கொள்வோருக்கும் சட்ட ஆலோசகராகச் செயற்பட்டுள்ளார்.

மேலும், 1996 இலிருந்து பொதுவுடமை நிறுவனங்களின் மீளமைப்புக் குழுவின் சட்ட ஆலோசகர் குழுவில் ஒருவராகச் செயற்பட்டுள்ளார். திரு. ஜெயவர்த்தனா அவர்கள் 2007இன் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தினை நடைமுறைப்படுத்தலினை விளைவாகக் கொண்ட கம்பனிச் சட்ட மறுசீரமைப்புச் செய்முறையில் 1993 ஆம் ஆண்டு மேயிலிருந்து பங்குகொண்டு வந்துள்ளார். சட்டவாக்கச் செய்முறையில் இவரது குறிப்பிடக் கூடியதான பங்களிப்பினை அடையாளப்படுத்தும் வகையில், இவர் 1998 ஆகஸ்ட் இல் கம்பனிச் சட்ட ஆலோசகர் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். இப் பதவி நிலையில் இவர் இதுவரையிலும் சேவையாற்றி வருகின்றார். இவர் கொழும்பு ஹில்டன் கொட்டேல் கம்பனிக்குச் சொந்தமான வரையறுக்கப்பட்ட கொட்டேல் டெவலப்பர்ஸ் (லங்கா) கம்பனியில் இயக்குனர்களில் ஒருவராகப் பணியாற்றி வருவதுடன், வரையறுக்கப்பட்ட இலங்கை சதோஷ நிறுவனத்தின் ஆரம்பகாலத் தலைவராகவும் மற்றும் அந் நிறுவனத்தின் பணிப்பாளராகவும் இருந்ததுடன், வரையறுக்கப்பட்ட மில்கோ (தனியார்) நிறுவனத்தில் ஒரு பணிப்பாளராகவும் கடமையாற்றினார்.



## திரு. ஷஹி அலிப்

திரு. ஷஹி அலிப் அவர்கள் தம்பதெனிய அபிவிருத்தி நிதியத் தலைவராகவும், ஸ்ராஷன் குழுமத்தின் பணிப்பாளராகவும் பணியாற்றுகின்றார். இதற்கு மேலதிகமாக அம்பாந்தோட்டை அபிவிருத்தி நிதியத்தின் நம்பிக்கை முகாமையாளராகவும் பணியாற்றி வருகின்றார்.



## திரு. தினேஷ் காலஹே

திரு. தினேஷ் காலஹே அவர்கள் தனது ஆரம்பக் கல்வியினை காலி மஹிந்த கல்லூரியில் கற்றிருந்தார். பின்னர் அவர் மொரட்டுவ பல்கலைக்கழகத்திலிருந்து மின்னியல் மற்றும் தொலைதொடர்பு எந்திரவியலில் ஒரு பட்டத்தினைப் B.Sc (Hons) பெற்றுக்கொண்டார். மேலும் இவர் இலங்கை பொறியியல் நிறுவனத்தால் (IESL) பட்டயம் பெற்ற பொறியியலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் தற்போது றுகுணு பல்கலைக்கழகத்தில் MBA பட்டமொன்றிற்காகத் தன்னைத் தயார்நிலைப்படுத்தி வருகின்றார்.

திரு. தினேஷ் காலஹே அவர்கள் 1999 இல் நவீன தொழிநுட்பத்திற்கான ஆதர் சீ கிளார்க் நிறுவனத்தில் ஒரு ஆய்வு எந்திரியாகத் தனது தொழில்சார் நடவடிக்கைகளை ஆரம்பித்தார். பின்னர் ஒரு விஞ்ஞான வைத்திய சேவைப் பொறியியலாளராக வரையறுக்கப்பட்ட ஜெனரல் சேலஸ் கம்பனியில் இணைந்துகொண்டார். இவர் வரையறுக்கப்பட்ட சணடெல் நிறுவனத்தில் ஒரு பொறியியலாளராகத் தொழில் புரியும் போது தரத் தொலைத்தொடர்பில் தனது ஆரம்பப் பயிற்சி நெறிகளையும், வேலை அனுபவங்களையும் பெற்றுக்கொண்டார்.

இவர் 2001 இல் வரையறுக்கப்பட்ட சண்டெல் நிறுவனத்திலிருந்து விலகி, ஒரு பிரதேச முகாமையாளராக சிறிலங்கா டெலிக்கொம் நிறுவனத்தில் இணைந்து கொண்டதுடன், தொடர்ந்து அவர் அங்கு செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு முகாமையாளராக நியமிக்கப்பட்டார். திரு. தினேஷ் காலஹே அவர்கள் 2008 இல் பிரதிப் பொது முகாமையாளராகப் பதவியுயர்வு பெற்றதுடன், தற்போது தென் மாகாணப் பிரதிப் பொது முகாமையாளராகச் சேவையாற்றி வருகின்றார். இவர் றுகுணு பல்கலைக்கழகத்தின் பொறியியற் பீடத்தின் ஒரு வெளிவாரி அங்கத்தவராக இருக்கின்றார். மேலும் இவர் இலங்கை பொறியியல் நிறுவகத்தின் (IESL) இணை அங்கத்தவராகவும் திகழ்கின்றார்.

# இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் ஆளுகையும் பொறுப்புடமையும்

## அதிகாரசபையின் பொறுப்பு

**அதிகாரசபையின் பிரதான பொறுப்புகள், ஆனால் அவற்றுடன் மட்டும் வரையறுக்கப்பட்டதாக அன்றி, பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது.**

» சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் திட்டமிடல்கள் மூலம் அமைச்சர் மற்றும் அரச துறையின் பங்காளர்களின் கருத்துக்கள் சித்தரித்துக் காட்டப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக உரிய தரப்பினருடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளல்.

» சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் கடமைகள் மற்றும் பணிகளை மேற்கொள்ளக் கூடிய தகைமைகள் மற்றும் தேர்ச்சி கொண்டோரைச் சேவைக்குச் சேர்த்துக் கொள்ளல் மற்றும் அவர்களது சம்பளம் உள்ளிட்ட சேவை நிபந்தனைகளைத் தீர்மானித்தல்.

» சிவில் விமான போக்குவரத்துத் துறையின் கொள்கை மற்றும் இலக்குகளைத் தாபித்தல் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் நோக்கங்களை அடைவதற்காக ஒழுங்கமைப்பு செயற்சாதனை மேற்பார்வைகளை மேற்கொள்ளல்.

» உரிய நோக்கினை நிறைவேற்றுவதற்காக சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருக்குப் பொறுப்புக்களை ஒப்படைத்தல்.

» திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் முன்னேற்றங்கள் தொடர்பாக அமைச்சருக்குப் பொறுப்புக்கூறல்.

» உள்ளக நிர்வாக முறைகள் முன்னெடுக்கப்படுவதனை உறுதிப்படுத்தல்.

## நிறுவனக் கட்டமைப்பு

அதிகாரசபையானது கொள்கை சம்மந்தமான விடயங்களைக் கையாள்வதற்கென பரந்த அறிவொன்றைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன், வியாபாரம், சட்டம், மற்றும் விமானப் போக்குவரத்துக் கைத்தொழில் போன்றனவற்றில் பரந்தளவான திறன்கள் மற்றும் அனுபவங்களுடைய அங்கத்தவர்களை தன்னகத்தே கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது. இவர்கள் நியமனம் பெறுமிடத்து, அனைத்து அங்கத்தவர்களும் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கு தங்களது முழுமையான பங்களிப்புடன், செயற்பட வேண்டுமெனவும், அதனது தீர்மானங்கள் அவர்களது ஒருமித்த தன்மையால் பெறப்பட வேண்டுமெனவும், அதிகாரசபைக்கு அப்பால் அங்கத்தவர்களுக்கு எந்தவாறானதொரு ஆழுமையும் இருத்தலாகாது எனவும் வேண்டப்படுகின்றது.

2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் நியதிகளின் பிரகாரம், அமைச்சரவை அமைச்சர்களால் நியமிக்கப்பட்ட சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகமே சட்டத்தால் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராக இருந்து செயற்படுவார். அமைச்சரவை அமைச்சர்களால் தீர்மானிக்கப்பட்ட ஊழியர் விதிகள், நிபந்தனைகளுக்குப் பொறுப்புள்ளவராக இருப்பதுடன், அதிகாரசபையின் தொழிற்பாடுகளின் பொதுவான நிர்வாகத்திற்கு பொறுப்பாக இருப்பதுடன், இலங்கை சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டம் அல்லது ஏனைய எழுதப்பட்ட சட்டங்களின் கீழ் அல்லது அவற்றால் அவருக்கு வழங்கப்பட்ட தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளை முன்னெடுப்பார்.

அதிகாரசபையானது கொள்கைகளை வகுத்துக் கொள்வதனூடாக இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் இலக்குகளை அடைவதற்கென அதிகாரங்களைப் பகிர்ந்தளித்து பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரை வழிப்படுத்துகின்றது.

## அதிகாரசபைக் கூட்டங்கள்

அதிகாரசபையானது சம்பந்தப்பட்ட விடயங்களின் மீது தீவிர கவனம் செலுத்தும் நோக்கில் ஊழியர் குழு, நிதிக்

குழு, திட்டமிடற் குழு, கணக்காய்வுக் குழு, மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் கல்விக் குழு என ஐந்து குழுக்களை ஸ்தாபித்துள்ளது. ஒவ்வொரு குழுவிற்கும் அதிகாரசபையின் இலக்குகளை அடைவதனை நோக்காகக் கொண்டு, நிறுவனத்தின் செய்முறை உருவாக்கத்திற்கு மற்றும் மேற்பார்வை செய்வதற்குமான அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

## ஊழியர் குழு

**ஊழியர் குழுவானது பின்வரும் விடயங்கள் தொடர்பாக அதிகாரசபைக்கு பொறுப்புக் கூறலைக் கொண்டுள்ளது.**

» நிர்வாகக் கட்டமைப்பொன்றினை அல்லது தேவையேற்படின் அதில் மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்பொன்றினை அங்கீகரித்தல்.

» ஊழியர்களது பணிநிலைப்பிரிவு மற்றும் சம்பள அளவுத்திட்டங்களைத் தீர்மானித்தல்.

» தெரிவு செய்தல், ஆட்சேர்த்தல், நியமனம் வழங்குதல், பதவியுயர்த்துதல், பதவியிறக்குதல், ஓய்வுறுத்துதல், மற்றும் சேவை முடிவுறுத்துதல் போன்றன தொடர்பான விடயங்களைக் கையாளல்.

» ஊழியர் ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

» இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் வருடாந்த வேலைத் திட்டத்தினை மேற்பார்வை செய்தல்.

» இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கான நிர்வாக சட்ட திட்டங்கள் மற்றும் செய்முறைகளை அபிவிருத்தி செய்தல்.

» இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை ஊழியர்களுக்கான ஒழுக்காற்றுச் செய்முறைகளை மேற்கொள்ளல்.

» இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் அலுவலகச் செய்முறைகளை மேம்படுத்துதல்.

» இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை ஊழியர்களுக்கான புலமைப்பரிசில்களை வழங்குதல்.

» இலங்கை சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்கள ஊழியர்களுக்கான முன்கூட்டிய ஓய்வுறுத்தல்களுக்கான நஷ்டஈட்டுத் திட்டத்தை விருத்தி செய்தல்.

» இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை ஊழியர்களின் சமூக மற்றும் நலன்புரித் திட்டத்தை மேம்படுத்தல்.

**ஊழியர் குழுவானது இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.**

1. எயார் சீவ் மார்ஷல் டப்ள்யூ.டி.ஆர்.எம்.ஜே. குணதிலக, தலைவர்.
2. திரு.எச்.எம்.சீ.நிமல்சிறி, சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்.
3. திரு.கே.ஜே.வி.என். ஜெயவர்த்ன, உறுப்பினர்.

## நிதிக் குழு

நிதிக் குழுவானது பின்வரும் விடயங்கள் தொடர்பாக அதிகாரசபைக்கு பொறுப்புக் கூறலைக் கொண்டுள்ளது.

» வருடாந்த பாதீட்டுத் திட்டத்தினைத் தயாரித்தல்.

» இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கான நிதிச் சட்டதிட்டங்கள் மற்றும் செய்முறைகளை உருவாக்குதல்.

» உபகரணங்களின் கொள்வனவு, வசதிகள், மற்றும் சேவைகளின் கொள்வனவுகளை மேற்பார்வை செய்தல்.

» இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கான வருமான வழிவகைகளை மேற்பார்வை செய்தல்.

» இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையில் சிக்கன முகாமைத்துவத்தை நடைமுறைப்படுத்துதல்.

**நிதிக் குழுவானது இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.**

1. எயார் சீவ் மார்ஷல் டப்ள்யூ.டி.ஆர்.எம்.ஜே. குணதிலக, தலைவர்.
2. திரு.எச்.எம்.சீ.நிமல்சிறி, சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்.
3. திரு.டப்ள்யூ. ஐ.திசேரா, நிதியமைச்சின் பிரதிநிதி.

## திட்டமிடற் குழு

திட்டமிடற் குழுவானது பின்வரும் விடயங்கள் தொடர்பாக அதிகாரசபைக்கு பொறுப்புக் கூறலைக் கொண்டுள்ளது.

» தேசிய சிவில் விமானப் போக்குவரத்துக் கொள்கையை வகுத்தல்

» தேசிய சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்தித் திட்டமொன்றினை வகுத்தல்

» சிவில் விமானப் போக்குவரத்து சம்பந்தமான அடிப்படை மற்றும் இரண்டாந்தரச் சட்டங்களை மேற்பார்வை செய்வதுடன், தேவையேற்படின் திருத்தங்களை

மேற்கொள்ளல்.

» தேசிய சிவில் விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு திட்டங்களை அமுலாக்கம் செய்தல்.

» தேசிய வான் போக்குவரத்து வசதியளித்தல் செயற்றிட்ட அமுலாக்கலை மேற்பார்வை செய்தல்.

» சிவில் மற்றும் இராணுவ கூட்டிணைவினை மேற்பார்வை செய்தல்.

» வான் சேவைச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல்.

» வானியல் சேவை வழங்குனர்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல்

திட்டமிடற் குழுவானது அதிகாரசபையின் அனைத்து எட்டு உறுப்பினர்களையும் உள்ளடக்கியுள்ளது.

## கணக்காய்வுக் குழு

கணக்காய்வுக் குழுவானது பின்வரும் விடயங்கள் தொடர்பாக அதிகாரசபைக்கு பொறுப்புக் கூறலைக் கொண்டுள்ளது.

» உள்ளகக் கணக்காய்வு அலகு மற்றும் வருடாந்தக் கணக்காய்வுத் திட்டம் என்பவற்றிற்கு பொறுப்புடமையினைத் தீர்மானித்தல்.

» நிறுவனத்தின் அனைத்து செயற்பாடுகளுக்குமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை மதிப்பிட்டு மேற்பார்வை செய்தல்.

» சீரான கால இடைவெளியில் செலவுகளின் வினைத்திறனை மதிப்பீடு செய்தல் மற்றும் வீணான செலவுகளைத் தவிர்த்தல் என்பதான செயற்றிறன் மதிப்பீட்டை மேற்கொள்ளல்.

» வெளியகக் கணக்காய்வாளர்களுடன் தொடர்புகளைப் பேணுவதுடன், கணக்காய்வாளர் நாயகத்தின் முகாமைத்துவ ஆவணங்களைப் பின்பற்றல்.

» நியாயாதிக்க நியதிச் சட்ட விதிமுறைகள் மற்றும் சுற்று நிருபங்கள் பின்பற்றப்படுகின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

» கணக்கியல் நியமங்கள் பின்பற்றப்படுகின்றனவா என்பதனை உறுதி செய்து கொள்ளும் பொருட்டு நிதிக் கூற்றுகளை மீளாய்விற்குட்படுத்தல்.

» பரிகார நடவடிக்கைகளுக்காக உள்ளகக் கணக்காய்வு அறிக்கை, வெளியகக் கணக்காய்வு அறிக்கை மற்றும் முகாமைத்துவ ஆவணங்கள் போன்றனவற்றை மீளாய்வு செய்தல்.

» அரச தொழில் முயற்சிக் குழுவின் பரிந்துரைகளின் வழிப்படுத்தல்களின் அமுலாக்கலை மீளாய்வு செய்தல்

» ஆண்டறிக்கையில் உள்ளடக்குவதற்கு குழுவின் கண்டுபிடிப்புகள் தொடர்பான அறிக்கையினை மீளாய்வு செய்தல்.

» தேவைக்கேற்ப அதிகாரசபையால் கேட்கப்படும் போது அனைத்துக் கணக்காய்வு விடயங்கள் தொடர்பாக அறிக்கையிடல்.

ஊழியர் குழுவானது இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

1. திரு.டப்ள்யூ. ஐ.திசேரா, நிதியமைச்சின் பிரதிநிதி.
2. திரு.ஜே.எம்.எஸ்.டப்ள்யூ.ஜயசுந்தர, உபதலைவர்.
3. திரு.கே.ஜே.வி.என். ஜெயவர்தன, உறுப்பினர்
4. திரு.டினேஷ் ஹாலஹே, உறுப்பினர்
5. திரு.எஸ்.எம். சந்திரபாலா, விமானப் போக்குவரத்து, அமைச்சின் பிரதிநிதி

## சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் கல்விக் குழு (CADEC)

சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் கல்விக் குழுவானது இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பின்வரும் ஊழியர்களை தன்னகத்தே கொண்டதாக, சிவில் விமானப் போக்குவரத்துச் செயற்பாடுகளில் பொதுமக்கள் விழிப்புணர்வை அதிகரிப்பதனை இலக்காகக் கொண்டு விஷேட செயற்திட்டங்களில் திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் அமுலாக்கத்திற்கென ஆகஸ்ட் 2010 இல் ஸ்தாபிக்கப்பட்டது. இக் குழுவானது சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான உத்தியோகத்தரின் தலைமையிலும் சிரேஷ்ட பணிப்பாளரின் வழிகாட்டலிலும் தொழிற்படுகின்றது.

1. திரு. தேவ் கௌசல சமரவீர, உபதலைவர்.
2. திரு.ஜிம்ஹான் தபரேரா, செயலாளர்.
3. திருமதி மஞ்சுளா விக்கிரமநாயக்க, பொருளாளர்.

### உறுப்பினர்கள்

4. திருமதி துலாஞ்சலி மாப்பிற்றியஹே
5. திருமதி சீ.எஸ்.கொடித்துவக்கு
6. திரு. நிலந்த தென்னக்கோன்
7. திரு. ரீ.எம்.வை.பீ.தென்னக்கோன்
8. திருமதி. ஜீ.ஈ.மில்லவிதானாராச்சி
9. திரு.எம்.ஐ.கே.குணவர்த்தன
10. திரு.எஸ்.பி.பீ.வத்தேவல
11. திரு.ஆர்.எல்.தலாஹல்ல

## நிறுவனத்தில் அக்கறை கொண்டோருடனான தொடர்பு

குறிப்பாக இலங்கை சிவில் விமானப் போக்குவரத்தின்

கௌரவ அமைச்சரின் எதிர்பார்ப்புக்களை இனங்கண்டு முன்னிலைப்படுத்துவதற்கு நிறுவனத்தில் அக்கறை கொண்டோர் தொடர்பில் கொண்டுள்ள அதனது பதில் கூறும் பொறுப்பினை அதிகாரசபையானது தெரிந்துகொள்கின்றது.

## அதிகாரசபையினதும் சிரேஷ்ட உறுப்பினர்களதும் பொறுப்பு

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் வினைத்திறன் மிக்க தொழிற்பாடுகளின் பிரதானமாக இருப்பது யாதெனில், நிறைவேற்று உத்தியோகத்தரை பிரதானியாகக் கொண்ட சிரேஷ்ட முகாமைத்துவத்தினதும், அதிகாரசபையினதும் பங்கு வகித்தல் தொடர்பிலுள்ள தெழிவானதொரு வரையறையாகும்.

அதிகாரசபையானது, உயர்மட்ட கொள்கைகள் மற்றும் தந்திரோபாயங்களை வகுத்தல் மற்றும் இலக்குகள் அடையப்படுதலை நோக்காகக் கொண்டதான செய்முறை மேற்பார்வையில் கரிசனை கொண்டிருக்கின்றது. சிரேஷ்ட முகாமைத்துவமானது, அதிகாரசபையால் வகுக்கப்பட்ட உயர்மட்ட கொள்கைகள் மற்றும் தந்திரோபாயங்களின் அமுலாக்கலைக் கருத்திற் கொண்டுள்ளது.

வான் செலவுச் சட்டத்தில் அல்லது வேறு ஏதாவது சட்டத்தால் அல்லது அதன் அடிப்படையில் வகுக்கப்பட்ட ஒழுங்கு முறையின் படி சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகத்தின் குறிப்பிட்ட ஒழுங்கு விதிமுறைக் கடப்பாட்டுக்கான பொறுப்புப் கூறலை அதிகாரசபையானது கொண்டிருக்காது என்பதுடன், அதிகாரசபை அதிலிருந்து விலகியதாகக் காணப்படுகின்றது.

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருக்கான அதிகாரப் பரவலாக்கல் மற்றும் தொழிற்பாடுகளை உறுதிசெய்து, அவரது பங்கு வகித்தலை அதிகாரசபையானது விரிவாகத் தெழிவுபடுத்தியுள்ளது.

## பொறுப்புடமை

அதிகாரசபையின் தந்திரோபாய இலக்குகளை இலக்காகக் கொண்ட தொழிற்பாட்டை மேற்பார்வை செய்யும் நோக்குடன், அதன் மூன்றாண்டு வியாபாரத் திட்டத்தில் வகுக்கப்பட்டுள்ளவாறு அதனது கொள்கைகள், தந்திரோபாய வழிகாட்டல்கள் மற்றும் எதிர்பார்ப்புகள் என்பவற்றிற்கிணங்க, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் செயற்பாடுகள் முகாமைப்படுத்தப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதனை உறுதி செய்யும் நோக்குடன் அதிகாரசபையும் அதனது உப குழுக்களும் தொடர் கூட்டங்களை நடாத்திவருகின்றன.

## ஆர்வ ரீதியான முரண்பாடுகள்

அதிகாரசபையானது ஆர்வலர் பதிவேடொன்றினைப் பராமரித்து வருவதுடன், அதிகாரசபையின் உறுப்பினர்கள் ஆர்வத்துடன் வெளிப்படுத்துவதற்குரிய அவர்களது கடமை பற்றி அறிந்துகொண்டுள்ளனர் என்பதனை உறுதிசெய்து கொள்கின்றது. மேலும் இந்த அணுகுமுறையானது ஊழியர்களுக்காக ஆர்வலர் பதிவேட்டின் முரண்பாடொன்றின் பேணுதலை வெளிப்படுத்துகின்றது.

## உள்ளகக் கணக்காய்வு

பெருமளவிலான அதிகாரசபையின் தொழிற்பாடுகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள போதிலும், நிறுவனக் கட்டுப்பாட்டின் வினைத்திறன் மிக்க முறைமையொன்றினைப் பராமரிப்பதற்கான பொறுப்பு அதிகாரசபையையே சாரும்.

அதிகாரசபையினது முக்கியத்துவம் மிக்க இலக்குகள் அடையப்படுகின்றன என்பதனை உறுதிசெய்து கொள்வதற்கு உருவாக்கிக் கொள்ளப்படும் கொள்கைகள், முறைமைகள், மற்றும் செய்முறைகள் என்பவற்றை உள்ளடக்கியதாக உள்ளகக் கட்டுப்பாடு காணப்படுகின்றது. அதிகாரசபை மற்றும் சிரேஷ்ட முகாமை என்பன இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டவாறு பொறுப்புடமைக் கூற்றில் கையொப்பமிடுவதன் மூலம் தனது பொறுப்புடமையினைத் தெரியப்படுத்தியுள்ளார்கள்.

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் ஒவ்வொரு பகுதிகளிலும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை கண்காணிப்பதற்கான பொறுப்புடமை கொண்டதாக உள்ளகக் கணக்காய்வுப் பகுதியை அதிகாரசபை கொண்டுள்ளது.

உள்ளகக் கணக்காய்வானது சிரேஷ்ட முகாமையின் அழுத்தங்கள் இன்றி சுயாதீனமாகச் செயற்படுவதுடன், அதன் கண்டுபிடிப்புகள் உடன்பட்ட வழிமுறைகளினூடாக நேரடியாக இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரான சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகத்திற்கும் கணக்காய்வுக் குழுவிற்கும் அறிக்கையிடப்படுகின்றது.

## சட்டக் கடப்பாடு

நிறுவனம் அனைத்துச் சட்டப் பிரமாணங்களையும் பின்பற்றுகின்றது என்பதனை உறுதி செய்வதற்கான அதன் பொறுப்புடமையினை அதிகாரசபை வெளிப்படுத்துகின்றது. அதிகாரசபையானது உடன்பாட்டு விடயங்களை முறை ரீதியாக அடையாளங்கண்டு கொள்ள நிகழ்ச்சித்திட்டச் செய்முறையொன்றின் மேம்பாடு மற்றும் செயற்படுத்துகை போன்றனவற்றிற்காக, சிரேஷ்ட முகாமைக்குப் பொறுப்புடமையினைப் பகிர்ந்தளித்துள்ளதுடன், அனைத்து

ஊழியர்களும் அவர்களுடன் குறிப்பாகத் தொடர்புடைய சட்டத் தேவைப்பாடுகள் பற்றிய அறிவினைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்பதையும் உறுதி செய்கின்றது. தனித்தனி விடயங்களாக அதிகாரசபையால் தீர்மானித்துக் கொள்ளும் வகையில் அரசாங்க நிறுவனங்களால் விடப்படும் பொதுவான மற்றும் விஷேடமான சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டிகள் எவ்வளவிற்கு அதிகாரசபையால் அமுலாக்கப்பட வேண்டும் என்பதனை அதிகாரசபையே தீர்மானிக்குமென அதிகாரசபை இணங்கியுள்ளது. எனவே அரசாங்கத்தினால் விடுக்கப்படும் எவ்வாறானதொரு சுற்றறிக்கைகளையும் அதிகாரசபை அவ் வழிகாட்டலின் உள்ளடக்கத்தினைப் பரிசீலனை செய்து, அவ் வழிகாட்டலின் பிரயோகத்தன்மையின் எல்லை மற்றும் அளவுகளைத் தீர்மானித்தாலன்றி, அவை தன்னிச்சையாக இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் முகாமையின் அமுலாக்கலுக்கு உள்ளடங்கமாட்டாது.

## ஒழுக்க விழுமியங்கள்

உருவாக்கப்பட்ட ஒழுக்க விழுமியங்களின் அடிப்படையில், அதிகாரசபையானது சிறந்த கூட்டுத்தாபன ஆழுகைத் தத்துவத்தினை நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒழுக்க விழுமிய நடத்தைகளின் உயரிய நியமங்களை அனைத்து ஊழியர்களும் பின்பற்றுகின்றார்களா என்பதனை ஒரு ஒழுங்குமுறையில் கண்காணித்து வருகின்றது.

ஒழுக்க விழுமிய சிந்தனையில் உள்ளடக்கப்பட்டுள்ள தத்துவங்களுடன் இணங்காதிருப்பவற்றை வெளிக்காட்டக் கூடியதான மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளின் பின்பற்றல் போக்கை கண்காணித்தல், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் அல்லது வேறு ஏதாவது அறிக்கைகள் அல்லது அறிகுறிகள் போன்றனவற்றினூடாக ஒழுக்க விழுமிய நியமங்களுடன் உடன்பாடுகளைக் கண்காணித்தலானது மேற்கொள்ளப்பட்ட வருகின்றது.

சிறந்த கூட்டிணைவான பிரஜைகள் அதிகாரசபையில் ஈடுபாடுகொண்டுள்ளனர், அதாவது பல்வேறுபட்ட சமூகங்களிலுமுள்ள அனைத்துப் பிரஜைகளின் நெறிமுறைகள், ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிமைகள், மற்றும் பொறுப்புகள் போன்றனவற்றுடன் இயைவாக்கமடைந்த மனநிலையொன்றுடன் செயற்படும் வகையிலான அர்ப்பணிப்பொன்றினை மேற்கொள்ளல் மற்றும் அதிகாரசபை முன்னெடுக்கும் கைத்தொழில் மற்றும் அதற்கும் அப்பால் அனைத்து சமூகங்களின் உறுப்பினர் ஒருவராக இருத்தல் என்னும் அறிவுடன் கூடிய அதன் ஊழியர்களை உள்ளடக்கியதாக அதிகாரசபை காணப்படுகின்றது.

# இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

## தூரநோக்கு

தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு முதன்மையானதொரு இயைபியக்க உள்ளாக்கியாக இருத்தல்.

## குறிக்கோள்

தந்திரோபாயத் திட்டமிடல், பயனுறுதிமிக்க ஒழுங்குவிதிகள், இடர் அற்ற பாதுகாப்பானதொரு செயற்பாடு, மற்றும் சர்வதேச நியமங்கள் மற்றும் விதந்துரைக்கப்பட்ட பரிந்துரைகளை உறுதி செய்து கொள்ளும் திறன்மிக்க தேசிய சிவில் விமானப் போக்குவரத்து முறைமைகள் என்பனவற்றினூடாக வசதி ஏற்படுத்திக் கொடுத்தல்.

## குறிக்கோள் வாசகம்

“அனைவருக்கும் ஆபத்தற்ற ஆகாயம்”

## தத்துவம்

“இலங்கையின் வான்பரப்பு, இலங்கையின் எதிர்கால சந்ததியினரின் நல்வாழ்விற்காகவும் முன்னேற்றத்திற்காகவும் ஒரு பொதுச் சொத்தாக முகாமை செய்யப்படல் வேண்டும்”

## இலக்குகள்

» இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையால் உருவாக்கப்பட்ட பாதுகாப்பு விளைவு நோக்கங்கள் அடையப்படல் அல்லது மிகைப்படுத்தப்படல்

» பொருத்தமான விதத்தில் வளமாக்கப்படல்

» தொழில் வல்லுனராக மற்றும் தகுதி வாய்ந்தவராக இருத்தல்

» பரந்தளவான நம்பிக்கை மற்றும் அங்கீகாரத்தைப் பெறல்

» அதன் அடைவு மட்டங்களை நிலைநிறுத்திக் கொள்ளல்

» சிவில் விமானப் போக்குவரத்தின் திட்டமிடல் மற்றும் மேம்பாட்டின் பலம்மிக்க ஒரு அனுசரணையாளராக இருத்தல்

## தந்திரோபாயங்கள்

» நியதிச் சட்டத் தொழிற்பாடுகளின் அமுலாக்கலை முன்னேற்றுதல் மற்றும் அதனுடன் நிலைப்படுத்துதல் அத்துடன் சமூக கடப்பாடுகளை நிறைவு செய்தல்

» மிக முக்கியமான விமானப் போக்குவரத்துப் பிரச்சினைகளுக்கு தீர்வினை அடையாளங்கண்டு அமுலாக்குதல்

» குறிப்பிட்ட கலாச்சார மாற்றத் தூண்டுதல்களை அறிமுகப்படுத்துதல்

» விமானப் போக்குவரத்துக் கைத்தொழிலுடன் கூட்டிணைவுடனும் பங்குபற்றலுடனும் தொழில் புரிதல்

» ஒரு தெளிவான நோக்குடன் தொழிற்படலும், உள்ளார்ந்த மற்றும் வெளியார்ந்தவர்களுடன் வினைத்திறனான வகையில் தொடர்பாடலை மேற்கொள்ளல்

» அனைத்து ஆவணங்கள், மூலங்கள், மற்றும் உள்ளக செய்முறைகளை பயனுறுதி மிக்க வகையிலும் மாறாத தன்மை கொண்டதாகவும் பேணுதல்

## மதிப்பீடுகள்

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை மற்றும் அதன் ஊழியர்கள்

» விமானப் போக்குவரத்தில் பாதுகாப்பிற்கு முக்கியத்துவத்தையும் முன்னிரிமையையும் அளித்து பாதுகாப்புக் கலாச்சாரத்தினை மேம்படுத்த ஈடுபடல்.

» இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை வாடிக்கையாளருக்குச் சேவை வழங்கலை துரிதப்படுத்துதல்

» முன்னெடுக்கப்படும் ஒவ்வொரு விடயத்திலும் “முடியும்” என்ற நடத்தையினைக் கொண்டிருத்தல்

» நம்பகத் தன்மை மற்றும் யதார்த்தத் தன்மை கொண்டிருப்பதனை இலக்காகக் கொள்ளல்

» தொடர்ச்சியான முன்னேற்றப்பணியில் விருப்பங்கொண்டோராகவும், மாற்றத்திற்கு உட்படக் கூடியவராகவும் இருத்தல்

» வெற்றியை அடைவதற்கு ஒன்றாகப் பணியாற்றல்
» திறந்த, நேர்மையுள்ள, வெளிப்படைத் தன்மையுள்ளோராக இருத்தல்
» செய்யப்படும் ஒவ்வொன்றிலும் வினைத்திறனையும் நியதித் தன்மையையும் மேம்படுத்தல்
» குழுவாக வேலைசெய்வதன் மூலம் தனியொருவரை நம்புதல் மற்றும் மதிப்பளித்தல்
» ஒவ்வொருவரின் பங்களிப்பிற்கும் வெகுமதி சேர்த்தல்
» சமூக பொறுப்புடமை மற்றும் கடமையுணர்வு என்பனவற்றை அடையாளங்காணல்
» செய்பவற்றிலிருந்து மகிழ்வடைதல்
» தொழில்சார் அணுகுமுறையில் பங்குகொள்ளல்
» தொழில் மற்றும் வீட்டுச் சூழல்களுக்கிடையில் சமநிலையொன்றைப் பேணல்
» சிவில் விமானப் போக்குவரத்து நிர்வாகக் கட்டமைப்பு (இணைப்பு 1 ஐப் பார்க்கவும்)

## இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் முன்னிலைப்படுத்தப்பட்ட இலக்குகள்

» வர்த்தக விமானப் போக்குவரத்துத் துறையில் இறப்பு நேரக்கூடிய விபத்துக்களைத் தவிர்த்தல்
» சிவில் விமானப் போக்குவரத்துச் செயற்பாடுகளில் கடத்தல் மற்றும் சட்டத்திற்கு முரணான தலையீடுகளைத் தவிர்த்தல்
» பொதுவான விமானப் போக்குவரத்து விபத்துக்கள் ஏற்படலைத் தவிர்த்தல்
» விமான நிலையங்களில் தளத்தில் ஏற்படக்கூடிய இறப்பு நேரக்கூடிய விபத்துக்களைத் தவிர்த்தல்
» பொறியியல் மற்றும் பராமரிப்பு வேலைத்தளங்களில் விபத்துக்களைக் குறைத்தல்
» பறத்தல் நேரங்களில் வர்த்தகப் பறப்புச் சம்பவ வீகிதத்தினை 1:1000 இற்கும் குறைந்த மட்டத்தில் பேணுதல்
» பறத்தல் நேரங்களில் பொது விமானப் போக்குவரத்து பறப்புச் சம்பவ வீகிதத்தினை 1:5000 இற்கும் குறைந்த மட்டத்தில் பேணுதல்
» பறத்தல் பயிற்சிப் பாடசாலைகளில் பறப்புச் சம்பவ வீகிதத்தினை 1:10,000 எனக் குறைத்தல்
» தள உதவுகையுடன் ஈடுபாடுடைய பறப்பு சம்பவ எண்ணிக்கை விகிதத்தினை 1:20,000 பறப்பு மணித்தியாலங்களாகக் குறைத்தல்
» தள உதவுகையுடன் ஈடுபாடுடைய பொது விமானப் போக்குவரத்து பறப்பு சம்பவ எண்ணிக்கை விகிதத்தினை 1:10,000 பறப்புகளாகக் குறைத்தல்
» வான் கட்டுப்பாட்டு சேவைகள் உதவுகையுடன் ஈடுபாடுடைய பறப்பு சம்பவ எண்ணிக்கை விகிதத்தினை 1:50,000 பறப்பாகக் குறைத்தல்
» குறிக்கப்பட்ட நேரத்தில் விமானம் புறப்படுதலில் ஏற்படக்கூடிய தாமதத்தைக் குறைத்தல்
» சராசரி நிலையுடைய மக்களுக்கு வான்வழிப் பயணம் கிடைக்கக்கூடிய வகையில் வழிவகைகளை மேற்கொள்ளல்
» வான்வழிப் பயணத்தில் சேவைத்தரத்தினை அதிகரித்தல்
» பாதுகாப்புத் தேவைகளைக் கருத்திற் கொண்டு, விமானத் தளத்தில் நெரிசலான, விரைவான பயணிகள் செய்முறையைக் குறைத்தல்
» விமானப் போக்குவரத்தில் செயற்பாட்டுச் செலவீனத்தைக் குறைத்து, வீண்விரயத்தினைத் தவிர்த்தல்
» சூழல் மீது விமானப் போக்குவரத்தின் மறைமுக எதிர்மறை விளைவுகளைக் குறைத்தல்

## விளைவுகள்

» சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் நாட்டிற்காக சர்வதேச தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்வதுடன், சர்வதேச நியமங்கள் மற்றும் முன்மொழிவுகளின் அமுலாக்கல் மற்றும் செயலாக்கத்தை நிலைநிறுத்துதல்
» வரையறைகளிலிருந்து விடுதலை பெற்ற இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து முறைமையின் சர்வதேச அங்கீகாரம்
» சிவில் விமானப் போக்குவரத்தில் பாதுகாப்பு, தற்காப்பு, வினைத்திறன் மற்றும் ஒழுங்கு முறைமையொன்றினையும் மற்றும் வான் போக்குவரத்து முறைமையில் தொடர்ச்சியான பொதுமக்கள் நம்பிக்கைத் தன்மையையும் உருவாக்கல்
» இலங்கைப் பிரஜைகளின் நல்வாழ்விற்காக இலங்கையின் வான்பரப்பை ஆகக் கூடியளவு பயன்படுத்துதல்
» நாட்டில் சமூக பொருளாதார அபிவிருத்தியை உருவாக்கல்
» காரணமற்ற போட்டித்தன்மையால் எழும் பொருளாதார விரயங்களிலிருந்து பாதுகாத்தல்
» மக்களினதும் பொருட்களினதும் கிடைப்பனவு மற்றும் நகர்வுகளை மேம்படுத்துதல்
» சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் தங்கியுள்ள சேவைகள்
» சிவில் விமானப் போக்குவரத்து துறையில் கல்வி
» சிவில் வானியல் சார் அனைத்து விடயங்களையும் மேம்படுத்தல்
» வினைத்திறன் மிக்க நடைமுறை மற்றும் ஒழுங்கு முறைகளுக்கான சீரான சட்ட வரையறைகள்
» சூழலின் நிலையான தன்மை

## வெளியீடுகள்

| வெளியீட்டு வகைகள் | வெளியீடுகள் |
|---|---|
| கொள்கை ஆலோசனை | அரசாங்கத்திற்கும் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கும் ஆலோசனை வழங்கல்.<br>சட்ட மறுசீரமைப்பு<br>விதிகளின் உருவாக்கம்<br>அமுலாக்க நியமங்களின் உருவாக்கமும் பிரசுரித்தலும்<br>விமானப் போக்குவரத்துக் கொள்கை உருவாக்கம்<br>செய்முறைக் கையேடுகளின் உருவாக்கம்<br>விமானப் போக்குவரத்து கட்டமைப்பின் மூலத் திட்டம் |
| பாதுகாப்பு மதிப்பீடு மற்றும் சான்றுப்படுத்துகை | கீழ்க்குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான இடர் முகாமைத்துவம்<br>விமான நிலையம்/வான் துறையின் பாதுகாப்பு<br>விமான சேவைத் துறையினரின் பாதுகாப்பு<br>பொது விமான போக்குவரத்துத் துறையினரின் பாதுகாப்பு<br>தனிநபர் அனுமதிப் பத்திரதாரரின் பாதுகாப்பு<br>விமானப் பறப்புப் பயிற்சிப் பாதுகாப்பு<br>வானூர்தி பராமரிப்புப் பாதுகாப்பு மற்றும்<br>விமான போக்குவரத்து சேவைகள் துறையினரது பாதுகாப்பு இடர் முகாமைத்துவம் |
| பாதுகாப்புப் ஆய்வுத் தகவல்கள் மற்றும் மேம்படுத்தல்கள் | பாதுகாப்பு விசாரணை<br>பாதுகாப்புப் ஆய்வு<br>பாதுகாப்புத் தகவல், கல்வி மற்றும் மேம்படுத்தல்<br>வானூர்தி விபத்து மற்றும் சம்பவ விசாரணை மற்றும் பாதுகாப்புப் பரிந்துரைகளின் அமுலாக்கங்கள் |
| அதிகாரமளித்தல் | விமான சேவை அட்டவணை அங்கீகாரம்<br>விமானப் போக்குவரத்துக் கட்டணங்களை அங்கீகாரம்<br>பயண முகவர்களை சான்றுப்படுத்தல்<br>வானூர்திகளைப் பதிவு செய்தல்<br>வானூர்தி உதிரிப்பாகங்களின் இறக்குமதிக்கான அங்கீகாரம்<br>உயர் கட்டட நிர்மானங்களை மேற்கொள்வதற்கான அங்கீகாரம்<br>பொது விற்பனை முகவர்களுக்கான அங்கீகாரம் அளித்தல்<br>சர்வதேச செயற்பாடுகளுக்காக உள்நாட்டு சேவை வழங்குனர்களை ஒதுக்கீடு செய்தல் |
| பாதுகாப்பு மதிப்பீடு | சிவில் விமானப் போக்குவரத்துத் துறை பாதுகாப்பு இடர் முகாமைத்துவம் |
| நடைமுறைப்படுத்தல் | ஒழுங்குமுறை மீறல்கள் மீதான பதில்கள்.<br>பொது சுகாதார மற்றும் சுத்திகரிப்புத் தேவைகளை அமுல்படுத்தல் |
| அரசாங்கத்திற்கு உதவுதல் | விமானப் சேவை நிறுவனங்களிடமிருந்து தாமத வரியினை அறவிடல் |

# வழிகாட்டல் மற்றும் முகாமைத்துவம்

## அதிகாரசபையும் அதன் குழுக்களும்

### பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்

2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின் பிரகாரம் அதன் பணிப்பாளர் சபை உறுப்பினர்களை துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சரான அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் 2010 மே 13 இல் நியமித்தார். எயார் சீப் மார்ஷல் டப்ள்யூ. டி.ஆர்.எம்.ஜே.குணதிலக மற்றும் ஜே.எம் டப்ள்யூ.ஜயசுந்தர ஆகியோர் முறையே தலைவர் மற்றும் உப தலைவர்களாக நியமிக்கப்பட்டார்கள்.

### இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் கூட்டங்கள்

மீள்பார்வைக்கு உட்பட்ட காலப்பகுதியில் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது ஒன்பது (9) கூட்டங்களை நடத்தியிருப்பதுடன், இருநூற்று முப்பத்தி நான்கு (234) தீர்மானங்கள் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து கைத்தொழில் என்பவற்றை ஒழுங்குமுறைப்படுத்தும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டன.

## சிரேஷ்ட முகாமைத்துவம்

### ICAO USOAP ஆய்வு முடிவுகள்

ஒப்பந்த நாடுகளால் சர்வதேச நியமங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களின் (SARPs) அமுலாக்கத்தின் அளவினை மதிப்பிடவும், ஒவ்வொரு நாடுகளின் விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பின் கொள்ளளவின் பயனுறுதித் தன்மையினை மதிப்பிட்டுக் கொள்ளும் வகையில் சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பால் (ICAO) உலகளாவிய பாதுகாப்பு மேற்பார்வை ஆய்வுத்திட்டம் (USOAP) ஆரம்பிக்கப்பட்டது.

2010 இல் இலங்கையில் ICAO ஆல் நடாத்தப்பட்ட USOAP ஆய்வானது, இலங்கையானது SARPs இன் அமுலாக்கத்தில் அதிசிறந்த நிலையில் திகழ்கின்றதெனவும், விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பில் அதியுயர் மட்டமொன்றைப் பேணிவருவதாகவும் நிரூபித்துள்ளது. ஆசியா பசுபிக் பிராந்தியத்திலுள்ள 34 நாடுகளில், இலங்கையானது ஆய்விற்குட்படுத்தப்பட்ட காலப்பகுதியில் ICAO இன் SARPs களின் வினைத்திறனான அமுலாக்கல் மட்டத்தில் நான்காம் (4) இடத்தினை அடைந்துள்ளது. இது இந்த நாட்டினுடைய ஒரு முக்கியமானதும் குறிப்பிட்டுக் கூறக் கூடியதுமான அடைவு மட்டமாகும். ஆசியா பசுபிக் பிராந்தியத்தில் முன்னேற்றகரமான செயற்றிறனை கொண்ட நாடுகளாக கொரியா இராச்சியம், சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளை மட்டுமே குறிப்பிட முடியும். (இணைப்பு 03)

USOAP மதிப்பீடுகளின் படி, உலக சராசரி மட்டத்திலும் ஆசியா பசுபிக் பிராந்தியத்தில் 18 நாடுகள் 59.8 என்ற உலக சராசரி மட்டத்திற்கு மேலுள்ளதாகக் காணப்படுகின்றன. 16 நாடுகள் உலக சராசரி மட்டத்திலும் குறைவான சராசரியைக் கொண்டுள்ளதுடன், இவற்றில் 4 நாடுகள் உலக சராசரி மட்டத்தின் அரைப்பங்கிலும் குறைந்த சராசரியினை (29.9) கொண்டுள்ளன.

ஆசியா பசுபிக் பிராந்தியத்தில் USOAP அதியுயர் செயற்பாடுகள் கொண்ட நாடுகள் பின்வருமாறு இறங்குவரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

01. கொரியா இராச்சியம்
02. சிங்கப்பூர்
03. ஜப்பான்
04. இலங்கை
05. மோங்கோலியா
06. சீனா

07. நியூசிலாந்து

08. அவுஸ்ரேலியா

இலங்கையானது உலக ரீதியான ஆய்வுகளின் முடிவின் படி 19 ஆம் இடத்தினை ஆய்வுக்குட்படுத்திய 177 நாடுகளில் வகிக்கின்றது என்பதனை மிக அண்மைக்கால வெளியீட்டுத் தகவல்கள் வெளிப்படுத்தியுள்ளன.

## COSCAP தெற்காசியாவின் 20 ஆவது வழிப்படுத்துகைக் குழுக் கூட்டம்.

செயற்பாட்டுப் பாதுகாப்பு மற்றும் தொடர்ச்சியான வான்தகைமை வேலைத்திட்டத்தின் கூட்டு அபிவிருத்தி - தெற்காசியாவின் (COSCAP-SA) 20வது வழிப்படுத்துகைக் கூட்டமானது அக்காலத்தில் COSCAP-SA இன் தலைவராகச் செயற்பட்ட சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் தலைமையில் 2011 ஏப்ரல் 5 முதல் 8 வரையான காலப்பகுதியில் இடம் பெற்றது. ஏறத்தாழ 50 பிரதிநிதிகள் இம் மூன்று நாள் கூட்டத்தில் பங்குகொண்டார்கள். வழிப்படுத்துகைக் குழுக் கூட்டத்தின் உறுப்பினர்களாக தெற்காசியா நாடுகளின் சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகத்தினர் காணப்படுகின்றனர். மேலும் இவ் வழிப்படுத்துகைக் குழுக் கூட்ட உறுப்பினர்களுக்கு மேலதிகமாக சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பின் பிரதிநிதி, மற்றும் மற்றும் முன்னணி வகிக்கும் சர்வதேச, உள்நாட்டு விமானப் போக்குவரத்து நிறுவனங்களைச் சார்ந்த பிரதிநிதிகள் பங்குபற்றினார்கள்.

COSCAP-SA ஆனது தெற்காசியா நாடுகளின் சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகத்தினர் தமக்கிடையில் ஏற்படுத்திக் கொண்ட பொதுவான கூட்டு முயற்சியினூடாக 1998 இல் இவ் அமைப்புத் தோற்றுவிக்கப்பட்டது. இவ் வேலைத் திட்டத்தின் அடிப்படை இலக்காக தெற்காசியா நாடுகளில் சிவில் விமானப் போக்குவரத்துக் கைத்தொழிலில் ஈடுபடும் நபர்கள் மற்றும் விமானப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவோரின் தொழிநுட்ப அறிவினை மேபடுத்துதல் மற்றும் அதிகரித்தலுக்கு தொழிநுட்ப அனுசரணை வழங்குதலையும், விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பை ஒழுங்குபடுத்துவோருக்கு பயன் கிடைக்கக் கூடிய செய்முறை மற்றும் வழிகாட்டிக் கைநூல்களைத் தயாரித்தல் மற்றும் விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பரிசோதகர்களுக்கு செய்முறை ரீதியான அறிவினை வழங்கல் என்பவற்றை நோக்காகக் கொண்டுள்ளது. இவ் வேலைத்திட்டமானது பிராந்திய வேலைத்திட்ட கூட்டிணைப்பாளரால் முகாமைப்படுத்தப்படுவதுடன், தெற்காசியாப் பிராந்தியத்திலிருந்து வேலைக்கமர்த்தப்பட்ட வேறுபட்ட துறை விடயங்களில் தொழிநுட்ப நிபுணர்களிடம் சேவை பெறப்படுகின்றது.

வழிப்படுத்துகைக் கூட்டமானது வருடாந்தம் இடம் பெறுவதுடன், இக் கூட்டத்தில் கடந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் செயற்றிறன் மீளாய்வு மதிப்பிடப்படுவதுடன், எதிர்வரும் வருடத்திற்கான வேலைத்திட்டமானது மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படுகின்றது. மேலும் நிதி நிலைமைகள் மதிப்பீடு செய்யப்படுகின்றன என்பதுடன், சர்வதேச நிபுணர்களால் புதிய மற்றும் விஸ்தரிக்கப்பட்ட தொழிநுட்பங்கள் முன்வைக்கப் படுகின்றன. இவை தொடர்பில் ஐக்கிய அமெரிக்காவில் ஒனறிணைந்த விமானப் போக்குவரத்து நிர்வாகத்தின் பிரதிநிதி மற்றும் சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பின் பிரதிநிதி, போயிங் கம்பனிப் பிரதிநிதி, எயார் பஸ் கைத்தொத்தொழிற் பிரதிநிதிகள் போன்றோரை முன்னிலைப்படுத்தி இக் கூட்டத்தை முன்னெடுப்பார்கள்.

இம் மூன்று நாட்கள் கூட்டமானது பயனுள்ள வெளியீடுகளுடன் (முடிவுகளுடன்) முடிவுறுத்தப்படும். கலந்துரையாடலுக்காக 11 கலந்துரையாடல் பத்திரிகைகள் முன்வைக்கப்பட்டன. இக் கூட்டத்தில் அவற்றுள் அனேகமான தொழினுட்ப மற்றும் விமானப்பறத்தற் பாதுகாப்பு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன என்பதுடன், தெற்காசிய நாடுகளின் செயற்றிறன் அடிப்படையான வான்செலவின் அமுலாக்கம் (PBN) மற்றும் தெற்காசியா நாடுகள் தொடர்பில் தேசிய பாதுகாப்பு வேலைத்திட்ட அமுலாக்கல் என்பன மிகவும் முன்னிலைப்படுத்தப்பட்டன.

## வானூர்தி விபத்து விசாரணை அலகு

இலங்கையில் விமானப் போக்குவரத்திற்கான விமான விபத்துக்கள் அற்ற பாதுகாப்பான வருடமாக 2011 ஆம் ஆண்டும் மற்றைய ஆண்டுகளைப் போன்று கூறிக் கொள்வதில் பெருமையடைகின்றது. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 16 ஒக்டோபர் 2005 இல் சிறிலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான UL 316 மற்றும் எயார் பஸ் A 330-243 என்பவைகளில் ஏற்பட்ட விபத்துக்களின் பின்னர், இலங்கையில் எவ்வாறானதொரு விபத்துக்களும் நேரவில்லை.

வானூர்தி விபத்து விசாரணை அலகு குறிப்பாக ICAO பாதுகாப்பு மேற்பார்வை ஆய்வுகள் மூலமான கண்டுபிடிப்புக்களுடன் தொடர்புபட்ட சீராக்கும் செயற்றிட்டத்தின் அமுலாக்கம் மீது தனது கவனத்தைச் செலுத்தியிருந்தது. ICAO ஆய்வுக் குழுவின்படி, வானூர்தி விபத்து மற்றும் சம்பவ விசாரணை (AIC) மீது ஐந்து (5) கண்டுபிடிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அவை தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளும் அதே ஆய்வு அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டிருந்தன.

அக் குழுவின் ஐந்து (5) கண்டுபிடிப்புகளும் வானூர்தி

விபத்து மற்றும் பாரதூரமான சம்பவங்கள் தொடர்பான விசாரணையினை நடத்துவதற்கு தனியானதொரு சுதந்திரமான அமைப்பு இல்லாமை, விசாரணையாளர்களுக்குப் போதிய பயிற்சி வழங்கப்படாமை, விசாரணைச் செய்முறையினூடாக ஒத்துழைப்பு அல்லது அவற்றுடன் கூடியதான உதவிகளைப் பெற்றுக்கொள்வற்கு ஏனைய தேசிய மற்றும் விசாரணை அமைப்புகளுடன் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை உடன்படிக்கையொன்றினை எட்டிக்கொள்ளாமை, மற்றும் பாதுகாப்பான தரவுகளின் ஆய்வு, தன்னிச்சையான சம்பவம் மற்றும் நிகழ்வுகளின் அறிக்கையிடல் முறைமையின் உருவாக்கம் என்பனவற்றின் மீதானதாகக் காணப்படுகின்றன.

இவ் ஆய்வின் இறுதியில், விபத்து விசாரணைகளைச் சுதந்திரமாக முன்னெடுப்பதற்கு ஐக்கிய அமெரிக்காவில் NTSB அமைப்புக் காணப்படுவது போல இலங்கையிலும் சுதந்திரமான அமைப்பொன்றினை உருவாக்குவதற்கு AIU அதிகாரசபைக்கு முன்மொழிவொன்றினை விடுத்திருந்தது. மேலும் பொது முயற்சிகள் குழு (COPE) விபத்து விசாரணைகளை முன்னெடுப்பதற்கென தனியானதொரு அமைப்பொன்றினை உருவாக்குவதற்கான சாத்தியத் தன்மையினை பரிசீலிக்கும் படி இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கும் பரிந்துரை வழங்கியிருந்தது. வானூர்தி விபத்து மற்றும் சம்பவ விசாரண தொடர்பான கூட்டு ஒப்பந்தமொன்று இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கும் சிங்கப்பூர் விபத்து விசாரணை அமைப்பிற்குமிடையில் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், நீதி அமைச்சுடனான பரஸ்பர உடன்பாடு ஆரம்பிக்கப்பட்டு அதன் இறுதி வடிவம் தயார் செய்யப்பட்டு வருகின்றது.

வானூர்தி விபத்து மற்றும் சம்பவ விசாரணை ஒழுங்குவிதிகள் எழுத்துருப்பெற்றிருப்பதுடன், அது சட்டவாக்கம் பெறும் நோக்கில் கௌரவ அமைச்சரின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மீள்பார்வைக்குட்படுத்தப்பட்ட வருடத்தில் எவ்வாறானதொரு விபத்தோ அல்லது குறிப்பிடக்கூடிய சம்பவமோ பதிவு செய்யப்படாத போதிலும், 05 பெப்ரவரி 2011 இல் இரண்டு வானூர்திகளுக்கிடையில் கொழும்பு வான்பரப்பில் (FIR) இடம்பெற்றதான ATC சம்பவமொன்று தொடர்பில் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையால் விசாரணை செய்யப்பட்டது.

## உள்ளகக் கணக்காய்வுப் பகுதி

உள்ளகக் கணக்காய்வுப் பகுதியானது நிறுவனத்தின் சேவைகளுக்குப் பெறுமதியினைச் சேர்த்தல், நிறுவனத்தின் நடவடிக்கைகளை மேம்படுத்தல் இலக்குடையதான ஆலோசனையளித்தல் மற்றும் இலக்குகளை உறுதிசெய்தல் மற்றும் சுயாதீனமாகச் செயற்படல் என்பவற்றுடன் பொறுப்புடமையாக்கப்பட்டுள்ளது. உள்ளகக் கணக்காய்வானது நிறுவனத்தின் செயற்றிறன், கட்டுப்பாடு, மற்றும் ஆளுகைச் செயற்பாடுகளில் பயனுறுதிமிக்க தன்மை போன்றனவற்றை மதிப்பிடுதல் மற்றும் மேம்படுத்துதலில் முறைசார் மற்றும் ஒழுங்குமுறையான அணுகுமுறையொன்றைப் பின்பற்றுதலினூடாக இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை அதன் இலக்குகளை அடைவதற்கு உதவி புரிகின்றது.

குறித்த பகுதியானது இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் வாடிக்கையாளர் திருப்தியை மதிப்பிட்டுக் கொள்வதற்கும் மற்றும் தொழிநுட்பம் சார்ந்த பகுதிகளில் தனது தொழில்சார் சேவைகளை வழங்குவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதன் அடிப்படையில் குறித்த பகுதியானது நிறுவனத்தின் தொழிநுட்பப் பகுதிகள் மீது மூன்று (3) கணக்காய்வுகளை மேற்கொண்டுள்ளதுடன், வாடிக்கையாளர் திருப்தியை மதிப்பிட்டக் கொள்ளும் நோக்கில் மாதிரி வினாப்பத்திரமொன்றையும் தயாரித்துள்ளது. இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் தொழிநுட்பப் பகுதிகள் அதன் வாடிக்கையாளருக்குத் தரத்தை மேம்படுத்துதல், மற்றும் சிறந்த நியதிச் சட்ட சேவைகளை வழங்குதல் போன்றனவற்றில் சிறந்த தீர்வினைப் பெற்றுள்ளது. மேலும் இப் பகுதியானது தொழிநுட்பம் சாராப் பகுதிகள் மீது பதின்மூன்று (13) கணக்காய்வுகளை மேற்கொண்டுள்ளதுடன், இவை குறிப்பாக நிறுவனத்தின் நிதி மற்றும் மனிதவள முகாமைத்துவப் பகுதிகளில் வினைத்திறனை அதிகரிக்க காரணமாக அமைந்தன.

ஊழியர்களின் தொழில்சார் தன்மையினையும் உற்பத்தியாற்றலையும் மேம்படுத்தல் மற்றும் அவர்களின் அவர்களின் அறிவாற்றலை பரவலாக்கல் போன்ற நோக்கில் குறித்த பகுதியானது அதன் நிர்வாகத்தர ஊழியர் ஒருவருக்கு சிங்கப்பூரில் இடம்பெற்ற “உள்ளகக் கணக்காய்வின் புதிய பரிமாணம்” எனும் விடயம் தொடர்பான ஒரு பயிற்சிப் பட்டறையில் கலந்துகொள்ளும் வாய்ப்பினை வழங்கியிருந்தது.

# வானியல் சேவைகள் பிரிவு

## விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பகுதி

### விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பயிற்சி

விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பகுதியானது ஆரம்ப மற்றும் புதுப்பித்தற் பயிற்சிகளை வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்துக் கம்பனியின் பாதுகாப்பு ஆளணியினருக்கான வானூர்தி தேடுகை மற்றும் பரிசோதனை மீதான பயிற்சி நெறிகளை முன்னெடுத்திருந்தது. குறித்த பயிற்சி நெறியானது தத்துவம் மற்றும் செய்முறைப் பாடநெறிகளை உள்ளடக்கியிருந்தது.

### திரை சான்றுப்படுத்தல்

விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பகுதி (AVSEC) 2011 இல் விமான நிலைய செயற்பாட்டாளரான வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்துக் கம்பனியின் விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புத் திரையிடல் ஆளணியினருக்கான சான்றுப்படுத்தல்களை மேற்கொண்டிருந்தது. இச் சான்றுப்படுத்தலானது எழுத்து, செய்முறை, மற்றும் வாய்மொழி மூல பரீட்சைகளை உள்ளடக்குகின்றது. இரண்டாம் கட்ட சான்றுப்படுத்தல் முடிவில், 376 விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு ஆளணியினர் விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புத் திரையினை இயக்குவதற்குச் சான்றுப்படுத்தப்பட தகுதிபெற்றிருந்தனர். திரையிடல் தொழிற்பாட்டை மேற்கொள்ளும் விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு ஆளணியினரைச் சான்றுப்படுத்த இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை எடுத்த இரண்டாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

### போர்த் தளபாடங்களைக் கையாள்வதற்கான அனுமதி

இலங்கையின் வான் பரப்பினுள் மற்றும் இலங்கையின் விமானத்தளத்திற்கு அல்லது விமானத்தளத்திலிருந்து போர்த் தளபாடங்களின் கையாடல் தொடர்பான அனுமதியளித்தல் பணிப்பாளர் நாயகத்திற்கு ஒப்புவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கணிசமான எண்ணிக்கை கொண்ட வேண்டுகைகள் மிக முக்கிய நபர்களுக்கான (VIP) பாதுகாப்பு, ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் படை நடவடிக்கைகள், படைகளால் மற்றும் பொலிஸாரால் மேற்கொள்ளப்படும் கொள்வனவுகள், சர்வதேச விளையாட்டுத் தொடர்கள் போட்டிகளில் பங்கு கொள்வோர், கொழும்பினை ஒரு பதிலீட்டு விமானத்தளமாக நியமித்துள்ள அல்லது இலங்கையின் வான்பரப்பினூடாக பறத்தலில் ஈடுபடும் சிக்காக்கோ உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ள ஏனைய நாடுகளுக்குச் சொந்தமான வானூர்திகள் மற்றும் சட்டப்படியான நோக்கங்களுக்காக போர்த் தளபாடங்கள் கையாள்கை தொடர்பில் தனிநபர்களாலும், அரச மற்றும் தனியார் நிறுவனங்களாலும் வேண்டுகைகள் விடுக்கப்படுகின்றன.

ICAO ஆவண இலக்கம் 9284 (2009-2010 பதிப்பு) இல் அல்லது IATA ஆல் வெளியிடப்பட்ட ஆபத்தான பொருட்கள் தொடர்பான ஒழுங்குவிதிகளின் 51 ஆவது பதிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பொருத்தமான வரையறைகளுடனான கட்டாய பிரயோகங்களான வான்செலவு ஒழுங்குவிதிகளின் 128 மற்றும் 129 பந்திகளின் கீழ், பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகார எல்லைக்கு மேற்படாத வகையில் குறித்த பகுதியால் வழங்கப்பட்ட ஆயுத தளபாடத்துடன் வானூர்திகள் வான்பரப்பினூடான அல்லது தரையிறங்கலுக்கான அல்லது மேலெழுகைக்கான அனுமதிகள் பாதுகாப்பு அமைச்சினால் அனைத்து ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் அனுமதியளிக்கப்படும் போது கவனத்திற் கொள்ளப்படுகின்றன.

2011 இல் சரக்குகளில் போர்த் தளபாடங்களைக் காவுகை தொடர்பிலான மதிப்பீடுகளின் போது 36 அனுமதிகளும், VVIP மற்றும் VIP களின் சர்வதேச பயணங்கள் காரணமான பறப்பின் போது போர்த் தளபாடங்களின் காவகை தொடர்பில் 41 அனுமதிகளும் வழங்கப்பட்டுள்ளன.

## விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு மற்றும் கூட்டங்கள்

திரு.பீ.ஏ.ஜெயகாந்த, பிரதிப்பணிப்பாளர்- விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு அவர்கள், யூன் 2011 இல் இந்தியாவில் புதுடெல்லி மற்றும் சிங்கப்பூரில் முறையே இடம்பெற்ற விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு ஒழுங்குபடுத்துனர் கூட்டம் மற்றும் பிராந்திய விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு மாநாடு என்பவற்றில் பங்குகொண்டார்.

## விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு கற்கைநெறி மற்றும் செயலமர்வு

விங் கொமாண்டர் (இளைப்பாறியவர்) அஜித் தேவராஜ், உதவி விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு உத்தியோகத்தர் அவர்கள், பெப்ரவரி 2011 இல் தாய்லாந்து- பாங்கொங்கில் இடம்பெற்ற விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புச் சட்ட நோக்குகள் செயலமர்வில் பங்குகொண்டார். மேலும் யூலை 2011 இல் இடம்பெற்ற விமானப் போக்குவரத்து சரக்குப் பாதுகாப்பு கற்கைநெறி மற்றும் ஒக்டோபர் 2011 இல் கென்யாவில் இடம்பெற்ற தேசிய பரிசோதகர் பயிற்சிநெறி என்பனவற்றை வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளார்.

## விசேட செயற்றிட்டப் பகுதி

விசேட செயற்றிட்டப் பகுதியானது உற்பத்தியாற்றல், ஆளுமைவிருத்தி, மற்றும் ஆளணியினர் தொடர்பு என்பவற்றை அதிகரிக்கும் நோக்குடன் அதிகாரசபையின் ஊழியர்களுக்கென இரண்டு வெளிக்கள வேலைக்களங்களை வருடாந்தம் ஒழுங்குசெய்து வருகின்றது. இவற்றுள் ஒரு வேலைக்களமானது முகாமைத்துவ ஊழியர்களுக்குத் தேவைப்படும் மிக முக்கிய குணாதிசயங்களை மனதில் நிறுத்திக்கொள்ளும் நோக்குடன் நிறைவேற்றுத்தர ஊழியர்களுக்கானதாக அமைகின்றது. மற்றையது குழுவாக வேலைசெய்தல் மற்றும் உற்பத்தியாற்றலை ஊக்குவிக்கும் நோக்குடன் அதிகாரசபையின் அணைத்து ஆளணியினருக்காகவும் நடாத்தப்படுகின்றது.

2011 இல் வெளிக்கள வேலைக்களமானது வழமைக்கு மாறாக ஒரு மாற்றத்துடன் இடம்பெற்றதுடன், “wild-draft” எனும் வெளிக்கள செயற்பாடுகளைக் கொண்டதான பொதியொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது. இச் செயற்பாடுகளானது குழு அமைத்தல், ஊக்குவித்தல், சகிப்புத்தன்மை, மற்றும் ஆளுமைவிருத்தி என்பவற்றை இலக்காகக் கொண்ட ஒரு மிகப் பெரிய பயனுறுதிமிக்க செயற்பாடாக அமைந்திருந்தது. முதலில் இச் செயற்பாடானது இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் நிறைவேற்றுத் தர ஊழியர்களுக்காக பெலிகுல் ஓயாவில் நடாத்தப்பட்டது. நிறைவேற்றுத் தர ஊழியர்களிலிருந்தான சிறந்த வெளியீடுகள் பெறப்பட்டதனைத் தொடர்ந்து, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் அனைத்து ஊழியர்களுக்கும் இச் செயற்பாடு வழங்கப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டதுடன், நிறைவேற்றுத் தரமல்லா ஊழியர்களுக்கும் அதையொத்த வேலைத்தளம் பயனுறுதிமிக்க வகையில் வழங்கப்பட்டது.

## தேசத்திற்கு மகுடம் கண்காட்சி

பெப்ரவரி 2011 இல் புத்தள எனும் மிடத்தில் நடாத்தப்பட்ட தேசத்திற்கு மகுடம் - 2011 கண்காட்சியில் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையால் காட்சிக்கூடம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. இவ் வருடத்தில் CAASL தனது காட்சிப்பொருளாக AN24 ரகத்தையுடைய வானூர்தியொன்றைப் பயன்படுத்தியிருந்தது. இரத்மலானை விமான நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இவ் வானூர்தி பல்வேறு பாகங்கள் ஆக்கப்பட்டு புத்தள பிரதேசத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருந்ததுடன், அவை இலங்கை வான்படையினரின் உதவியுடன் காட்சிக்கூடத்தில் மீண்டும் வானூர்தியாகப் பொருத்தப்பட்டது. இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை ஊழியர்கள் இந்தக் கைவிடப்பட்ட நிலையிலிருந்த வானூர்திக்கு உள்ளக மற்றும் வெளியக மீளமைப்பினை மேற்கொண்டு புதுப்பொலிவொன்றினை வழங்கியிருந்தனர். பௌதீக மீளமைப்பிற்கு மேலதிகமாக, விமான அறையின் நடுப்பகுதியிலும், ஒவ்வொரு ஜன்னலிலும் காணொளிகள் காண்பிக்கப்பட்டதுடன், இக் காணொளியானது வீரவில எனுமிடத்தில் ஆரம்பமாகி இலங்கையின் தென்பகுதி மேலாகப் பறந்து இறுதியில் மீண்டும் அதே விமானத்தளத்தினை வந்தடைவதாக உண்மையான பறப்புக் காட்சி மாதிரிகையை கொண்டதாக வடிவமைக்கப்பட்டிருந்தது.

இந்த விஷேட காட்சியறையில் ஆர்வத்துடன் ஒன்றுதிரண்ட பெருந்திரளான மக்கள் எவ்வாறானதொரு செலவுமின்றி பயணிகள் போக்குவரத்து வானூர்தியொன்றினை பறத்தல் அனுபவத்தடன், வானூர்திக்கு மிக நெருக்கமாக நின்று பார்வையிட்டனர்.

## COSCAP-SA செயற்றிட்டத்திற்கு உதவிபுரிதல்

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை 2005- 2011 யூலை வரையான காலப்பகுதியில் கொழும்பில் COSCAP-SA தலைமையலுவலகம் அமைய அனுசரணை வழங்கியதுடன், 2009-2011 வரையான இரண்டாம் காலப்பகுதியில் செயற்றிட்டத்தின் தலைமைப்பதவியையும் வகித்துள்ளது. கொழும்பில் தொழிற்பட்டுவந்த ICAO ஆல் பொறுப்பேற்கப்பட்ட COSCAP-SA அலுவலகத்திற்கான வசதியளித்தல் செயற்பாடானது விஷேட செயற்றிட்டப் பகுதியால் மேற்கொண்டவந்த செயற்பாடுகளுள் ஒன்றாகும்.

அங்கத்துவ நாடுகளால் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் (COSCAP-SA வின் உருவாக்கலின்

போது) இலங்கையில் பதிவு செய்யப்பட்ட விமான சேவைகள் மற்றும் இலங்கைக்கு தனது செயற்பாடுகளை மேற்கொள்ளும் விமான சேவைகளில் இலங்கை மற்றும் ஏனைய நாடுகளுக்கிடையில் இலவச பிரயாண ஒழுங்குகளைச் செய்து கொடுப்பதன் மூலம் இந்த செயற்றிட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ள துறைசார் நிபுணர்களாகக் கருதப்படும் உத்தியோகத்தர்களுக்கு இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது வசதியளித்து வருகின்றது. இதன் அடிப்படையில், விஷேட செயற்றிட்டப் பகுதியானது COSCAP-SA நிபுணர்களுக்கு மொத்தமாக 46 இலவச வான் பிரயாணச் சீட்டுக்களை பெற ஏற்பாடு செய்து கொடுத்துள்ளது. அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட இலவச பிரயாணச்சீட்டுகளின் பகுப்பாய்வு கீழே தரப்படுகின்றது.

சிறிலங்கன் விமானசேவை - 34 வான் பிரயாணச்சீட்டுகள்

மிஹின்லங்கா விமானசேவை - 11 வான் பிரயாணச்சீட்டுக்கள்

எமிரேற்ஸ் விமானசேவை - 01 வான் பிரயாணச்சீட்டுக்கள்

## CAASL இன் பயிற்சிக் கல்லூரி (CAATA)

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பயிற்சிக் கல்லூரியானது, அதிகாரசபையின் பயிற்சியளித்தல் அலகாகத் தொழிற்படுகின்றது. இரண்டு முழுமையான உபகரணமிடப்பட்ட பயிற்சியளித்தல் வகுப்பறைகளைக் கொண்ட இந்த அலகானது விஷேட செயற்றிட்டப் பகுதியால் நிர்வகிக்கப்படுகின்றது. உள்ளார்ந்த நிர்வாகச் செயற்பாடுகளுக்கு இவற்றை பயன்படுத்துவதற்கு மேலாக 38 நாட்கள் AME, ELPC, AIR LAW, EB, RT எனும் பரீட்சைகளை நடாத்துவதற்கும், 14 நாட்கள் விமான சேவை ஒதுக்கீட்டுப் பயிற்சி நெறி நடாத்துவதற்கும், 17 நாட்கள் உயர் பணித்துறைப்பயிற்சி விமானி செயற்றிட்டம் நடாத்துவதற்கும், 15 நாட்கள் அடிப்படை வான்தகைமை பரிசோதகர் பயிற்சிநெறி நடாத்துவதற்கும், 19 நாட்கள் அதிகாரசபையால் நடாத்தப்படும் கூட்டங்கள் மற்றும் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுக்கவும் என மொத்தமாக 103 நாட்கள் CAATA பயன்படுத்தப்பட்டுள்ளது.

CAATA இலங்கை சுற்றுலாச் சபைக்குச் சொந்தமான குத்தகைக்குப் பெறப்பட்ட கட்டடமொன்றில் அமையப்பெற்றுள்ளது. CAATA இன் பயன்பாட்டை மேம்படுத்தும் நோக்கிலும், வகுப்பறைவசதிகளை வாடகை அடிப்படையில் கிடைக்கப்பெறும் நோக்கிலும் CAA ஆல் மின்னஞ்சல் மூலமான விளம்பரமொன்று மேற்கொள்ளப்பட்டது. இருந்தபோதிலும், வருட இறுதியில் சுற்றுலாச் சபை CAA உடனான குத்தகை ஒப்பந்தத்தை நீடித்துக்கொள்ளாமல் CAATA அமையப் பெற்றிருந்த கட்டடத் தொகுதியினை தனதாக்கிக் கொள்ள விருப்பத்தினை தெரிவித்திருந்தது. இதன் அடிப்படையில் CAA இலங்கை சுற்றுலாச் சபைக்கு குறித்த கட்டடத் தொகுதியினை மீளக் கையளித்தது.

## விமானப் போக்குவரத்து எரிபொருள் விலையிடற் கண்காணிப்பு

விஷேட செயற்றிட்டப் பகுதி இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து விமானப் போக்குவரத்து எரிபொருள் விலைகள் தொடர்பான மாதாந்த அறிக்கையொன்றினைப் பெற்றுக் கொள்வதுடன், அதன் போக்கினை மேற்பார்வை செய்துவருகின்றது. அது மட்டுமன்றி, ஆர்வலர்கள் மற்றும் தீர்மானங்களை மேற்கொள்வோருக்கு அவ்வறிக்கையின் கிடைப்பனவிற்கு வழிவகை செய்கின்றது. ஒரு சில வருடங்களில் நடப்பிலிருந்த எரிபொருள் விலையைக் காட்டும் பட்டியலொன்று இவ்வறிக்கையின் இணைப்பு 4 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

## ஆண்டறிக்கை 2010

ஆண்டறிக்கை 2010 தொகுக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டுப் பாராளுமன்றிற்கும், தொடர்புடைய அரச நிறுவனங்களுக்கும், ஏனைய கைத்தொழிற் பங்காளிகளுக்கும் கையளிக்கப்பட்டது.

## உபகாரப் பொருட்கள்

அதிகாரசபையின் பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களைக் கௌரவிக்கும் ஓர் அடையாளமாக நாட்குறிப்பேடு பிரசுரிக்கப்பட்டு வினியோகஞ் செய்யப்பட்டது.

## விமானத்தளம் மற்றும் வான்செலவு சேவைகள் பகுதி

## ATC தரமிடல் மதிப்பீடுகள்

ANS பகுதி, வான்வழிகாட்டல் பயிற்சி நெறிகளின் இறுதிச் செய்முறைப் பரீட்சைகளைப் பரீட்சித்தல், தரப்படுத்தல் மதிப்பீடுகளை நடாத்துதல், மற்றும் வேலை செய்யும் போதான பயிற்சி வழங்கலை (OJT) மேற்பார்வை செய்தல் என்பவற்றினூடாக AASL ஆல் நடாத்தப்படும் வான்வழிகாட்டகப் பயிற்சிநெறியின் நியமத் தன்மையைப் பேணுவதற்குரிய பாரிய பங்களிப்பொன்றினை மேற்கொண்டுவருகின்றது.

இப் பகுதியானது வான்வழிகாட்டுனருக்கான ஏழு (7) ATC தரப்படுத்தல் சோதனைகளை மேற்கொண்டுள்ளதுடன், வான்வழிகாட்டுனருக்காக நடாத்தப்பட்ட ATC மாதிரிகைகள் மீதான பதினேழு (17) செய்முறை பரீட்சைகளையும் மேற்கொண்டுள்ளது.

## சோதனை நடவடிக்கைகள்

விமானத்தளம் மற்றும் வான்செலவு சேவைகள் பகுதியின் சோதனைத்திட்டம் சீரான அடிப்படையொன்றில் இலங்கையிலுள்ள வானியல் தகவற் சேவை வழங்குனர், விமானத்தளச் செயற்பாட்டாளர்கள், மற்றும் வான்வழிகாட்டக சேவை வழங்குனர் என்போர் மீதான மாதாந்த சோதனை நடவடிக்கைகளை உள்ளடக்குகின்றது. குறித்த பகுதியானது

வான்வழிகாட்டக சேவை வழங்குனர் மீது இருபத்திநான்கு (24) சோதனைகளையும், விமானத்தளங்கள் மீது பத்தொன்பது (19) சோதனைகளையும், வானியல் தகவல் சேவைகள் மீது பன்னிரெண்டு (12) சோதனைகளையும் மேற்கொண்டுள்ளது. 2011 இல் மொத்தமாக ஐம்பத்தைந்து (55) சோதனைகள் குறித்த பகுதியால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இச் சோதனை நடவடிக்கைகள் காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகளும் பரிந்துரைகளும் வரையறுக்கப்பட்ட விமான நிலையங்கள் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் (இலங்கை) கம்பனிக்குத் தெரியப்படுத்தப்பட்டதுடன், அவ்வாறு அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதனையும் மிகக் கவனமாக இப் பகுதியானது அவதானித்து வருகின்றது.

விமானத்தளம் மற்றும் வான்செலவு சேவைகள் பகுதியானது CAA க்கு முறையிடப்பட்ட ATS விசாரணைகளுக்கான பொறுப்பினைக் கொண்டுள்ளதுடன், சேவை வழங்குவோருக்கு சீராக்கும் செயற்பாடுகள் தொடர்பான பரிந்துரைகளையும் மேற்கொள்கின்றது. இப் பகுதியானது 2011 இல் ஒரு வான்வழிகாட்டகம் மீதான சம்பவத்தினையும், விமான ஓடுபாதையில் இடம்பெற்ற சம்பவமொன்றையும் விசாரணை செய்துள்ளதுடன், வான்வழிகாட்டக சேவை வழங்குனருக்கும் வரையறுக்கப்பட்ட விமான நிலையங்கள் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் (இலங்கை) கம்பனிக்கும் பரிந்துரைகளை இது தொடர்பில் மேற்கொண்டுள்ளது.

மேலும் இந்தப் பகுதியானது விமானப் போக்குவரத்து ஒழுங்குபடுத்துகை சம்மந்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஏறத்தாழ எழுபது (70) கூட்டங்களை நடாத்தியோ அல்லது பங்குகொண்டோ உள்ளது.

## நீர் விமானத்தளம்

கடந்த ஆண்டு இரட்டை நீர் மிதப்பி (OTTER) வகையுடைய கடல் விமானங்களைப் பயன்படுத்தி சிறிலங்கன் விமான சேவையால் வான் வாடகை விமான சேவை மீள ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், விமானத்தளம் மற்றும் வான் செலவு சேவைகள் பகுதியானது சிறிலங்கன் விமான சேவையின் கடல் விமானங்கள் செயற்படுவதற்கென பதினைந்து (15) நீர் விமானத்தளங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

## உயர் அடுக்கு மாடிக்கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கான அனுமதி

விமானத்தளம் மற்றும் வான் செலவு சேவைகள் பகுதியானது 2011 இல் ஐந்நூற்று எழுபத்திரெண்டு (572) தொலைதொடர்புக் கோபுரங்கள் அமைப்பதற்கும் எழுபத்தாறு (76) உயர் அடுக்குமாடிக் கட்டடங்கள் அமைப்பதற்கும் அனுமதியினை வழங்கியுள்ளது. 2005 முதல் 2011 வரையான காலப்பகுதியில் தொலைதொடர்புக் கோபுரங்களை நிர்மாணிப்பதற்காக CAA ஆல் வழங்கப்பட்ட அனுமதிகளை இணைப்பு 08 இல் காண்பிக்கப்பட்டுள்ள வரைபானது வெளிப்படுத்துகின்றது.

## நடாத்தப்பட்ட பயிற்சி நெறிகள்

15 நவம்பர் 2012 இலிருந்து நடைமுறைக்கு வரவிருக்கும் ICAO இன் புதிய விமானப் பறப்புத் திட்டம் 2012 இன் திட்டமிடப்பட்ட அமுலாக்கலின் பிரகாரம், குறித்த பகுதியானது COSCAP-தெற்காசியாவின் உதவியுடன் AASL இற்கு மூன்று பயிற்சி நெறி செயலமர்வுகளை நடாத்தியிருந்தது.

## மேலாகப் பறத்தல் மற்றும் தரையிறங்கலுக்கான அனுமதிகள்

2011 இல் CAA தொளாயிரத்து நாற்பது (940) சர்வதேச விமானப் பறப்புக்கள் இலங்கையின் ஆட்புல நிலப்பரப்பினைக் கடந்து செல்வதற்கான அனுமதியினை வழங்கியுள்ளதுடன், அறுநூற்று முப்பது (630) சர்வதேச விமானப் பறப்புக்கள் இலங்கையில் தரையிறக்கம் செய்யப்படுவதற்கும் அனுமதியினை வழங்கியிருந்தது. எனினும் CAA இன் அலுவலக நேரங்கள் தவிர்ந்த காலப்பகுதியில் CAASL சார்பில் AASL இனால் மேலாகப் பறத்தல் மற்றும் தரையிறக்கலுக்கான அனுமதிகள் வழங்கப்பட்டமையினால் மேற் குறிப்பிடப்பட்ட எண்கள் உண்மையாக வழங்கப்பட்ட அனுமதிகளிலிருந்து சிறிது வேறுபடலாம்.

## வானியல் தகவற் சேவை

2010 இல் குறித்த பகுதியானது பின்வரும் வானியல் வெளியீடுகளை அறிமுகஞ்செய்துள்ளது.

| | |
|---|---|
| NOTAMS (விமானிகளுக்கான அறிவித்தல்) | 197 |
| வானியல் தகவல் வெளியீட்டுத் திருத்தங்கள் | 02 |
| வானியல் தகவல்களின் இணைப்புக்கள் | 05 |
| வானியல் தகவல்களின் சுற்று நிருபங்கள் | 10 |

## அம்பாந்தோட்டை சர்வதேச விமான நிலைய நிர்மாணிப்பதற்கான நியதிச்சட்ட உதவிகள்

குறித்த ஆண்டில். பகுதியானது அம்பாந்தோட்டை சர்வதேச விமான நிலையத்தைச் சூழ்ந்துள்ள பிரதேசங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான ஒழுங்கு விதிகளைத் தயாரித்துள்ளதுடன், அவ்வாறு பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களினுள் நிர்மாணங்களின் உயர்வுகளைக் கட்டுப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்களை வழங்குகின்றது. அதற்கு மேலாக குறித்த பகுதியானது அம்பாந்தோட்டை விமான நிலையத்தின் நிர்மாணப் பணிகளுக்கும் தேவையான நியதிச் சட்ட வழிப்படுத்தல்களைக் வழங்கி வருகின்றது.

# விமானப் பயணப் பாதுகாப்புப் பிரிவு

## தனிநபர் அனுமதிப்பத்திரப் பகுதி

### அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனத்திற்கான பாதுகாப்பு முகாமைத்துவ முறைமையின் அமுலாக்கம்

18 நவம்பர் 2010 முதல், அனுமதிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் தமது சேவையினை வழங்கும் போது அனைத்து ICAO இல் அங்கம் வகிக்கும் நாடுகளும் பாதுகாப்பு இடர்களை வெளிப்படுத்தும் அனுமதிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மீதான தேசிய பாதுகாப்பு வேலைத்திட்டத்தினை அவற்றின் ஒரு பகுதியாகக் கொண்ட பாதுகாப்பு முகாமைத்துவ முறைமையொன்றினை அமுலாக்கம் செய்வது கட்டாயமானதாகும். இந்த தேவைப்பாட்டினை பின்பற்றும் பொருட்டு, தனிநபர் அனுமதிப் பகுதியானது முறைமையொன்றினை அமுலாக்கம் செய்ய விமானப்பறப்புக் கல்லூரிகளுடன் கலந்துரையாடல்கள் மற்றும் கூட்டங்களை நடாத்தியுள்ளது. இவற்றின் மூலம் பாதுகாப்பு இடையூறுகள் அடையாளங் காணப்பட்டதுடன், அமுலாக்கலுக்கான உடனடிச் செயற்பாடுகள் முன்மொழியப்பட்டன. ஏற்றுக்கொள்ளக்கூடிய பாதுகாப்பு முகாமைத்துவ முறைமையானது நிறுவனங்களில் உரிய இடத்தில் காணப்படுகின்றனவா என்பதை உறுதிசெய்துகொள்ளும் பொருட்டுப் பயிற்சி நிறுவனங்கள் மீது பல சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

### விமானப் பறத்தற் சோதனைப் பரீட்சகர்களின் நியமனம்.

வேறுபட்ட வகைகொண்ட வானூர்திகளின் மீது பரீட்சார்த்திகளின் விமானப்பறத்தற் சோதனைகளை நடாத்துவதற்கு நேரத்திற்கு நேரம் விமானப் பறத்தற் சோதனைப் பரீட்சகர்களை DGCA நியமித்திருந்த போதிலும், எல்லா நேரத்திலும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் நடைமுறை அனுபவத்தினைக் கொண்டிருப்பதில்லை. பொதுவாக இரண்டு அல்லது மூன்று பரீட்சகர்கள் விமானி அனுமதிப்பத்திரத்திற்கான பரீட்சார்த்திகளைச் சோதனை செய்வதற்கு கிடைக்கக்கூடியவர்களாகக் காணப்படுவர்.

2011 இல் தனிநபர் அனுமதிப்பத்திரப் பகுதியானது, இரண்டு விமானிகளின் சான்று ஆவணங்களை மதிப்பீடு செய்திருந்ததுடன், அவர்களை தேவைப்படும் பயிற்சியின் முடிவு நிலை மற்றும் தகுதிகாண் பறப்புச் சோதனைகள் என்பவற்றைப் பரிசீலிக்கும் விமானப் பறத்தற் சோதனைப் பரீட்சகர்களாக நியமித்தது. தற்போது CAA, தனியார் விமானி அனுமதிப்பத்திரம், வர்த்தக விமானி அனுமதிப்பத்திரம், விமானசேவைப் போக்குவரத்து விமானி அனுமதிப்பத்திரம், உபகரணத் தரமிடல், மற்றும் உதவி விமானப்பறப்புப் பயிற்றுனர் தரமிடல் போன்றவற்றின் வழங்கல் அல்லது புதுப்பித்தலை எதிர்பார்த்திருக்கும் விண்ணப்பதாரிகளது திறனை சோதனை செய்வதற்கு நான்கு விமானப்பறப்பு சோதனைப் பரீட்சகர்களை தன்னகத்தே கொண்டுள்ளது.

### வெளிநாட்டு விமானி அனுமதிப்பத்திரதாரரின் அறிவினைச் சோதனையிடல்

வெளிநாட்டு விமானி அனுமதிப்பத்திரத்தினை வைத்திருக்கும் விமானி ஒருவர் தனது விமானி அனுமதிப் பத்திரத்தினை இலங்கை விமானி அனுமதிப் பத்திரமாக மாற்றும் தேவையேற்படின், இலங்கை DGCA அவ் அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள வகையுடன் தொடர்புடைய குறித்த நபரது அறிவுடன் கூடிய ஏனைய தேவைப்பாடுகளை சோதனையிடும் பொறுப்புடையவராகின்றார்.

2011 வரையில், அவ்வாறான தேவையுடைய விமானிகளின் வான் சட்ட அறிவு மட்டும் DGCA ஆல் சோதனையிடப்பட்டது. 2011 இல், மாற்றப்படும் விமானி அனுமதிப்பத்திரங்களின் தரம் மற்றும் படிநிலை என்பவற்றை மேம்படுத்தும் நோக்கில் இலங்கை DGCA செயற்பாட்டுச் செய்முறை மற்றும் வான் சட்டம் என்பனவற்றிற்கு மேலாக வான்செலவு, வளிமண்டலவியல், செயற்பாடு, உபகரணம், விமானப்பறத்தற் திட்டம், விமானப்பறத்தற் தத்துவம் மற்றும் மனித செயற்பாடுகள் எனும் தொழிநுட்ப விடயங்களை

உள்ளடக்கிய இரண்டு மேலதிக வினாத்தாள்களை அறிமுகஞ்செய்திருந்தார்.

### தனிநபர் அனுமதிப்பத்திரப் பகுதியின் தொழிற்பாடுகளை தன்னியைபாக்கல்

தனிநபர்களை மற்றும் விமானப் போக்குவரத்துப் பயிற்சி நிலையங்களைச் சான்றுப்படுத்தல் என்பன தனிநபர் அனுமதிப்பத்திரப் பகுதியின் பிரதான தொழிற்பாடாகும்.

சிவில் விமானப் போக்குவரத்துச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய தனிநபர்களுக்கும், சிவில் விமானப் போக்குவரத்துச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய நிறுவனங்களிற்கும் வேறுபட்ட வகையுடையதான அனுமதிப்பத்திரங்கள் மற்றும் தரங்கள் வரையறுக்கப்பட்ட செல்லுபடிக் காலத்துடன் வழங்கப்படுகின்றன. தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் திறமைகள் மீதான தொடர்ச்சியான பரிசீலனையானது சீரான முறையில் அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியினைப் புதுப்பித்தலினூடாக உறுதி செய்யப்படுகின்றது. தனிநபர் அனுமதிப்பத்திரங்களின் விமானப் போக்குவரத்துப் பயிற்சிக்கல்லூரி அனுமதிப்பத்திரங்களின் வேறுபட்ட வகைகளில் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் போன்றனவற்றுடன் தொடர்புடைய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு குறித்த பகுதியானது அனுமதிப்பத்திரம் மற்றும் தரப்படுத்தல்களை வழங்குதல், புதுப்பித்தலுக்கான ஒழுங்குவிதிகள் மற்றும் செய்முறையில் குறிப்பிட்டுள்ள தேவைப்பாடுகளை தனிநபர் மற்றும் பயிற்சியளித்தல் நிறுவனங்கள் திருப்திகரமான முறையில் நிறைவேற்றியுள்ளனவா என்பதனை ஆராய வேண்டியுள்ளது. முன்பிருந்த முறையில் இச் செயற்பாடுகள் அனைத்தும் உடலுழைப்பினால் மேற்கொள்ளப்பட்டன.

விமானப் போக்குவரத்துத்துறையில் பொதுமக்களுக்கு வினைத்திறனான மற்றும் விரைவான சேவையை வழங்கும் பொருட்டு தனிநபர் அனுமதிப்பத்திரப் பகுதியானது தன்னிச்சையாகச் செயற்படுத்தப்படத் தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பில் குறித்த பகுதியானது சம்மந்தப்பட்ட தரப்பினருடன் கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை மேற்கொண்டு முன்மொழிவுகளைப் பெற்றுள்ளதுடன், முறைமைக் கற்றலை மேற்கொண்டு குறித்த மென்பொருளை உருவாக்குவதற்கான கேள்விப்பத்திரங்களைக் கோரியுள்ளது. இறுதியில் 2012 ஜனவரியில் இந்த தன்னிச்சை வேலைத்திட்டத்தினை ஆரம்பிக்கும் பொருட்டு கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணினிக் கல்லூரியுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது.

### மருத்துவச் சோதனைக்கான வைத்தியசாலையொன்றினை நியமித்தல்

விமானிகள் மற்றும் வான் வழிகாட்டுனர்களுக்கு வேண்டப்படும் மருத்துவப்பரிசோதனைகள் மற்றும் ஏனைய சோதனைகளுக்கான சேவைகளை வழங்கும் பொருட்டு அதிகாரசபையானது வரையறுக்கப்பட்ட டேடன்ஸ் கொஸ்பிட்டல் கம்பனி மற்றும் ஆஸிரி சேஜிகல்ஸ் கொஸ்பிட்டல் ஆகியனவற்றை முறையே 2006 மற்றும் 2007 இல் நியமித்தது.

2011 இல், அதிகாரசபையானது மேற்குறிப்பிட்ட இரண்டு வைத்தியசாலைகளுக்கு மேலதிகமாக சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு வரையறுக்கப்பட்ட லங்கா கொஸ்பிட்டல் கம்பனியுடன் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டிருந்தது. இவ் ஒப்பந்தமானது விமானிகளுக்கும் வான்வழிகாட்டுனர்களுக்கும் தமது வைத்தியப் பரிசோதனைகள் மற்றும் ஏனைய சோதனைகளை மேற்கொள்ள மேலதிக தெரிவொன்றினை வழங்கும் பொருட்டு செய்யப்பட்டுள்ளது.

## செயற்பாட்டுப் பகுதி

### வெளிநாட்டு வான் செயற்பாட்டாளர் சான்றுப்படுத்தல்

மேலும் ஐந்து (5) விமான சேவைகளுக்கு வான்செலவு ஒழுங்குவிதிக் கோவை பந்தி 251 இன் பிரகாரம் வெளிநாட்டு வான் செயற்பாட்டாளர் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இதுவரையிலும் மொத்தமாக ஐம்பது (50) அனுமதிப்பத்திரங்கள் இது தொடர்பில் வழங்கப்பட்டுள்ளன.

### மாதிரிகைகளுக்கான அனுமதிகள்

செயற்பாடுகள் பகுதியானது உள்நாட்டுச் செயற்பாட்டாளர்களைப் பரிசோதித்தல் மற்றும் விமானப்பறப்புக் குழுவினருக்கான பயிற்சியினை வழங்கல் போன்ற நோக்கங்களுக்காக சிறிலங்கன் விமான சேவையில் அமைக்கப்பட்ட மாதிரியொன்றிற்கு அனுமதியளித்திருந்தது.

### நியமனம் பெற்ற பரிசோதனை விமானிகள்

சிறிலங்கன் விமானசேவை மற்றும் வரையறுக்கப்பட்ட மிஹின்லங்கா கம்பனி என்பனவற்றில் விமானிகளாகக் கடமைபுரியும் ஐவர் (5) நியமனம் பெற்ற பரிசோதனை விமானிகளாகச் செயற்படுவதற்கு அதிகாரசபையுடன் இணைக்கப்பட்டார்கள்.

### வான் செயற்பாட்டாளர் சான்றுப்படுத்தல்

செயற்பாட்டுப்பகுதியானது செயற்பாடுகளுக்கென வரிசைப்படுத்தப்பட்ட இரண்டு ஹெலிகொப்டருடன் ஹெலிகொப்டர் செயற்பாடுகளில் ஈடுபடவென செனொக் விமானப் போக்குவரத்து சேவைகள் கம்பனிக்கு வான் செயற்பாட்டாளர் சான்றிதழை வழங்கியுள்ளது. இந்தப் பகுதியானது மேலும் மூன்று விண்ணப்பங்களை (Red Rock Ventures, Green Island Marketing, John keels Holdings) வான்செயற்பாட்டுச் சான்றிதழ்களுக்காகப் பெற்றுள்ளது என்பதுடன் அவ் விண்ணப்பங்கள்

செய்முறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. மேலும் குறித்த பகுதியானது எரிபொருள் அகழ்வு ஆராய்ச்சிப் பணிகளுடன் தொடர்புடைய கரையிலிருந்து விலகிய செயற்பாடுகளுக்காக ஹெலிகொப்டர் ஒன்றைப் பய்படுத்த சிபார்சுசெய்துள்ளது. இதற்கு மேலதிகமாக செயற்பாட்டாளர்கள் தமது விமான வரிசைகளை மேம்படுத்தியுள்ளதுடன், இப் பகுதியானது சர்வதேச செயற்பாடுகளில் ஈடுபடுவதற்காக 06 பாரிய வானூர்திகள் மற்றும் உள்நாட்டுச் செயற்பாடுகளுக்காக 03 சிறிய வானூர்திகளைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

**பின்வரும் செயற்பாட்டாளர்கள் வழிகாட்டல் நூல் மீதான திருத்தங்கள் மீள்பார்வை செய்யப்பட்டதுடன் அனுமதியளிக்கப்பட்டது.**

விமானப்பறப்பு செயற்பாட்டு வழிகாட்டல் - மீள்பார்வை 02 - மிஹின்லங்கா

விமானப்பறப்பு செயற்பாட்டு வழிகாட்டல் - மீள்பார்வை 03 - மிஹின்லங்கா

விமானப்பறப்பு செயற்பாட்டு வழிகாட்டல் - மீள்பார்வை 01 - எக்ஸ்போ ஏவிஜேஷன்

விமானப்பறப்பு செயற்பாட்டு வழிகாட்டல் - மீள்பார்வை 02 - எக்ஸ்போ ஏவிஜேஷன்

விமானப்பறப்பு செயற்பாட்டு வழிகாட்டல் - மீள்பார்வை 04 - மிஹின்லங்கா

விமானப்பறப்பு செயற்பாட்டு வழிகாட்டல் - மீள்பார்வை 05 - மிஹின்லங்கா

விமானப்பறப்பு செயற்பாட்டு வழிகாட்டல் - மீள்பார்வை 10 மற்றும் 13 - சிறிலங்கன் விமானசேவை

விமானப்பறப்பு செயற்பாட்டு வழிகாட்டல் - மீள்பார்வை 06 - மிஹின்லங்கா

விமானப்பறப்பு செயற்பாட்டு வழிகாட்டல் - மீள்பார்வை 03 - எக்ஸ்போ ஏவிஜேஷன்

**உள்நாட்டுச் செயற்பாட்டாளர்களின் பின்வரும் பயிற்சிநெறித் திட்டங்கள் செயற்பாட்டுப்பகுதியால் மீள்பார்வை செய்யப்பட்டு அனுமதியளிக்கப்பட்டன.**

விமானிப் பயிற்சிநெறி ஒப்பந்தம் சார்ந்த மாணவ நிலையினருக்கான வழிகாட்டி - 06

வெளிநாட்டவரைக் கொண்ட பணிக்குழுவினருக்கான வழிகாட்டி

ETOPS வழிகாட்டி

A320- கட்டளையிடற் கற்கைநெறி - சிறிலங்கன் விமானசேவை

A330-A340 மீள் செயற்பாட்டுப் பயிற்சிநெறி - சிறிலங்கன் விமானசேவை

SOP வழிகாட்டி - சிறிலங்கன் விமானசேவை

விமானப் பறப்பை உருவாக்கல் வழிகாட்டி - எக்ஸ்போ ஏவியேஷன்

SMS வழிகாட்டி - ஷெனொக் ஏவியேஷன்

பாரம் மற்றும் சமநிலை பேணல் - மீள்பார்வை - 07 - சிறிலங்கன் விமானசேவை

A320 நேரடி நுழைவு முதலாம் தர உத்தியோகத்தர் பயிற்சிநெறி (புதிய முறைமை) - சிறிலங்கன் விமானசேவை

A320 இளம் தலைமுறைமுதலாம் தர உத்தியோகத்தர் பயிற்சிநெறி -

பாரம் மற்றும் சமநிலை பேணல் மீளாய்வு 08 - சிறிலங்கன் விமானசேவை

A320 சீரான ஒழுங்குமுறை மாற்றீட்டுப் பயிற்சிநெறி - மிஹின்லங்கா

ETOPs தள பயிற்சிநெறி வழிகாட்டி - சிறிலங்கன் விமானசேவை

A320 மீள் செயற்பாட்டுப் பயிற்சிநெறி - சிறிலங்கன் விமானசேவை

ஒப்பந்தப்படியான வகைத்தரப்படுத்தல் மாணவ நிலை விமானி பயிற்சிநெறி வழிகாட்டி - மிஹின்லங்கா

நிலைமாற்றற் பயிற்சிநெறி வழிகாட்டி (A320 நிலைமாற்றல் பயிற்சிநெறி SFT-CO4) தெற்காசியா விமானப் போக்குவரத்துச் சேவைகள்

A320 வகைத் தரப்படுத்தற் பயிற்சிநெறி - சிறிலங்கன் விமானசேவை

A320 மீள் செயற்பாட்டுப் பயிற்சிநெறி - சிறிலங்கன் விமானசேவை

விமானப்பறப்பை உருவாக்கற் பயிற்சிநெறி - எக்ஸ்போ ஏவியேஷன்

பயிற்சிநெறி வழிகாட்டி 06 - செஸ்னா தளப் பிரயாணிகள் - எக்ஷ்போ ஏவியேஷன்

A320 நிலைமாற்றற் பயிற்சிநெறி - தெற்காசியா விமானப் போக்குவரத்துச் சேவைகள்

## USOAP ஆய்வு

எட்டு (8) கண்டுபிடிப்புகளுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட சீராக்கல் நடவடிக்கைகள் ICAO ஆல் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், இரண்டு சீராக்கல் நடவடிக்கைகள் 2012 இல் அமுலாக்கஞ் செய்யப்பட வேண்டிய தேவையினைக் கொண்டுள்ளன.

## வான்தகைமைப் பகுதி

### தொடர்ச்சியான வான்தகைமை

வான்தகைமைப் பகுதியானது எயார் பஸ் A320, A330, மற்றும் A340 வகையுடைய வானூர்திகளை உள்ளடக்கிய

மொத்தமாக 19 வானூர்திகளைக் கொண்ட சிறிலங்கன் விமானசேவையின் வானூர்தித் தொகுதிகளுக்கு தொடர்ச்சியான வான்தகைமையினை பேணிக்கொள்வதற்குத் தேவையான சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டது. மேலும் இப் பகுதியானது பொது விமானப் போக்குவரத்து வானூர்திகள் மீது சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. இவை மட்டுமன்றி மொத்தமாக 18 ஆரம்பநிலை வான்தகைமைச் சான்றிதழ்களை வழங்கியிருந்ததுடன், 27 வான்தகைமைச் சான்றிதழ்களைப் புதுப்பித்துள்ளது.

## வானூர்திப் பராமரிப்பு நிறுவனங்கள்

இரண்டு (2) வானூர்திப் பராமரிப்பு நிறுவனங்களுக்கான ஆரம்பநிலை அனுமதிகள், வேண்டப்படும் தகைமை மதிப்பீடுகளை மேற்கொள்ளப்பட்ட பின்னர் வழங்கப்பட்டிருந்ததுடன், இவை தவிர நாற்பது (40) வெளிநாட்டுத் தள மற்றும் சேவைப்பராமரிப்பு நிறுவனங்களுக்கும், மூன்று (3) உள்நாட்டுப் பராமரிப்பு நிறுவனங்களுக்கும் 2011 இற்காக இவ் அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்பட்டது.

## வானூர்திப் பதிவு

மீள்பார்வைக்கு உட்படுத்தப்படும் வருடத்தில், CAASL ஆனது பதின்மூன்று (13) வானூர்திகளுக்கான ஆரம்பநிலைப் பதிவினை மேற்கொண்டுள்ளதுடன், இருபத்திநான்கு (24) வானூர்திகளுக்கான பதிவுச் சான்றிதழ்கள் புதுப்பிக்கப்பட்டன. இரண்டு (2) வானூர்திகள் செயற்பாட்டாளர்களின் வேண்டுகோளிற் கிணங்க இலங்கைப் பதிவிலிருந்து நீக்கப்பட்டன.

## பாதுகாப்புச் சோதனை நடவடிக்கை

அனுமதி வழங்கப்பட்ட ராம்ப் சோதனை அட்டவணையினை அனுசரித்து, உள்நாட்டு வானூர்திகள் தொடர்பில் முப்பத்தியாறு (36) ராம்ப் சோதனைகளும், வெளிநாட்டுச் செயற்பாட்டாளர்கள் தொடர்பில் இருபது (20) சோதனைகளும், பொது விமானப் போக்குவரத்துத் தொடர்பில் ஒன்பது (9) சோதனைகளும் 2011 காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டன.

## விஸா பரிந்துரைகள்

CAASL ஆனது தளப் பொறியியலாளருக்கு தரையிறக்கல், புறக்குறிப்பிடல், மற்றும் தங்குமிட விஸா என்பவற்றிற்கான பரிந்துரைகளை வழங்கியிருந்தது. மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதியில், CAASL முப்பத்திமூன்று (33) தளப் பொறியியலாளருக்கான பரிந்துரைகளையும், நாற்பத்தைந்து (45) பயிற்சி மாணவர்களுக்கான பரிந்துரைகளையும் வழங்கியிருந்தது.

## பராமரிப்புப் பொறியியலாளருக்கான அனுமதிப்பத்திரம்

வான்தகைமைப் பகுதி நான்கு (4) AME(BL) பரீட்சைகளையும் மூன்று (3) AME பரீட்சைகளையும் கைத்தொழிலில் பணியாற்றி வரும் தனிநபர்களுக்கு வானூர்திப் பராமரிப்புப் பொறியியலாளர் அனுமதிப்பத்திரம் வழங்கவென நடாத்தியிருந்தது. மேலும் 2011 இல் வான்தகைமைப் பகுதியால் AME (BL) அனுமதிப்பத்திரத்திலிருந்து AML அனுமதிப் பத்திரத்திற்கு மாற்றீடு செய்யும் இரண்டு (2) பரீட்சைகளும் ஆறு (6) தரப்படுத்தற் பரீட்சைகளும் நான்கு (4) உறுதிப்படுத்தற் பரீட்சைகளும் நடாத்தப்பட்டன.

## உதிரிப் பாகங்களுக்கான அனுமதி

DGCA வான்தகைமைப் பரிந்துரைகளுக்கமைய வானூர்தி உதிரிப்பாகங்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி என்பவற்றிற்கு அனுமதியினை வழங்கியிருந்தார். இக் காலப்பகுதியில், வான்தகைமைப் பகுதியானது முப்பத்தியொரு (31) விண்ணப்பங்களை எக்ஸ்போ ஏவியேஷன் தொடர்பிலும், இருபத்தியிரண்டு (22) விண்ணப்பங்களை டெக்கான் ஏவியேஷன் தொடர்பிலும், எட்டு (8) விண்ணப்பங்களை ஏசியன் ஏவியேஷன் தொடர்பிலும், பத்த (10) விண்ணப்பங்களை தயா ஏவியேஷன் தொடர்பிலும், இருபத்தியொன்பது (29) விண்ணப்பங்களை கொஸ்மோஸ் ஏவியேஷன் சேவைகள் தொடர்பிலும், ஐந்து (5) விண்ணப்பங்களை ஸ்கை லைன் ஏவியேஷன் தொடர்பிலும், பதினைந்து (15) விண்ணப்பங்களை ஒபின் ஸ்கைஸ் தொடர்பிலும், மேலும் இரண்டு (2) விண்ணப்பங்களை ஏறோலங்கா தொடர்பிலும் பரிந்துரை செய்திருந்தது.

# கூட்டாண்மைப் பிரிவு

## வான் போக்குவரத்து மற்றும் சட்ட விவகாரங்கள் பகுதி

### வான் போக்குவரத்துப் புள்ளி விபரங்கள்

CAASL இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்துச் செயற்பாடுகள் பற்றிய தரவுகள் மற்றும் தகவல்களை உரிய நேரத்திற்கு வழங்குவதனூடாக ICAO இற்கு தனது கடமையை நிறைவேற்றுகின்றது.

### விமான சேவைச் செயற்பாட்டாளர்கள்

மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதியில், சில வெளிநாட்டு வான்சேவைகள் கொழும்பிற்கான தமது செயற்பாட்டை மீள ஆரம்பித்த அதேவேளை, மேலும் பல புதிய விமான சேவைகள் இலங்கைக்கான செயற்பாட்டை ஆரம்பித்துள்ளன. ஏரோ ஸ்விற் (உக்ரையின்) இலங்கைக்கான செயற்பாட்டை ஆரம்பித்துள்ள புதிய அட்டவணைப்படுத்தப்பட்ட விமானசேவையாக இருப்பதுடன், மீள்பார்வைக்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதியில் ஏரோபுளொட் (AEROFLOT) இலங்கைக்கான விமான சேவையை மீள ஆரம்பித்தது. உக்ரையின் நாட்டினது என்ரர் எயார் (ENTER AIR) 2011 இல் புதிய அட்டவணைப்படுத்தப்படாத செயற்பாட்டாளராவார். 2011 இன் இறுதிக் காலப் பகுதியில் ஆரம்பிக்கத் திட்டமிட்டிருந்த தாய் எயார் ஏசியா (Thai Air Asia) தற்போது மார்ச் 2012 முதல் தனது சேவையை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளது. 2011 காலப்பகுதியில் மிஹின்லங்கா விமானசேவையானது தனது செயற்பாடுகளை இந்தோனேசியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு விஸ்தரித்துள்ளதுடன், சிறிலங்கன் விமானசேவையானது ஜப்பான் மற்றும் சீனா போன்ற நாடுகளுக்கான செயற்பாடுகளின் எண்ணிக்கையினை அதிகரித்துள்ளது. மேலும் சூரிஸிக்கான செயற்பாட்டிற்காகப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

### பயணிகள் மற்றும் சரக்கு நகர்வுகள்

மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதியில் பயணிகள் மற்றும் சரக்குகள் நகர்வுகளில் கணிசமான அளவு முன்னேற்றம் பதிவு செய்யப்பட்டள்ளது. BIA இற்கு வருகை தந்த மற்றும் BIA இலிருந்து புறப்பட்ட பயணிகள் எண்ணிக்கை முறையே 3,079,126 மற்றும் 3,095,089 ஆக அமைகின்றது. இப் பயணிகளில் சிறிலங்கன் விமானசேவைக்கான சந்தைப்பங்கானது முறையே 1,508,288 மற்றும் 1,511,333 ஆக அமைகின்றது. இது முறையே ஐம்பது (50%) மற்றும் நாற்பத்தொன்பது (49%) வீதங்களாகும்.

மேலும், 2011 இல் BIA இல் ஏற்றப்பட்ட மொத்த சரக்குகள் 95,411 மெற்றிக்தொனாக இருப்பதுடன், இவற்றுள் சிறிலங்கன் விமான சேவையானது 43,516 மெற்றிக்தொன்னை அதாவது இது மொத்த சந்தைப்பங்கில் நாற்பத்தியாறு (46%) வீதத்தினை ஏற்றியுள்ளது. BIA இல் இறக்கப்பட்ட சரக்குத் தொடர்பில் 63,161 மெற்றிக்தொன் மொத்த நிறையில் சிறிலங்கன் விமான சேவையானது 37,890 மெற்றிக்தொன்னை அதாவது மொத்த சந்தைப்பங்கில் அறுபது (60%) வீதத்தினை இறக்கியுள்ளது.

### இடைநிற் பயணிகள்

BIA இனை இப் பிராந்தியத்தில் விமான நிலையங்களின் மையங்களில் ஒன்றாக அபிவிருத்தியடையச் செய்ய வேண்டுமெனில், விமான நிலையத்தினூடாகப் பயணிக்கும் இடைநிற் பயணிகளின் எண்ணிக்கையினை அதிகரிக்க, மேம்படுத்த, மற்றும் அபிவிருத்தி செய்ய வேண்டியது ஒரு முக்கிய விடயமாகும்.

BIA இல் இடைநிற் பயணிகளாக வருகைதந்த மொத்தப் பயணிகளின் எண்ணிக்கை 710,867 ஆக இருப்பதுடன், இது மொத்தமாக வருகைதந்த பயணிகளில் இருபத்திநான்கு (24%) ஆகும். மேலும் சிறிலங்கன் விமான சேவையானது இவ் இடைநிற் பயணிகளில் தொண்ணூற்றெட்டு (98%) வீதத்தினைக் கையாண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### உள்நாட்டு விமானப் போக்குவரத்து

மீள்பார்வைக்கு உட்படுத்தப்பட்ட வருடத்தில், அட்டவணைப்படுத்தப்பட்ட பயணச் சேவைச் செயற்பாடுகளில் எந்தவொரு உள்நாட்டுச் செயற்பாட்டாளரும் ஈடுபடவில்லை

என்பதுடன், மேலும் இக் காலப்பகுதியில் யாழ்ப்பாணம்-இரத்மலானை ஆகிய இடங்களுக்கு 94 பயணிகளைக் கொண்டதான ஒரு சிறிய அதிகரிப்புக் காணப்பட்டது. 2004 யூனில் ஹெலிகொப்டர் சேவையை ஆரம்பித்த டெக்கான் ஏவியேஷன் நாட்டின் பல பயண இலக்குகளுக்கு செயற்பாட்டினை விரிவுபடுத்தியிருந்தது. கொஸ்மோஸ் ஏவியேஷன் குறித்த வருடத்தில் தங்களது ஹெலிகொப்டர் செயற்பாட்டினை மேற்கொண்டிருந்தது. செனொக் ஏவியேஷன் 2011 இன் இறுதியில் ஹெலிகொப்டர் செயற்பாட்டினை ஆரம்பித்தது.

நாட்டின் சுற்றுலாத்துறையில் ஏற்பட்ட திடீர் வளர்ச்சியுடன், சிறிலங்கன் விமானசேவையானது 2011 முழுவதும் தனது வாடகை வானூர்திச் செயற்பாட்டினைத் தொடர்ந்திருந்தது. தயா ஏவியேஷன் தனியார் மற்றும் வர்த்தகச் செயற்பாடுகளை மேற்கொண்டிருந்தது.

## பயண முகவர்கள்

1992 இன் வான்செலவு (விஷேட ஏற்பாடு) சட்டத்தின் கீழும், அதற்கமைய மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழும் இலங்கையில் செயற்படும் அனைத்துப் பயண முகவர்களும் வருடாந்தம் புதுப்பித்தலுக்கு உட்படும் CAASL இனால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரமொன்றினைப் பெற்றுக்கொள்ள வேண்டப்படுகின்றனர். இந் நோக்கத்திற்கென கணிசமான தொகையினர் பயண முகவர்களால் வேலைவாய்ப்பிற்கென உள்வாங்கப்படுகின்றார்கள் என்பதுடன், பின்வரும் அட்டவணையானது இத் துறையால் வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்படுகின்றன என்பதனைக் காட்டுகின்றது.

## வான் சேவைகள் பேச்சுவார்த்தை

CAASL வெளிநாட்டு வானியல் நிறுவனங்களுடன் நடாத்திய இருதரப்பு வான்சேவைகள் பேச்சுவார்த்தைகளில் பங்குகொண்டுள்ளது. இவ் வகையுடைய பேச்சுவார்த்தைகளில் ஐந்து (5) தனிப்பட்ட நாடுகளுடன் நடாத்தப்பட்டதுடன், CAASL ஆனது இந்தியாவில் இடம்பெற்ற வான்சேவைப் பேச்சுவார்த்தைகள் தொடர்பான சர்வதேச மகாநாட்டில் பங்குகொண்டது. பின்வருவன இப் பேச்சுவார்த்தையின் பெறுபேறுகளாக அமைந்திருந்தன.

## அதற்குரிய நாடுகளுடன் இடம்பெற்ற இருதரப்புப் பேச்சுவார்த்தைகள்

» தென்னாபிரிக்கா (இது மார்ச் மாதம் கொழும்பில் இடம்பெற்றது) - இரு நாடுகளுக்கிடையேயும் வான்சேவை ஏற்பாடுகளைப் படிப்படியாக நவீன மயப்படுத்தும் நோக்குடன் புதிய ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டதுடன், இரு தரப்பினரும் கிழமையொன்றில் ஏழு தடவைகளுக்கு மேற்படாது அமையும் வகையில் போக்குவரத்து உரிமையை வழங்குவதென உடன்பாடு எட்டப்பட்டது.

» இந்தியா (இது ஏப்ரல் மாதம் டில்லியில் இடம்பெற்றது) - இரு பகுதியினரதும் அனுமதிக்கப்பட்ட விமான சேவைகளுக்கு கிழமையொன்றில் நூற்றுப்பன்னிரண்டு தடவைகளுக்கு மேற்படாது அமையும் வகையில் போக்குவரத்து உரிமையை வழங்குவதென இரு நாடுகளிடையேயும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. சென்னைக்கான அனேகமான புதிய தடவைகள் இலங்கைச் செயற்பாட்டாளர்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டது.

» ரஷ்யா (இது யூலை மாதம் மொஸ்கோவில் இடம்பெற்றது) - ஆபத்தற்றதன்மை, பாதுகாப்பு, நெரிசல், பன்முகநிலை, மற்றும் வர்த்தக சந்தர்ப்பங்கள் என்பன சம்மந்தமான விதிகள் மீதான தொடர்புகொள்ளல் ஊடாக இரு நாடுகளுக்கும் கிடையில் சாதகமான தன்மையுடைய நவீனமயப்படுத்தப்பட்ட வான் சேவைகளை நோக்காகக் கொண்ட இருதரப்பு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது.

» பிலிப்பைன்ஸ் (இது யூலை மாதம் மணிலாவில் இடம்பெற்றது) - இருதரப்பு உடன்படிக்கையொன்று இருநாடுகளுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்டது. இதன்படி கொழும்பிற்கும் மணிலாவிற்குமிடையில் கிழமையொன்றிற்கு நான்கு தடவைகள் (கிழமையொன்றிற்கு 600 ஆசனங்கள்) இற்கு மேற்படாத வகையில் போக்குவரத்து உரிமைகள் அதிகரிக்கப்பட்டது. மேலும் கொழும்பிற்கும் மணிலா தவிர்ந்த எந்தவொரு மையத்திற்கும் எண்ணிக்கையற்ற தடவைகளுடனும், கொள்ளளவுடனும் பறப்பினை மேற்கொள்ள முடியும் எனவும் இணங்கிக் கொள்ளப்பட்டது.

## 2011 ஒக்டோபரில் இந்தியா- மும்பையில் ICAN மாநாட்டில் இருதரப்புப் பேச்சுவாத்தைகள் இடம்பெற்றன

17-22 ஒக்டோபர் 2011 இல் இந்தியா - மும்பையில் இடம்பெற்ற வான்சேவைகள் பேச்சுவார்த்தைகள் எனும் பொருளில் ICAO மாநாடு ஒன்றில் முதன்முறையாக இலங்கை பங்குபற்றியது. இலங்கை பங்கு கொண்ட கூட்டங்கள் சில பின்வருமாறு அமைந்திருந்தது.

» சௌதி அரேபியா - நாடொன்றிற்கான கிழமை ரீதியிலான வருகைகளின் எண்ணிக்கை 14 ஆக உயர்த்தப்பட்டதுடன், வான் சேவைகளின் பன்முக நிலை இணங்கிக்கொள்ளப்பட்டது.

» கனடா- மே 2012 இல் இரு பகுதியினரும் தமக்கிடையில் வான்சேவை உடன்படிக்கையொன்றைக் கலந்துரையாட இணங்கிக் கொண்டனர்.

» பிரான்ஸ்- இரு தரப்பும் ஏற்கனவேயுள்ள

உடன்படிக்கையினை தரமுயர்த்துவதற்கான கலந்துரையாடலுக்கு இணங்கிக்கொண்டனர்.

» போலந்து - ஆபத்தற்றதன்மை, பாதுகாப்பு, நெரிசல், பன்முகநிலை, மற்றும் வர்த்தக சந்தர்ப்பங்கள் என்பன சம்மந்தமான விதிகள் மீதான தொடர்புகொள்ளல் ஊடாக இரு நாடுகளுக்கும் கிடையில் சாதகமான தன்மையுடைய நவீனமயப்படுத்தப்பட்ட வான் சேவைகளை நோக்காகக் கொண்ட இருதரப்பு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது.

» ஆஸர்பைஜான்- இரண்டு நாடுகளுக்கிடையிலும் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டதுடன், இருதரப்பினரும் மற்றைய தரப்பு நாட்டினருடைய ஒழுங்கு விதிமுறைகளை அனுசரித்து செயற்படுவது என்ற நிபந்தனையின் கீழ் இரு நாடுகளிற்கிடையிலும் அட்டவணைப்படுத்தப்படாத வான் போக்குவரத்தை அனுமதிப்பதென இணங்கிக் கொண்டன. எதிர் காலத்தில் கைச்சாத்திடுவதற்காக ஒரு மாதிரி வான் சேவைகள் ஒப்பந்தம் இரு தரப்பினராலும் கலந்துரையாடப்பட்டது.

» நோர்வே/ டென்மார்க்/ சுவீடன் கூட்டிணைந்த பரவலாக்கம் - இருதரப்பு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது. இதில் இலங்கை ஐரோப்பிய ஒன்றிய பக்க ரீதியான உடன்படிக்கையில் கைச்சாத்திடும் பட்சத்தில், அது உத்தியோக பூர்வமாக ஸ்கன்டிநேவியன் பரவலாக்கலுக்கு அறிவிக்கப்படும் என்பதுடன் நுரு ஒதுக்கீட்டு வாசகங்களுடன் தொடர்புடைய விடயங்கள் கலந்துரையாடப்படும்.

» ஐக்கிய அரபு இராச்சியம்- ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. மேலும் தற்காலிக செயற்பாட்டு அனுமதிகள் உறுதிப்படுத்தப்பட்டதுடன், உத்தியோக பூர்வமாக இலங்கைப் பிரதிநிதிகள் மத்தளை விமான நிலையத்தில் செயற்பாடுகளை ஆரம்பிக்குமாறு UAE விமான சேவைக்கு அழைப்பு விடுத்திருந்தனர்.

» ஸ்பெயின்- வான் போக்குவரத்துச் சம்மந்தமான தொடர்பொன்றினை எதிர்காலத்தில் ஆரம்பிக்கும் பொருட்டு இலங்கை மற்றும் ஸ்பெயின் நாடுகளுக்கிடையில் வான் சேவைகள் உடன்படிக்கை ஒன்றினை எட்டுவது சம்மந்தமான ஆரம்பக்கட்ட பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

» ஜெமிகா- சாதகமான பேச்சுவார்த்தைகள் இருதரப்பு விமானப் போக்குவரத்து தொடர்புகளை ஆரம்பித்தல் மற்றும் முன்னெடுத்தல் சம்மந்தமாக இடம்பெற்றன.

» ஐஸ்லாந்து- இரண்டு தரப்பினரிடையேயும் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டதுடன், இரண்டு நாடுகளுடைய விமான சேவைகளும் இயலுமானவரை விரைவாக ஊழுனுநு பரிமாற்றம், அட்டவணைப்படுத்தப்படாத, மற்றும் சரக்குச் செயற்பாடுகளை ஆரம்பிக்கத் தூண்டுதல் செய்யப்பட்டன.

## EU கிடை ரீதியான உடன்படிக்கை

இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள தனது இரு பங்காளிகளுடன் அதன் விமானப் போக்குவரத்து உறவு நிலையுடன் தொடர்புடைய குறிப்பிட்ட விடயங்கள் சம்மந்தமாக 2011 ஒக்டோபரில் ஐரோப்பிய ஒன்றிய கிடை ரீதியான உடன்படிக்கையினை ஆரம்பித்தது. ஐரோப்பிய ஒன்றிய கிடை ரீதியான உடன்படிக்கையில் கையொப்பமிட்ட அனேகமான நாடுகளுடன் இலங்கை இணைந்திருந்த அதே சமயம், அதாவது ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடன் இலங்கை இருதரப்பு விமானப் போக்குவரத்து உடன்பாட்டை வைத்திருக்கும் அதே சமயம், இலங்கையானது ஐரோப்பிய ஒன்றியத்தின் சட்ட ஏற்பாடுகளுடன் தொடர்பினைக் கொண்டுள்ளது.

## வான் சேவைகள் ஒதுக்கீடு மற்றும் கட்டணங்கள் அறவிடுகைக் கற்கைநெறி

2009 இல் ஆரம்பிக்கப்பட்ட வான் சேவைகள் ஒதுக்கீடு மற்றும் கட்டணங்கள் அறவிடுகைக் கற்கைநெறியானது போக்குவரத்துக் கைத்தொழிலுக்கு மனித வளத்தினை வழங்குவதில் உறுதியான செய்முறையொன்றினை மேற்கொண்டு வருகின்றது. 2011 ஒக்டோபரில் 4 ஆவது பிரிவினைச் சேர்ந்த மாணவர்கள் தமது கற்கைநெறியினை நிறைவு செய்திருந்தனர். 2012 ஜனவரியில் 5 ஆவது பிரிவானது ஆரம்பிக்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

## SLOT ஒழுங்கியக்கம்

BIA இல் SLOT இன் ஒதுக்கீடானது குறித்த வருடத்தில் SLOT குழுவில் இணைத்துக் கொள்ளப்பட்ட விடயங்களின் ஏற்பாடுகளுக்கமைய மேற்கொள்ளப்படுகின்றது. நாட்டில் நிலவும் சாதகமான சூழலில், BIA ஆனது அனேகமான விமான சேவைகளால் மற்றும் பயணிகளால் விரும்பப்படும் மையமாக உருவாகிவருகின்றது. எனவே எதிர்காலத்தில் கொள்ளளவு வரையறைகள் இங்கு காணப்படலாம்.

## பொதுப் பரிசோதகர் வேலைத்திட்டம்

BIA இல் இடம்பெறும் வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் பிரயாண முகவர் என்பவற்றை சோதனையிட்டுக் கொள்வதற்கென பொதுப் பரிசோதகர்கள் குழுவொன்று உருவாக்கப்பட்டது. சீ.ஏ.ஏ இல் ஏற்கனவேயுள்ள நிர்வாகத்தர ஊழியர்கள் பொதுப் பரிசோதகர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்றுவிக்கப்படுகின்றார்கள்.

## APIG (விமானத்தள நடவடிக்கைகளை முன்னேற்றும் குழு)

கைத்தொழில் நலன் விரும்பிகளால் விடுக்கப்பட்ட விடயங்களை அடையாளங்கண்டு கொள்வதற்கு BIA இன் செயற்பாடுகளை அவதானித்துக் கொள்ள குறிப்பிட்ட நபர்களைக் கொண்டதாக இக் குழுவானது DGCA ஆல்

உருவாக்கப்பட்டது. இக் குழுவானது குறித்த பகுதியால் கையாளப்பட்டு வருவதுடன் ஆலோசனையளிக்கப்பட்ட வளர்ச்சியை நோக்காகக் கொண்டு அவதானங்களானது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

### நுகர்வோர் முறைப்பாடுகளைக் கையாளல்

2011 ஒக்டோபரில் நுகர்வோர் விவகாரங்கள் அதிகாரசபையுடன் இணைந்து குறித்த பகுதியானது நுகர்வோர் முறைப்பாடுகளைக் கையாள்வதற்கான முறைமையொன்றினை வடிவமைத்திருந்தது. விமான சேவை நிறுவனங்களுக்கு/ பயண முகவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட அனேகமான முறைப்பாடுகள் இதன் பின்னர் தொழில் சார் நோக்குடன் தீர்த்து வைக்கப்பட்டன. விமானப் போக்குவரத்துக் கைத்தொழில் மற்றும் பிரயாணம் மேற்கொள்ளும் பொதுமக்களிடமிருந்தும் சாதகமான பின்னூட்டி கிடைக்கப்பெற்றுள்ளது.

### வான் போக்குவரத்துக் கைத்தொழில் மற்றும் வர்த்தகத் திணைக்களம் என்பனவற்றின் நலன் விரும்பிகளுடனான கூட்டங்கள்

குறித்த பகுதியானது வான் போக்குவரத்துக் கைத்தொழிலின் சாதகமான அபிவிருத்தியொன்றினை உறுதிப்படுத்தும் பொருட்டு விமான சேவைப் பிரதிநிதிகள் சபை, விமான சேவைப் பிரதிநிதிகளின் இலங்கைச் சம்மேளனம், இலங்கை பயண முகவர் சம்மேளனம், IATA முகவர் சம்மேளனம், மற்றும் வர்த்தகத் திணைக்களம் போன்ற அரசாங்க நிறுவனங்கள் என்பன போன்ற கைத்தொழிற் பங்காளிகளுடன் ஒழுங்குமுறை கொண்ட தொடரான கூட்டங்கள் நடாத்தி வருகின்றது.

### மொறட்டுவைப் பல்கலைக்கழக மாணவ நிலைப் பட்டதாரிகளுக்கான உள்ளகப் பயிற்சிநெறி

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க, CAASL ஆனது 2011 இல் ஆறு மாதங்கள் CAASL இல் உள்ளகப் பயிற்சியொன்றினைப் பெற்றுக் கொள்வதற்கு மூன்று (3) மாணவநிலைப் பட்டதாரிகளுக்கு அனுசரணை வழங்கியிருந்தது. இவ் வேலைத்திட்டத்தினைக் குறித்த பகுதியானது ஒருங்கிணைப்புச் செய்திருந்ததுடன், மாணவநிலைப் பட்டதாரிகளுக்கு கல்விச் சுற்றுலாவொன்றினை ஒழுங்குசெய்து ஒருங்கிணைவு செய்திருந்ததனூடாக விமானப் போக்குவரத்துக் கைத்தொழில் தொடர்பில் வெளிப்படுத்தல் ஒன்று அவர்களுக்கு வழங்கப்பட்டது. பிரதிப் பணிப்பாளர், வான் போக்குவரத்து மற்றும் சட்ட விவகாரங்கள், அவர்கள் மேற்பார்வையாளராகச் செயற்பட்டார். மேலும் CAASL இல் உள்ளகப் பயிற்சி நெறியின் பொருட்டு போக்குவரத்து மற்றும் இடம்பெயர்வு முகாமைத்துவத் திணைக்களத்திலிருந்தான ஏழு (07) அவ்வாறான மாணவர்களை இதுவரையிலும் தன்னுடன் இணைத்திருந்தது.

## மனித வளங்கள் மற்றும் அலுவலக முகாமைத்துவப் பகுதி

### ஊழியரிடல்

CAASL ஆனது பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் ஒருவரையும், இருபத்தியாறு (26) சிரேஷ்ட நிர்வாகத் தர உத்தியோகத்தர்களையும், முப்பத்தைந்து (35) நிர்வாகத் தர உத்தியோகத்தர்களையும், ஐம்பத்து மூன்று (53) செயற்பாட்டுத் தர உத்தியோகத்தர்களையும், முப்பது (30) துணைநிலை ஊழியர்களையும் தன்னகத்தே கொண்டு, அதன் அனுமதிக்கப்பட்ட தொழில் நிலைப் பிரிவுகளில் தற்போது நூற்று அறுபத்தைந்து (165) பதவி நிலைகளை உள்ளடக்கியுள்ளது. முப்பதியொரு (31) புதிய நியமனங்கள் உள்ளடங்கலாக, 2011 டிசம்பர் இறுதிவரையில் CAASL மொத்தமாக நூற்று நாற்பத்தைந்து (145) ஊழியர்களை பணிக்கமர்த்தியிருந்தது.

### ஊழியர் நலன்புரி

CAASL ஆனது அதனது ஊழியர்கள் மற்றும் ஊழியர்களின் நெருங்கிய குடும்ப அங்கத்தினருக்கும் நலன்புரி வசதியொன்றினை வழங்கும் நோக்கில், அதன் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தினை இவ் வருடமும் முன்னெடுத்திருந்தது. மொத்தமாக நூற்றுப் பதின்மூன்று (113) ஊழியர்கள் ரூபா 944,752.00 பெறுமதியுடைய மருத்துவக் காப்பீடு உள்ளக வசதியளிப்பினையும், ரூபா 933,462.00 பெறுமதியுடைய வெளியக வசதியளிப்பினையும் 2011 மே மாதத்திலிருந்து பெற்றுள்ளனர்.

சில சந்தர்ப்பங்களில் விமானப் போக்குவரத்துப் பரிசோதகர்களது சுகாதாரம், பாதுகாப்பு, மற்றும் ஆபத்தற்ற தன்மை என்பவற்றிற்குக் கெடுதி விளைவிக்கக் கூடிய ஆபத்தான நிலமைகளுக்கு முகங்கொடுப்பதற்கென விசேட ந்'டஈட்டினை வழங்க சிலிங்கோ காப்பீட்டுக் கம்பனி இணங்கிக் கொண்டதற்கு இணங்க விபத்துக் காப்பீட்டுக் கொள்கையினை அந்நிறுவனத்தில் மீண்டும் CAASL புதுப்பித்துக்கொண்டது.

ஊழியருக்கு உதவிக்கரம் நீட்டும் நோக்கில், CAASL முப்பது (30) ஊழியர்களுக்கு இடர்க் கடனாக ரூபா 4,531,278.00 தொகையினையும், ஏழு (7) ஊழியர்களுக்கு ஆதனக் கடனாக ரூபா 10,619,293.00 தொகையினையும் வழங்கியிருந்தது. இதற்கு மேலதிகமாக, 2011 இல் வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களைக் கொள்வனவு செய்வதற்கென ரூபா 5,090,000.00 தொகையினையும் கடனாக வழங்கியிருந்தது. முச்சக்கரவண்டிக் கடன் விதிகளானது ஊழியர்களுக்கு மேலதிக நன்மையினைப் பெற்றுக்கொடுக்கும் பொருட்டு மீள்பார்வைக்குட்படுத்தப்பட்டதுடன், ஒன்பது (9) ஊழியர்களுக்கு ரூபா 3,309,256.00 தொகையினை இந் நோக்கத்திற்காக வழங்கியிருந்தது.

## பயிற்சிகள், கருத்தரங்குகள், வேலைப்பட்டறைகள், கூட்டங்கள், மற்றும் மாநாடுகள்

(அ) இலங்கைக் கணக்கீட்டுத் தரம் 5 இற்கமைய மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட ஆண்டில் இறுதி இருப்பு செலவினம் அல்லது தேறிய தீர்க்கப்படாத பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதி குறிப்பிடப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 1,586,231 செலவினப் பெறுமதி இறுதி இருப்பாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இது எவ்வாறக இருப்பினும் இவ்விருப்பினைக் கருத்திற் கொள்ள வேண்டிய அளவில் ஆவணங்களின் இருப்பு பயன்பாட்டுக்கு எடுத்துக்கொள்ள முடியாததாக நிரல்கள் மாற்றம் பெற்றிருந்ததுடன் இவ்வாவணங்களின் இருப்ப பெறுமதியற்ற இருப்பாக அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கைக் கணக்கீட்டுத் தரம் 36 இற்கமைய இரு தரப்பினருக்கிடையிலும் எட்டப்படாத ரூபா 110,632,274 அசாதாரண வரி வைப்பு நிதி வெளிப்பாடுகளில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2. கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் குறிப்பிடப்பட வேண்டிய ரூபா 6,986,498 செலவினம் கணினி மென்பொருள் வருமானத்திற்கு எதிராக நீக்கப்பட்டிருந்தது.

#### 2.2.3. கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

கிடைக்க வேண்டிய கணக்குகளுக்கு உரியதாக மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் மொத்தம் ரூபா 214,805,125 நிலுவை காணப்பட்டதுடன் அதில் ரூபா 14,584,634 ஒரு வருடத்தை விடக் கூடிய காலம் நிலுவையாகக் காணப்பட்டது. அத்துடன் செலுத்த வேண்டிய கணக்குகளுக்கு உரியதாக மீளாய்வுக்கு உட்பத்தப்பட்ட ஆண்டு இறுதியில் மொத்தம் ரூபா 46,325,975 நிதி தீர்க்கப்படாது இருந்ததுடன் ரூபா 812,320 ஒரு ஆண்டை விட மேற்பட்ட காலம் தொடக்கம் தீர்க்கப்படாத நிலுவையாகக் காணப்பட்டது.

#### 2.2.4. கணக்காய்விற்கான சாட்சிகள் இன்மை

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டு இறுதியில் 14 விடயங்களுக்குரிய மொத்தம் ரூபா 214,805,125 கிடைக்க வேண்டிய நிலுவைக்காக மற்றும் 35 கணக்கு விடயங்களுக்குரியதாக மொத்தம் ரூபா 46,325,925 செலுத்த வேண்டிய நிலுவைக்கான உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் அவை கணக்காய்வுக்கு உட்படுத்தும் போது திருப்திகரமான முறையில் மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட முடியவில்லை.

#### 2.2.5. சட்டம், ஒழுங்குகள், கோவைகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு ஒவ்வாமை

கீழ்க்குறிப்பிடப்பட்ட விடயங்கள் மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

| சட்டம், ஒழுங்குகள், கோவைகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கான இணைப்பு | சம்பந்தப்படாமை |
|---|---|
| (அ) 1971 இல. 38 கொண்ட நிதிச் சட்டம்<br>(i) 10(5) வாசகம் | விநியோகத்துக்கு அமைய எஞ்சும் தேறிய மிகை வருமானத்தை இணைந்த நிதியத்திற்கு வைப்பிலிட வேண்டிய போதிலும் ரூபா 502,614,219 திரண்ட இலாபம் 2011 டிசம்பர் 31 ஆந் திகதி அளவில் வைப்பிலிடப் பட்டிருக்கவில்லை. |
| (ii) 11 வாசகம் | பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெறாத 31 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா 507,937,571 பொதுத் திறைசேரி முறிகள் மற்றும் நிலையான வைப்புக்கள். |
| (ஆ) 2000 இல. 38 கொண்ட உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 111 (அ) வாசகம் மற்றும் 2011 வரவு செலவு வெளிப்பாடுகள் | அதிகார சபையின் உத்தியோகத்தர்களினால் அவர்களின் சம்பளம் மற்றும் ஏனைய உழைப்புக்களுக்காக உழைக்கும் போது கொடுப்பனவு வரி தனிப்பட்ட ரீதியில் ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரை ஐந்து வருடங்களுக்காக மொத்தம் ரூபா 11,916,740 உழைக்கும் போதான கொடுப்பனவு வரி அதிகார சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) 2008 ஜுன் 26 ஆந் திகதிய இல. 14/2008 கொண்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கை | மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையில் உரிமை பெறாத பதவிநிலை மற்றும் பதவிநிலை அல்லாத உத்தியோகத்தர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபா 15,000 மற்றும் 10,000 வீதம் போக்குவரத்துக் கொடுப்பனவுகள் செலுத்தப் பட்டிருந்தன. மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் மற்றும் மேற்கூறப்பட்ட ஆண்டில் செலுத்தப்பட்டிருந்த போக்குவரத்துக் கொடுப்பனவு தொடராக ரூபா 9,888,671 மற்றும் ரூபா 20,967,837 ஆகும். |
| (ஈ) முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கை | |
| (i) 2009 ஜுன் 01 ஆந் திகதிய இல. 34(1) கொண்ட சுற்றறிக்கை | அரச கூட்டுத்தாபன உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட கொடுப்பனவு ரூபா 350 தொடக்கம் 500 வரையான இணைந்த கொடுப்பனவுகளுக்குப் புறம்பாக ரூபா 1500 தொடக்கம் ரூபா 3500 வரை அதிகார சபையின் உத்தியோகத்தர்களுக்கு இணைந்த கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தன. மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் முதல் 10 மாதங்களுக்குள் அவ்வாறு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்தக் கொடுப்பனவின் அளவு ரூபா 1,247,500 ஆகும். |
| (உ) 2011 டிசம்பர் 22 ஆந் திகதிய இல. 47 கொண்ட சுற்றறிக்கை | ஒரு ஊழியருக்காக திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 7500 வருடாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக சகல ஊழியர்களுக்கும் ஒரு உத்தியோகத்தருக்கு உயர்ந்தபட்சம் ரூபா 27,500 வாக செயற்சாதனைக் கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வுக்கு உட்படுத் தப்பட்ட ஆண்டில் சுற்றறிக்கைகளுக்குப் புறம்பாகச் செலுத்தப்பட்ட கொடுப்பனவு ரூபா 3,367,897 ஆகும். |
| (ஊ) அரச வர்த்தகச் சுற்றறிக்கை | |

| | |
|---|---|
| (i) 1994 ஜுன் 04 ஆந் திகதிய இல. 95 கொண்ட சுற்றறிக்கை | மேற்கூறப்பட்ட சுற்றறிக்கைக்குப் புறம்பாக பொதுத் திறைசேரியினால் உரிய அனமதி பெறாத உத்தியோகத்தர்களுக்கு தொழில் சார் கொடுப்பனவாக மாதமொன்றிற்கு ரூபா 25,000 தொடக்கம் ரூபா 75,000 வரை கொடுப்பனவு மேலும் நான்கு உத்தியோகத்தர்களுக்கு ரூபா 750 தொடக்கம் 5000 வரையான விசேட கொடுப்பனவும் மாதாந்தம் செலுத்தப்பட்டிருந் தது. மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் செலுத்தப்பட்ட தொழில்சார் கொடுப்பனவு ரூபா 2,557,500 ஆகும்.<br><br>அதிகார சபையினால் வெளியேற்றப்பட்ட தனியார் நிறுவனத்துக்குள் பணியாளர் சபைப் பயிற்சிச் செயலமர்வுகள் நடாத்தப் பட்டிருந்ததுடன் அச்செயலமர்வில் பங்கேற்ற உத்தியோகத்தர்களுக்கு ரூபா 603,850 விசேட கொடுப்பனவு திறைசேரி அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) 2011 ஏப்ரல் 29 ஆந் திகதிய இல. 60 கொண்ட சுற்றறிக்கை | அதிகார சபையினால் 60 வயதினைத் தாண்டிய ஐந்து உத்தியோகத்தர்களுக்கு அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெறாது சேவையில் ஈடுபடுத்தப்பட்டு சம்பளம் மற்றும் கொடுப்பனவாக ரூபா 4,007,140 செலுத்தப் பட்டிருந்தது. |

### 2.2.6. கருத்து முரண்பாட்டுக்கு உட்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்

கீழ்க்குறிப்பிட்ட மேற்பார்வைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) உத்தியோகத்தர்கள் மற்றும் நலன்புரிச் சங்கங்களினால் தனிப்பட்ட ரீதியில் ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்த உணவு, பான உபசரணைச் செலவினம் ரூபா 873,160 மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் அதிகார சபை நிதியத்தினால் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) விமான நம்பகத் தன்மை மற்றும் பாதுகாப்பினை விருத்தி செய்வதற்காக வேலைத்திட்டங்களை அமுல்படுத்துவதற்குப் பதிலாக அதிகார சபையின் அலுவலகத்திற்குள் வைப்பதற்காக மாதிரி விமானங்கள் எட்டினைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,254,000 செலவிடப்பட்டிருந்தது. இம்மாதிரி விமானங்களை வைப்பதன் மூலம் வாடகைக்குப் பெறப்பட்ட கட்டிட அலுவலகங்களின் இடவசதிகள் காணப்படவில்லை.

(இ) அமைச்சர் மற்றும் அவரது பணியாளர் சபையின் வெளிநாட்டுச் சுற்றுலாவுக்காக ரூபா 3,421,142 நிதி அதிகார சபை நிதியத்தினால் செலவிடப்பட்டிருந்தது.

### 2.2.7. கட்புலனான மோசடிகள்

நிரல் அமைச்சில் சம்பளம் பெறும், அமைச்சரவைக்குரிய உத்தியோகத்தர்களுக்க சிவில் விமான சேவை அதிகார சபையின் அபிவிருத்தித் திட்டமிடல் இணைப்புப் பதவிக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டதாக நியமனக் கடிதம் வழங்கப்பட்டிருந்ததுடன் அவர்களிடமிருந்து எதுவித சேவையும் பெறாது மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் சம்பளம் மற்றும் கொடுப்பனவாக ரூபா 1,200,390 செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும் அவ்வுத்தியோகத்தருக்கு இரு சம்பளங்களைப் பெற்றுக்கொள்ளச் சந்தர்ப்பம் காணப்பட்டது. இத்துடன் இவ்வுத்தியோகத்தருக்கு அதிகார சபையினால் வழங்கப்பட்டிருந்த வாகனத்துக்காக மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் எரிபொருளுக்காக ரூபா 462,135 உம் பங்கேற்ற வெளிநாட்டுச் சுற்றுலாவுக்காக விமான அனுமதிச் சீட்டுக்கென ரூபா 258,901 அதிகார சபையினால் செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1. நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதி வெளிப்பாடுகளுக்கு இணங்க மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டுக்காக அதிகார சபையின் செயற்பாட்டுப் பெறுபேறு வரிக்கு முன்னர் ரூபா 428,897,727 இலாபம் என்பதுடன் அதற்கிணைவாக கடந்த ஆண்டுக்காக வரிக்கு முன்னர் இலாபம் ரூபா 385,125,238 நிதிப்பெறுபேறி ரூபா 43,772,489 அதிகரிப்பு மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட்டது. செயற்பாட்டு வருமானம் மற்றும் சேவை வழங்குவதன் பெற்ற பெறுமான அதிகரிப்பு மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் நிதிப் பெறுபேறு அதிகரிப்பு பிரதான காரணியாக அமைந்திருந்தது.

### 3.2. விளக்கமான நிதி மீளாய்வு

கடந்த ஆண்டுக்கு இணைவாக மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் வருமானம் 27.80% அதிகரிப்பும், செலவினம் 59.93% அதிகரிப்பும் காணப்பட்டதுடன் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் வரிக்கு முன்னர் செயற்பாடுகள் மூலம் பெற்ற இலாபம் கடந்த ஆண்டுக்கு இணைவாக 13.37% அதிகரிப்பாகக் காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1. செயற்சாதனை

கீழ்க்குறிப்பிடப்பட்ட நோக்கிற்கு இணங்க கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட ஆண்டில் செயற்சாதனை அதிகரிப்புக் காணப்பட்டது.

| விடயங்கள் | விபரங்கள் | 2011 | 2010 | 2009 |
|---|---|---|---|---|
| (அ) விமான செயற்பாடுகள் | (i) வாடகை வானூர்தி - மணித்தியாலம் | 1,782 | 1,317 | 1,057 |
| | (ii) நிரந்தர விமானப் போக்குவரத்துக் கம்பனி - வானூர்தி மணித்தியாலயம் | 41,891 | 32,590 | 27,545 |
| (ஆ) பூரணப்படுத்தப் பட்ட கணக்காய்வு | (i) செயற்பாடுகள் | -- | 01 | 01 |
| | (ii) இணைந்த (செயற்பாடுகள் மற்றும் தகமைகள்) | -- | -- | -- |
| | (iii) வானூர்தித் தளம் | -- | -- | 01 |
| (இ) மேற்கொள்ளப்பட்ட நம்பகத் தன்மை மற்றும் பாதுகாப்பு மேற்பார்வைச் செயற்பாடுகள் | (i) ருாம் பரிசோதனை வகை (விமானத் தகமை) | 65 | 30 | 72 |
| | (ii) ருாம் பரிசோதனை வகை (இணைந்த) | -- | -- | -- |
| | (iii) விமானத் தளம் | 20 | 09 | 10 |
| | (iv) அபாயகரப் பொருட்கள் | 35 | 08 | 19 |

### 4.2. பொருளாதாரமல்லாத கொடுக்கல் வாங்கல்கள்

அதிகார சபையின் விமான சேவைப் பரிசோதகர்களுக்காக 2011 ஆம் ஆண்டில் ஒன்று ரூபா 475 வீதம் 525 கழுத்துப் பட்டிகள் ரூபா 284,866 நிதிக்கு கொள்வனவு செய்யப் பட்டிருந்த போதிலும் அக்கழுத்துப் பட்டிகள் உரிய தரத்தினைக் கொண்டமைந்திருக்காமையினால் வெளியிடாது களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

### 4.3. முகாமைத்துவ வினைத்திறனின்மை

கீழ்க்குறிப்பிடப்பட்ட விடயங்கள் மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

(அ) (i) மூன்று வருட காலத்துக்காக தனியார் துறைக்குரிய கட்டிடம் வாடகைக்குப் பெறப் பட்டிருந்ததுடன் கட்டிட வளாகத்துக்குள் களஞ்சிய அறை மற்றும் சாரதி ஓய்வு அறையினை நிர்மாணித்தல் மற்றும் பழுதுபார்ப்பதற்காக ரூபா 28,214,123 அதிகார சபை நிதியத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. அத்துடன் 2011 மார்ச் மாதம் தொடக்கம் மாதாந்தக் கூலி செலுத்தப்பட்டிருந்த போதிலும் கட்டிடத்தின் பல்வேறுபட்ட நிர்மாணம் மற்றும் புனரமைப்புக்களை கட்டிட உரிமையாளர் செய்து கொடுக்காமையினால் அதிகார சபையின் அலுவலகச் செயற்பாடுகள் புதிதாக வாடகைக்குப் பெறப்பட்ட கட்டிடத்திற்குக் கொண்டு செல்வதற்கு இரு மாதங்கள் காலதாமதம் ஏற்பட்டிருந்தது. இதற்கமைய கட்டிடத்தின் அலுவலகச் செயற்பாடுகள் இடம்பெறவில்லை என்பதுடன் 2011 மார்ச் மற்றும்

ஏப்ரல் ஆகிய இரு மாதங்களுக்காக வெட் வரியுடன் ரூபா 3,283,657 மற்றும் அலுவலகச் செயற்பாடுகளை நடாத்திச் சென்ற பழைய கட்டிடத்திற்கு தொடர்ந்தும் ரூபா 1,340,412 செலுத்த வேண்டி ஏற்பட்டமையினால் மொத்தமாக ரூபா 4,624,069 நிதி பயனற்றதாக கட்டிடக் கூலியாக நிதியத்தினால் செலவிடப்பட்டிருந்தது.

(ii) வாடகைக்குப் பெறப்பட்ட கட்டிடத்தின் வாடகை உடன்படிக்கையினைக் கைச்சாத்திடம் போது அரச பிரதான மதிப்பீட்டாளரின் பரிந்துரைக்கு இணங்க கட்டிட உரிமையாளர் சகல புனரமைப்புக்கள் மற்றும் வரிப்பணக் கட்டணங்களைச் செலுத்த வேண்டுமென நிபந்தனைகள் உள்ளடக்காது உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டமையினால் வருடாந்த வரிப்பணம் கட்டணம் அதிகரித்தமையினால் ரூபா 269,535 அதிகார சபை நிதியத்தினால் செலுத்தப் பட்டிருந்ததுடன் கட்டிடத்திற்காக ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஏதேனும் ஒரு உடன்படிக்கையின் கீழ் மேற்கொள்ளவுள்ள செலவினங்களின் ஒரு பகுதி அதிகார சபையினால் ஏற்கவேண்டி ஏற்பட்டிருந்தது.

(ஆ) அதிகார சபையினால் விமான அனுமதிப் பத்திரங்களை வழங்குதல், உயர் கட்டிடங்களுக்காக அங்கீகாரங்களை வழங்குதல் போன்ற பல்வேறுபட்ட சேவைகளை வழங்குவதற்காக அறவிடப்படும் கட்டணம் கடந்த ஆறு வருடங்களுக்குள் மறுசீரமைக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் சேவை வழங்கலுக்காக மேற்கொள்ளப்பட்ட நிதிக்குப் போதியளவு அதிகார சபைக்குக் கிடைக்கவில்லை என மேற்பார்வை செய்யப்பட்டது.

### 4.4. ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடுகள்

திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் அங்கத்தவரான பணிப்பாளர் (திரண்ட) செயற்பாடுகளை மேற்கொண்டு வாடகை அடிப்படையில் கட்டிடங்களைப் பெறுவதற்காக மதிப்பீட்டுக் குழின் தலைவராகச் செயற்பட்டு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக் கொள்வதற்கான பெறுகைச் செயற்பாடுகளை நெகிழ்வுத் தன்மையுடன் இடம்பெற்றதாக கணக்காய்வுக்கு இணங்க முடியவில்லை. மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் ரூபா 78,807,871 நிதி கட்டிட வாடகையாக செலுத்தும் போது பொதுவான திணைக்களப் பெறுகைக் குழுவின் மூலம் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வது போதியளவு அமையவில்லை என்பதுடன் அமைச்சின் பெறுகைக் குழுவுக்கு அனுப்புவதற்குத் தேவையாக இருந்த போதிலும் அவ்வாறான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

### 4.5. ஏனைய அரச நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அதிகார சபையின் வளங்கள்

2003 ஜூன் 02 ஆந் திகதிய இல. பீ.ஈ.டீ. 12 கொண்ட பொதுத் திறைசேரியின் 8.3.9 வாசகத்துக்குப் புறம்பாக அதிகார சபையிடம் உள்ள மூன்று வாகனங்கள் அமைச்சரவையின் பயன்பாட்டுக்காகப் பெறப்பட்டிருந்ததுடன் எரிபொருளுக்காக மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் ரூபா 632,581 அதிகார சபையின் நிதியினால் செலுத்தப்பட்டிருந்தது.

### 4.6. பணியாளர் சபை நிர்வாகம்

அதிகார சபையின் 2011 டிசம்பர் 31 ஆந் திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட உண்மையான பணியாளர் சபை தொடர்பான விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றன.

| பணியாளர் சபையின் வகைகள் | அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் சபை | உண்மையான பணியாளர் சபை |
|---|---|---|
| பணிப்பாளர் நாயகம் / பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் | 01 | 01 |
| சிரேஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தர்கள் | 34 | 26 |
| நிறைவேற்று உத்தியோகத்தர்கள் | 41 | 35 |
| செயற்பாட்டு உத்தியோகத்தர்கள் | 55 | 53 |
| அலுவலக உதவியாளர்கள் | 34 | 30 |
| மொத்தம் | 165 | 145 |

இது தொடர்பில் கீழ்க்குறிப்பிடப்பட்ட மேற்பார்வைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகார சபையின் நிதிப் பிரிவின் முகாமையாளர், பிரதி நிதி முகாமையாளர் ஆகிய இரு பதவிகளை ஒழித்து ஆட்சேர்ப்பு ஒழுங்கு விதிமுறைகளுக்கு அமைய தகைமைகளைப் பூர்த்தி செய்யாதிருந்த உத்தியோகத்தர் பிரதிப் பணிப்பாளர் (நிதி) பதவியில் பதில் கடமைக்காக நியமித்து நான்கு வருடங்களை விட மேற்பட்ட காலம் பதில் கடமைக் கொடுப்பனவு செலுத்தி சேவையில் ஈடுபடுத்தப் பட்டிருந்தார்.

(ஆ) 1997 ஒக்டோபர் 27 ஆந் திகதிய இல. 124 கொண்ட நிதி மற்றும் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் சுற்றறிக்கை இணங்க 7 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அதிகார சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என்பதுடன் அப்பதவிக்காக உத்தியோகத்தர்கள் இரண்டு வருடங்கள் தொடக்கம் 6 வருடங்கள் வரை பதில் கடமைக்கு நியமித்து பதில் கடமைக் கொடுப்பனவாக ரூபா 2,124,313 செலுத்தப் பட்டிருந்தது.

## 5. கணக்கீட்டுச் செயற்பாடுகள் மற்றும் சிறந்த நிர்வாகம்

### 5.1. வரவு செலவு நிர்வாகம்

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்ட மற்றும் உண்மையான வருமானங்கள் உட்பட செலவினங்களுக்கு இடையே 85% தொடக்கம் 179% வரையான பரம்பலைக் காணள முடிவதுடன் தளம்பல் மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட்டமையினால் வரவு செலவு ஆவணங்கள் பயன்மிக்க முகாமைத்துவ நிர்வாகச் செயற்பாடாகப் பயன்படுத்தாமை மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட்டது.

## 6. முறைமை மற்றும் நிர்வாகம்

கணக்காய்வில் மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக இடைக்கிடையே அதிகார சபையின் தலைவரின் அறிவுறுத்தப்பட்டார். கீழ்க்குறிப்பிடப்பட்ட முறைமை மற்றும் நிர்வாக முறை தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) கணக்கியல்

(ஆ) வருமானங்களைச் சேகரித்தல்

(இ) செலவின முகாமைத்துவம்

(ஈ) அரச நிதிக் கோவைகளுக்கு இணைவாகச் செயற்படாமை

(உ) ஒப்பந்த நிர்வாகம்

(ஊ) ஆளணி முகாமைத்துவம்



எச்.ஏ.எஸ். சமரவீர

கணக்காய்வாளர்.

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கு சீ.ஏ.ஏ.எஸ்.எல் இனால் வழங்கப்பட்ட பதிலுரைகள

2013.02.12

FN/12/4

கணக்காய்வாளர்,

கணக்காய்வுத் திணைக்களம்,

பத்தரமுல்ல.

**இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் 2011 டிசம்பர் 31 ஆந் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான நிதி வெளிப்பாடுகள் தொடர்பாக 1971 இல. 38 கொண்ட நிதிச் சட்டத்தின் 14(2) சீ பிரிவுக்கு அமைய கணக்காய்வாளர் அறிக்கை**

மேற்கூறப்பட்ட விடயம் தொடர்பாக தங்களது இல. வீசீ/பீ/சீஏஏஎஸ்எல்/எப்ஏ/2011 மற்றும் 2012 டிசம்பர் 07 ஆந் திகதி கொண்ட கடிதம் தொடர்பாக,

இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் இவ்வதிகார சபையின் கருத்துக்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

### 2.2. நிதி வெளிப்பாடுகள் தொடர்பாகக் கருத்துரைத்தல்

#### 2.2.1. இலங்கைக் கணக்கீட்டுத் தரம்

அ) எனது மேற்பார்வையினை ஏற்றுக் கொள்கின்றேன். இலங்கைக் கணக்கீட்டுத் தரம் 5 இற்கு அமைய ஆண்டிறுதியில் செலவினம் அல்லது தேறிய தீர்க்கப்படாத பெறுமதி ஆகிய இரண்டடில் குறைந்த பெறுமதியினைக் குறிப்பிட்டு இதற்குப் பின்னர் நடவடிக்கை எடுக்கப்படல்.

மேலும் பயன்பாட்டுக்கு எடுத்துக் கொள்ள முடியாத நிலையில் உள்ள ஆவணங்கள் தொடர்பாக மதிப்பீடுகளை மேற்கொண்டு பெறுமதியினை தொகை இழப்பீடாக நீக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஆ) தங்களது மேற்பார்வையினை ஏற்றுக்கொள்கிறேன். இதற்கமைய எதிர்காலத்தில் இலங்கைக் கணக்கீட்டுத் தரம் 36 இற்கு அமைய இரு தரப்பினருக்கு இடையே இணக்கம் எட்ட முடியாத அசாதாரண வரி வைப்புக்கள் ஏற்படும் பட்சத்தில் நிதி வெளிப்பாடுகளை வெளியிட நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

#### 2.2.2. கணக்கீட்டுக் குறைபாடுகள்

தங்களது மேற்பார்வையினை ஏற்றுக்கொள்கிறோம். 2011 நிதி வெளிப்பாடுகளில் இத்தவறு ஏற்கனே திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

#### 2.2.3. கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு

தங்களது மேற்பார்வையினை ஏற்றுக்கொள்கிறேன். இது தொடர்பாக கீழ்க்குறிப்பிடப்பட்டவாறு செயற்படுகின்றோம்.

| கிடைக்க வேண்டிய நிதி (ரூ.) | நிதி எவரிடமிருந்து கிடைக்க வேண்டும் | காரணங்கள் | கிடைக்க வேண்டிய அறவிட வேண்டியுள்ள செயற்பாடுகள் |
|---|---|---|---|
| 14,43,077.21 | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | பெறுமதி சேர்க்கப்பட்ட வரி நிதியில் இருந்து மீளக் கிடைக்க வேண்டிய நிதி | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடனான கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன |
| 150,556.79 | கொஸ்மோஸ் விமானக் கம்பனி மற்றும் ஹெலி டுவர்ஸ் விமானக் கம்பனி | விமானக் கம்பனிகளை உறுதிப்படுத்தும் செயற்பாடுகளின் போது உரிய கம்பனி தொடர்பில் சட்டத்துக்கு இணங்க பொது மக்களின் கருத்துக்களை வினவுவதற்காக பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்துக்கு ஏற்பட்ட செலவினத்தை மீளளிப்புச் செய்தல் | உரிய நிதியினை உடனடியாகச் செலுத்துமாறு உரிய கம்பனிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது |

| செலுத்த வேண்டிய நிதி (ரூ.) | நிதி யாருக்கு செலுத்த வேண்டும் | காரணங்கள் | செலுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| 358,328.20 | கணக்காய்வாளர் திணைக்களம் | உரிய விலை கூறல் கிடைக்காமை | 2009 / 2010 ஆகிய ஆண்டுகளுக்கான கணக்காய்வுக் கட்டணத்தைச் செலுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன |
| 788,534.57 | உரிய இனங்காணல்கள் மேற்கொள்ளப் படவில்லை | உரிய இனங்காணல்கள் இன்மை | உரிய இனங்காணல்களைத் தொடர்ந்து உரிய ஒப்பீடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன |

### 2.2.4. கணக்காய்வுக்காகச் சாட்சிகள் இன்மை

தங்களது மேற்பார்வையினை ஏற்றுக் கொள்கிறேன். கிடைக்க வேண்டிய நிலுவை மற்றும் செலுத்த வேண்டிய நிலுவைக்காக தேவையான உறுதிப்படுத்தல்களை மேற்கொண்டு தகவல்கள் உரிய தரப்பினரால் உரிய நேரத்திற்கு இவ்வதிகாரத்திற்கு வழங்காமையினால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே உரிய தகவல்களைத் தாமதமின்றி கணக்காய்வாளர் திணைக்களத்திற்குப் பிரதியுடன் வழங்குமாறு உரிய தரப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இந்நிலைமையினைத் தவிர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

### 2.2.5. சட்டங்கள், ஒழுங்குகள், கோவைகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு ஒவ்வாமை

அ) 1971 இல. 38 கொண்ட நிதிச் சட்டம்

(i) மற்றும் (ii)

இவ்வதிகார சபைக்கு சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகள், பணிகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் தேசிய வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக வருடாந்தம் வழங்கப்படுவதில்லை. அந்நிதியினை அதிகார சபையினால் வருடாந்த செயற்பாடுகளின் ஊடாக உழைத்துக் கொள்ளல் வேண்டும். இவ்வதிகார சபையின் பிரதான நிதி உழைப்பு வகைகள் மற்றும் அதன் மூலம் கிடைக்கக் கூடிய நிதியின் அளவு நிச்சயமற்றதாகும். மேலும் 1971 இல. 38 கொண்ட நிதிச் சட்டத்தின் 7 ஆவது வாசகத்திற்கு இணங்க இரச கூட்டுத்தாபன வருமானக் கணக்கு மிகை, அக்கணக்கினை எதிர்காலத்தில் ஐந்து ஆண்டுகளுக்குள் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ள வேண்டியேற்படும் செலவினத்தைத் தீர்க்கக் கூடியவாறு பேணுவதற்கு இதன் பணிப்பாளர் சபை கட்டுப் பட்டுள்ளமையினால் அதிகார சபையின் எதிர்கால ஐந்து வருட காலத்துக்குள் மேற்கொள்ளத் தேவையான நிதியினை உருவாக்கிக் கொள்ளக் கூடியவாறு அதன் மிகை நிதியினை முதலீடு செய்வதற்காக அதிகார சபையின் ஆரம்பக் கட்டத்தில் (அவ்வாறாயின் 2003 ஆம் ஆண்டில்) விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் மற்றும் நிதி அமைச்சின் எழுத்து மூல அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. இம்மிகை நிதியினை செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள் அதிகார சபையின் இணைந்த திட்டத்தில் (வர்த்தகத் திட்டத்தில்) தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அதன் பிரதி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் மற்றும் நிதி அமைச்சுக்கு வருடாந்தம் அனுப்பப்பட்டுள்ளது. இவ்வதிகார சபையின் பிரதான கட்டிடத்தை நிர்மாணித்தல், மத்தள விமான நிலைய வளாகத்தில் கிளை அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணித்தல் மற்றும் ஊழியர் விடுதிகளை நிர்மாணித்தல், விடுமுறை விடுதிகளை நிர்மாணித்தல் போன்ற பணிகளுக்காக இந்நிதியினைப் பயன்படுத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இது எவ்வாறாக இருப்பினும் அதிகார சபையின் மிகை நிதியினை 2011 ஆம் ஆண்டில் ரூபா 250 மில்லியன் மற்றும் 2012 ஆம் ஆண்டில் ரூபா 350 மில்லியன் பொதுத் திறைசேரிக்குத் தீர்க்கப்பட்டுள்ளது. தற்போது அதிகார சபையிடம் உள்ள மிகை நிதி 1971 இல. 38 கொண்ட நிதிச் சட்டத்தின் 7 ஆவது வாசகத்தின்

தேவையினை நிறைவேற்றுவதற்குப் போதியளவு அமையவில்லை என்பதனால் அவ்வெஞ்சிய மிகை நிதியினை முதலீடு செய்வதற்காக விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் மற்றும் நிதி அமைச்சின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஆ) <u>2000 இலக்கம் 38 கொண்ட உள்நாட்டு இறைவரிச் சட்டம் - ஐஐஐ (அ) வாசகம் மற்றும் 2011 வரவு செலவுத்திட்ட வெளிப்பாடுகள்</u>

அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் விமான சேவை அதிகார சபையின் பணியாளர் சபைச் சட்ட ஒழுங்குகள் மற்றும் நிர்வாக செயற்பாட்டு ஒழுங்குவிதிக் கோவையில் உள்ள ஒதுக்கீடுகளுக்கு இணங்க இவ்வதிகார சபையின் செயற்பாடுகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு பங்களிப்புச் செய்வதற்கு அதிசிறந்த பணியாளர் சபையை நிறுவனத்தில் நிலைப்படுத்துவதை நோக்காகக் கொண்டு அதிகார சபையின் உத்தியோகத்தர்களுக்காக உழைக்கும் போதான கொடுப்பனவு வரியினை அதிகார சபையின் நிதியில் இருந்து செலுத்தப்படு கின்றது. இவ்வதிகார சபையின் ஊழியர், உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் ஊழியக் கொடுப்பனவுகள் சிவில் விமான சேவைக் கைத்தொழில் மற்றும் அதற்குச் சமமான தரத்தில் உள்ள உத்தியோகத்தர் களுக்கிடையே பாரிய வித்தியாசத்தினைக் கொண்டிருப்பதனால் இவ்வரி நிதி அதிகார சபையினால் செலுத்தப்பட்டு முடிந்தளவு மேற்கூறப்பட்ட விரிசலைக் குறைப்பதன் மூலம் உரிய உத்தியோகத்தர்களை அதிகார சபையில் நிலைக்கச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இ) <u>2008 ஜுன் 26 ஆந் திகதிய இல. 14/2008 கொண்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கை</u>

தாபன விதிக்கோவையின் வரைவிலக்கணங்களுக்கு அமைய கூட்டுத்தாபன ஊழியர் ஒருவர் அரச ஊழியராகக் கருத்திற் கொள்ளப்படமாட்டார். எனவே பொது நிர்வாகச் சுற்றறிக்கைகளில் உள்ள ஏற்பாடுகள் சிவில் விமான சேவை அதிகார சபையின் நிர்வாகச் செயற்பாடுகளுக்காக நேரடியாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதுடன் இது பயன்பாட்டுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பது அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் விமான சேவை அதிகார சபையின் ஒழுங்கு விதிகள் மற்றும் நிர்வாக செயற்பாட்டுக் கோவையில் (ஞடுஊயீ 5000) உள்ள ஏற்பாடுகள் ஆகும். இதன் நிர்வாகச் செயற்பாட்டுக் கோவைக்கு அமைய போக்குவரத்துக் கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியும். மேலும் 2008 ஜுன் 26 ஆந் திகதிய இல. 14/2008 கொண்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருப்பது அமைச்சின் செயலாளர்களுக்கு மற்றும் மாகாண சபைச் செயலாளர்கள் மற்றும் திணைக்களத்தின் பொறுப்பாளருக்கு மாத்திரம் என்பதனால் இவ்வதிகார சபையின் பணிகளுக்காக இது அமுலில் இருக்காது. அதிகார சபையில் சேவையில் உள்ள மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 150 ஐ விடக் குறைவாக இருப்பதனால் அவ்வப் பிரதான வீதியூடாகப் பயனிக்கும் ஊழியர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதனால் சகல ஊழியர்களையும் தழுவக் கூடியவாறு அதிகார சபையின் செலவில் பொதுப் போக்குவரத்து வசதிகளை வழங்குவதனைப் போன்று பிரயோக ரீதியில் மற்றும் பொருளாதார ரீதியிலும் பயனற்றது என்பதனால் சகல ஊழியர்களுக்கும் உத்தேச போக்குவரத்துக் கொடுப்பனவுகளைச் செலுத்தும் செயற்பாடுகள் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

ஈ) <u>முகாமைத்துவச் சேவைச் சுற்றறிக்கை</u>

<u>(i) 2009 ஜுன் 01 ஆந் திகதிய இலக்கம் 34(1) கொண்ட சுற்றறிக்கை</u>

2009 ஜுன் 01 ஆந் திகதிய இலக்கம் 34(1) கொண்ட சுற்றறிக்கை உரியதான இணைந்த கொடுப்பனவுகள் தொடர்பில் உத்தேசக் கொடுப்பனவு இணைந்த கொடுப்பனவுப் பிரிவில் உட்படுவதில்லை. இது ஊக்குவிப்புக் கொடுப்பனவாகும். இவ் ஊக்குவிப்புக் கொடுப்பனவு முறை பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அதிகார சபையினால் தொடரப்பட்ட சிவில் விமான சேவைக் கல்வி மற்றும் ஊக்குவிப்புப் போன்ற விசேட பணிகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்காக இக்கொடுப்பனவுச் செயற்பாடுகளை விருத்தி செய்வதனை நோக்காகக் கொண்டு செலுத்தப்பட்டுள்ளது.

(ii) 2012 டிசம்பர் 22 ஆந் திகதிய இலக்கம் 47 கொண்ட சுற்றறிக்கை

சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பினால் இலங்கை தொடர்பில் 2010 ஒக்டோபர் மாதம் நாட்டில் நடாத்திய இடையூறுகளை மேற்பார்வை செய்வதற்கான ஆய்வுகள் ஆரம்பிக்கும் முன்னர் தயார்படுத்தல் மற்றும் பின்னூட்டல்கள் போன்ற செயற்பாடுகளுக்குரியதாக விசேடமாக 2010 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் மற்றும் 2011 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுக்குள் மொத்த ஊழியர் சபை குழுவாக நாட்டக்காக மேற்கொண்ட பணியினைக் கௌரவிக்கும் வகையில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துக்கு இணங்க இச்செயற்சாதனை அடைவமட்டக் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அவ்வாறிருந்த போதிலும் எதிர்வரும் ஆண்டுகளில் இது தொடர்பிலான செயற்பாடுகள் உரிய அங்கீகாரத்திற்கு இணங்க மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

உ) அரச வர்த்தகச் சுற்றறிக்கை

(i) 1994 ஜன் 04 ஆந் திகதிய இல. 95 கொண்ட சுற்றறிக்கை

நாட்டின் சிவில் விமான சேவைக் கைத்தொழிலில் உள்ளடங்கும் சகல நிறுவனங்கள் அல்லது நபர்களுக்கு உரியதான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்காக சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பினால் விதிக்கப்படும் சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரைச் செயற்பாடுகள் நிவர்த்தி செய்யப்படுதல் வேண்டும். இது தொடர்பாக உறுதிப்படுத்தல்கள் மற்றும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தும் பொறுப்பு சிவில் விமான சேவை மேற்பார்வைப் பணிகளுக்குப் பொறுப்பான அரச நிறுவனம் என்ற ரீதியில் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபைக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. இச்செயற்பாடுகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்காக பல்வேறுபட்ட துறைகளில் பிரபல மற்றும் செயற்றிறன் மிக்க பணியாளர்களின் சேவை அவசியமாகும். இவ்வாறான நபர்களின் சேவையினைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் அவர்களின் தேர்ச்சிக்கு ஏற்றவாறான கொடுப்பனவினைச் செலுத்த வேண்டும். துறைசார் நிபுணர்கள் மற்றும் கைத்தொழில் நிபுணர்களுக்கு கைத்தொழில் நிறுவனத்தினால் செலுத்தப்படும் சம்பளத்துடன் ஒப்பீடு செய்யும் போது சம்பளம் செலுத்தி அதிகார சபையில் சேவையில் ஈடுபடுத்துவதற்காகத் தேவையான சட்ட ஒழுங்குகள் 2002 இல. 34 கொண்ட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபைச் சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ளதுடன் இவ்வொழுங்குகளை அமுல்படுத்தும் அதிகாரமும் அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்படும் சிவில் விமான சேவை அதிகார சபையின் ஒழுங்க விதிமுறைகள், நிர்வாக செயற்பாடுகளில் இப்பணிகளை மேற்கொள்வதற்காக விரிவான செயற்பாடுகள் அமுல்படுத்தப் பட்டுள்ளன. இதற்கமைய உத்தேச தொழில்சார் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளன.

பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு இணங்க 4 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 750 தொடக்கம் 5000 வரையான மாதாந்தக் கொடுப்பனவு செலுத்தப்படுவது அதிகார சபையின் தேவைக்கு ஏற்ப அவர்களினால் தமது நிரந்தரப் பதவியில் கடமைகளுக்கு மேலதிகமாக மேற்கொள்ளும் மேலதிக பணிகளின் செயற்பாடுகளின் தன்மை மற்றும் அளவினைக் கருத்திற்கொள்வதன் மூலமாகும்.

உததேச செயலமர்வு இடம்பெற்றது அதிகார சபையின் வருடாந்த அங்கீகரிக்கப்பட்ட வேலைத்திட்டங்களுக்கு அமைவாகும். இதன் நோக்கமாக அமைந்தது ஊழியர்களுக்கு குழுவாகப் பணியாற்றுவதன் முக்கியத்துவம் மற்றும் தலைமைத்துவம் தொடர்பான பிரயோகப் பயிற்சியினை வழங்குவதாகும். இவ்வேலைத்திட்டத்திற்குப் பொருத்தமான சூழல் அவசியப்பட்டமையினால் இதற்காக உரிய முறைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட சிறந்த திட்டமிடப்பட்ட ஆய்வுகளுக்கு பின்னர் தனியார் நிறுவனம் ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலமர்வு வார இறுதித் தினத்தில் இடம்பெற்றமையினால் ஊழியர்களின் பங்கேற்பினை ஊக்குவிக்கும் வகையில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு அமைய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப் பட்டன.

(ii) 2011 ஏப்ரல் 29 ஆந் திகதிய இல. 60 கொண்ட சுற்றறிக்கை

2011 ஏப்ரல் 29 ஆந் திகதிய இல. 60 கொண்ட சுற்றறிக்கை மூலம் குறிப்பிடப்பட்டிருப்பது அரச தொழில் முயற்சியின் ஊழியர்களின் ஓய்வுறுத்தல் மற்றும் சேவை நீடிப்புத் தொடர்பில் அமுலில் இருக்க வேண்டிய ஒழுங்கு விதிகளாகும். அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் விமான

சேவை அதிகார சபையின் பணியாளர் சபையின் ஒழுங்கு விதிகள் மற்றும் நிர்வாகச் செயற்பாட்டுக் கோவைகளுக்கு இணங்க சிவில் விமான சேவை அதிகார சபையின் ஊழியர் ஒருவருக்கு 60 வயது வரை சேவையாற்ற முடிவதுடன் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சட்ட விதிமுறைகளுக்குப் புறம்பாக அல்லது மேற்கூறப்பட்ட சுற்றறிக்கைகளுக்குப் புறம்பாக அதிகார சபையின் எந்தவொரு ஊழியரினதும் சேவை 60 வயதினைத் தாண்டி நீடிக்கப்படவில்லை. இருப்பினும் வரையறுக்கப்பட்ட ஒரு சில சந்தர்ப்பங்களில் மாத்திரம் அதிகார சபையின் தேவை மற்றும் முன்னுரிமைகளைக் கருத்திற்கொண்டு 60 வயதினைத் தாண்டிய ஒருசிலரை ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ள வேண்டி ஏற்பட்டது. இதற்காகத் தேவையான சட்ட ஏற்பாடுகள் 2002 இல. 34 கொண்ட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் சட்டத்தினால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இது எவ்வாறக இருப்பினும் அதிகார சபையின் சேவைக்காக பாட இணை அறிவு, அனுபவம் மற்றும் தேர்ச்சியின் தேவையற்ற சந்தர்ப்பத்தில் பதவிக்காக எதிர்காலத்தில் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளாது இருக்க அதிகார சபை தீர்மானித்துள்ளது.

### 2.2.6. கருத்து முரண்பாடுகளுக்கு உட்பட்ட விடயங்கள்

(அ) அரச உத்தரவுகளுக்கு அமைய அல்லது அதிகார சபையின் தீர்மானங்களை அமுல்படுத்துவது தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள கடமை ரீதியிலான செயற்பாடுகள் மற்றும் நிறுவன நோக்கங்களை மையமாகக் கொண்ட செயற்பாடுகளில் பங்கேற்போருக்காக வழங்கப்பட்ட உணவு பானங்களுக்காக உத்தேச உபசரணைச் செலவினம் அதிகார சபையின் நிதியினால் செலுத்தப் பட்டுள்ளது.

(ஆ) சிவில் விமான சேவைச் செயற்பாடுகளுக்குப் பொறுப்பான அரச மேற்பார்வை நிறுவனமாகச் செயற்படுவது இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையாகும். வெளிநாட்டு அரச தூதுக்குழுவினால் சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பு உள்ளிட்ட வெளிநாட்டு விமான சேவை முகவர்கள் உள்நாடு மற்றும் வெளிநாட்டு விமானக் கம்பனியின் பிரதிகள், விமானிகள் போன்ற பல்வேறு தொழில்நுட்பவியலாளர்கள் இவ்வதிகார சபையில் தொடர்ந்தும் நடமாடக் கூடியவர்களாகும். இதற்கு மேலதிகமாக சிவில் விமான சேவைச் செயற்பாடுகள் தொடர்பான ஆராய்ச்சியாளர்களும் பாடசாலைப் பிள்ளைகளும் பல்வேறுபட்ட தேவைகளுக்காக அதிகார சபைக்கு வருகை தருகின்றனர். அத்துடன் வருகை தருவோருக்கு அதிகார சபையின் கட்டிடத்திற்குள் பிரவேசிக்கும் வேளையில் கவர்ச்சி மிக்க சூழலை ஏற்படுத்துவதன் ஊடாக நிறுவனப் பணிகளை மேற்கொள்வது வசதியாக அமைவதனைப் போன்றன்றி அதிகார சபை முழு நாடு தொடர்பிலும் சிறந்த சிந்தனைகளை ஏற்படுத்தப் பின்னணியாக அமைந்துள்ளது. மக்களின் பேரபிமானத்தைப் பெறுவதற்காக மேற்கொள்ளப்பட்ட முதலீடாகவும் இது மாற்றம் பெற்றுள்ளது. இதற்காகக் கவர்ச்சிமிக்க பல்வேறுபட்ட வகையில் நவீன விமான மாதிரிகள் அதிகார சபையின் கட்டிடத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன் அவை அதிகார சபையின் சொத்தாக மாற்றம் பெற்றுள்ளமையினால் வளங்கள் சேதமடையவுமில்லை. அவை பேணப்பட்டிருப்பது அலுவகப் பணிகளுக்காக பயன்பாட்டு எடுத்துக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பத்திற்கு தடை ஏற்படக்கூடியவாறு என்பதனால் இதன் மூலம் அலுவலகத்தின் இடவசதிகளில் குறைவுகள் ஏற்படவில்லை.

(இ) சிவில் விமான சேவை விடயத்துக்குரியதாக இடம்பெற்ற வெளிநாட்டுச் செயற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய செலவினம் அதிகார சபையினள் நிதியத்தினால் மேற்கொள்ள வேண்டுமென விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் கிடைக்கப்பெற்ற எழுத்து மூலக் கட்டளைகளுனக்கு அமைய அமைச்சர் மற்றும் அவரது பணியாளர் சபையின் வெளிநாட்டுக் கடவுச் சீட்டுகளுக்கு உரிய செலவினம் அதிகார சபையின் நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அமைச்சின் எழுத்து மூலக் கட்டளைகளை நிறைவேற்ற சிவில் விமான சேவை அதிகார சபையினால் தாபிக்கப்பட்ட சட்டத்தின் 31 ஆவது பிரிவுக்கு அமையக் கட்டுப்பட்டுள்ளது.

### 2.2.7. கட்புலன்சார்ந்த மோசடிகள்

உரிய செயற்பாடுனளின் போது உத்தியோகத்தர் அதிகார சபையின் பணியாளர் சபைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டு அமைச்சின் அலுவலகத்தின் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்காக விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரிடமிருந்து கிடைக்கப்பெற்ற எழுத்து மூலக் கட்டளைக்கு இணங்க செயற்பாடுகளை மேற்கொள்ளும்

போது சிவில் விமான சேவை அதிகார சபையினால் மேற்கொள்ள வேண்டியிருந்தது, அவருக்கு முறையான நியமனக் கடிதத்தினை வழங்குவதன்றி விடயத்துக்குரிய பணிகளை ஒப்படைக்கும் கடிதத்தை வழங்குவதற்கு என விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதுடன், இதற்கமைய அச்செயற்பாடுகளைத் திருத்தியமைக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் செயற்பட பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது.

4 4.2 பொருளாதாரமல்லாத கொடுக்கல் வாங்கல்கள்

பணிப்பாளர் சபையின் தீர்மானத்துக்கு இணங்க உரிய கழுத்துப்பட்டி தயாரிக்கப்பட்டது சிவில் விமான சேவை அதிகார சபைக்கு வருகை தரும் விசேட அதிதிகளுக்கு ஞாபகார்த்த சின்னமாக வழங்குவதற்காகும். இதற்கு மேலதிகமாக அதிகார சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட கல்வி மற்றும் ஊக்குவிப்புப் பணிகளில் பங்கேற்று வெற்றியீட்டிய பாடசாலைப் பிள்ளைகளும், அதிகார சபையின் விமான சேவைப் பரிசோதகர்களுக்கும் இக்கழுத்துப் பட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. கழுத்துப் பட்டிகளின் உரிய தரமின்மை தொடர்பான பிரச்சினைகள் எழுந்துள்ளன.

4.3. முகாமைத்துவச் சீர்கேடுகள்

(அ) (i) சிவில் விமான சேவை அதிகார சபை அதிகார சபையினால் பேணப்படும் தற்போதைய இக்கட்டிடத்தில் அலுவலகத்தினைத் தாபிப்பதற்கு முன்னர் அலுவலகச் செயற்பாடுகள் காலி வீதி, இல. 64 கொண்ட இடத்தில் அமைந்துள்ள சுப்ரி என்ற கட்டிடத்திலேயே செயற்பட்டது. சுற்றுலா அமைச்சினால் அது குத்தகைக்கு எடுக்கப்பட்ட போதிலும் அது நான்கு மாடிகள் மற்றும் மேலும் ஒரு மாடி குத்தகைக்கு பகிர்ந்துகொள்ளும் அடிப்படையில் சிவில் விமான சேவை அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. 2010 ஆம் ஆண்டில் அரசினால் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தாபிக்கப்பட்டதைத் தொடர்ந்து சுற்றுலா அமைச்சு மற்றும் ஏனைய பல நிறுவனங்கள் அதனுடன் இணைந்தமையினால் தேவையான இடவசதிகளைப் பெற்றுக்கொள்ள பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் பேணுவதற்காக சுப்ரீம் என்ற கட்டிடத்தில் இருந்து துரிதமாகச் செல்லுமாறு அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டது. இதற்கமைய அதிகார சபையின் இடவசதித் தேவை மற்றும் ஏனைய எதிர்பார்க்கப்பட்ட வசதிகளைக் குறிப்பிட்டு பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை அறிவித்தலுக்கு அமையக் கூடிய வரவேற்புக்களுக்கு இடையே தேர்ந்தெடுத்தல் நிபந்தனைகளை நிவர்த்தி செய்து குறைந்தபட்ச விலை (ஒரு சதுர அடிக்கு ரூபா 100) கணிப்பீடுகள் சமர்ப்பிக்கப்பட்டமை தற்போதைய கட்டிடத்தின் உரிமையாளரினால் ஆகும். இது எவ்வாறாக இருப்பினும் மேற்கூறுப்பட்ட விலை அரச மதிப்பீட்டு விலையை விட அதிகமாக இருந்தமையினால் அதனைப் பொருத்தமான தீர்மானங்களுக்காக நிதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டதன் பின்னர் இவ்விலைக்கு தற்போதைய கட்டிடத்தை வாடகைக்குப் பெற்றுக்கொள்ள நிதி அமைச்சின் செயாலாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. கட்டிடத்திற்காக பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலகத் திட்டமிடலுக்கு இணங்க சாரதி ஓய்வறை மற்றும் களஞ்சியசாலை அறை போன்ற ஒருசில வசதிகள் பிரதான கட்டிடத்திற்கு வெளியே தாபிக்கப்பட்டிருந்தது. எனவே இவை தற்காலிகமாக நிர்மாணிக்கப்பட்டதுடன் இதற்காக 4 மாடிகளைக் கொண்ட முழுமையான கட்டிடத்தில் அலுவலக அறையினை ஒதுக்குவதற்காக ஏற்பட்ட மொத்த செலவினம் ரூபா 28,214,123 ஆகும் என்பதுடன் அந்நிதியினை மூன்று ஆண்டுகளுக்காக தீர்க்கப்படும் போது ஒரு சதுர அடிக்கு ஏற்பட்ட செலவினம் ரூபா 125 ஆகும். இது கட்டிடத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட சகல ஏற்புடைய விலைகளையும் விடக் குறைந்த கட்டணம் ஆகும்.

எந்தவொரு கட்டிட உரிமையாளருக்கும் தமது கட்டிடத்தின் அலுவலக அறையைப் பிரித்து ஒதுக்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டதுடன் இதற்காக செலவாகக் கூடிய காலத்திற்குள் கட்டிடத்தை இலவசமாக வழங்கப்படுவதில்லை என்பதுடன் புதிய கட்டிடத்தில் அலுவலக அறை பூர்த்தியடையும் வரை அலுவலகச் செயற்பாடுகளை முதலாவது கட்டிடத்தில் பேணவேண்டி ஏற்பட்டமையினால் உரிய காலத்திற்குள் உரிய கொடுப்பனவுகளைச் செலுத்த வேண்டி ஏற்பட்டது.

(ii) பொதுவாக வரிப்பண வரி தொடர்ந்தும் மறுசீரமைப்புக்கு உட்படுத்தப் படுவதில்லை. அவை மிகச்சிறிய விகிதாசாரத்திற்கணங்கவே மறுசீரமைக்கப்படுகிறது. இதற்கமைய கட்டிடத்தின் கூலியினையும் சீர்திருத்துவது பொதுவான செயற்பாடாகும். பிரதான மதிப்பீட்டாளரினால் பரிந்துரை செய்யப்பட்ட

நிபந்தனைகள் குத்தகை உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டு கட்டிட உரிமையாளரினால் இணங்காமையினால் அவ்வாறு மேற்கொள்வது சிரமமாகக் காணப்பட்டது. இது எவ்வாறாக இருப்பினும் இக்கட்டிடம் அமைந்திருப்பது கொழும்பு – 02 பிரதேசத்தில் என்பதனால் கட்டிட உரிமையாளரினால் சமா்ப்பிக்கப்பட்டிருந்த விலை மனுக்களுக்கு ஏற்றவாறு வேறொரு கட்டிடத்தினைப் பெற்றுக்கொள்ள அக்காலத்திற்குள் முடிவில்லையென மேலும் குறிப்பிடுகிறேன்.

(ஆ) தங்களது பரிந்துரையுடன் இணங்குவதுடன் மேற்பார்வைக் கட்டணத்தை சீர்திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. கட்டண சீர்திருத்தத்தில் தாமதப்படுத்தியது 2009 ஆம் ஆண்டு வரை நாட்டில் காணப்பட்ட நிலைமையின் அடிப்படையில் கட்டண சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அது சிவில் விமான சேவைக் கைத்தொழிலின் ஊக்குவிப்புக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தியமையினால் ஆகும்.

### 4.4. ஒப்பந்த நிர்வாகக் குறைபாடுகள்

தங்களது மேற்பார்வையுடன் இணங்குவதுடன் அவ்வாறான தவறுகள் எதிர்கால்ததில் ஏற்படாதவாறு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### 4.5. ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அதிகார சபையின் வளம்

சிவில் விமான சேவை அமைச்சினால் அமுல்படுத்தப்படும் உள்நாட்டு விமான நிலையங்களைக் கட்டியெழுப்புதல் மற்றும் புதிய விமான நிலையங்களை நிர்மாணிக்கும் செயற்றிட்ட மேற்பார்வைப் பணிகளுக்காக ஈடுபடுத்தல் 2002 இல. 34 கொண்ட சிவில் விமான சேவை அதிகார சபைச் சட்டத்தின் 31(1) வாசகத்துக்கு அமைய அமைச்சரினால் எழுத்து மூலக் கட்டளைக்கு இணங்க பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் கீழ் உரிய வாகனம் வழங்கப்பட்டது.

### 4.6. பணியாளர் சபை நிர்வாகம்

(அ) அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத் திட்டமிடல்களைத் தயாரிக்கும் போது அத்தியவசியத் தகவல்களுக்கு மேலதிகமாக அதிகார சபையின் பதவியுயர்வுச் சந்தர்ப்பங்களைக் கருத்திற் கொண்டு பல பதவிகள் உருவாக்கப்பட்டுள்ளன. உதவி நிதி முகாமைத்துவப் பதவி இதில் ஒரு பதவியாகும். எனவே ஆரம்பத்தில் இப்பதவியினை நிரப்புவதற்குத் தேவையற்றதாக தீர்மானிக்கப்பட்ட அதிகார சபை அதன் ஐந்து வருட காலத்துக்காக இடைநிறுத்தியிருந்தது. இதற்கிடையே பிரதிப் பணிப்பாளர் (நிதி) பதவியில் வெற்றிடங்கள் ஏற்பட்டதுடன் நிர்வாகச் செயற்பாடுகளை கிரமமாக மற்றும் தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்காக நிதிப் பிரிவில் இருந்த சிரேஷ்ட உத்தியோகத்தரான கணக்காளர், நிதிப் பணிப்பாளர் (நிதி) பதவியில் பதில் கடமைக்காக பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவர் சேர்த்துக் கொள்ளப்பட்டதுடன் அதிகார சபை தாபிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் கடந்த மையினால் உதவி நிதி முகாமைத்துவப் பதவியினைச் செயற்படுத்தி அப்பதவிக்காக விண்ணப்பங்கள் கோரியதன் பின்னர் தேவையான தகைமைகளைப் பெற்றிருந்த கணக்காளர் பதவி வகித்த உத்தியோகத்தர் இதற்காகப் பதவியுயர்த்தப்பட்டார்.

(ஆ) சேவையின் தேவைக்கிணங்க இப்பதவிக்காக பதில் கடமையின் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் ஏற்கனவே அப்பதில் கடமை நியமனங்கள் அமுல்படுத்தப்படவில்லை.

## 5 கணக்குச் செயற்பாடுகளின் தன்மை மற்றும் சிறந்த நிர்வாகம்

### 5.1. வரவு செலவு நிர்வாகம்

தங்களது மேற்பார்வையுடன் இணங்குகிறேன். எதிர்காலத்தில் வரவு செலவுத்திட்ட ஆவணங்களைத் தயாரிக்கும் போது உண்மையாக மற்றும் பயன்மிக்கவாறு அதனைத் தயாரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## 6 முறைமை மற்றும் நிர்வாகம்

கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் நாம் கூடுதலான கவனம் செலுத்தியுள்ளோம். காண்பிக்கப்பட்டுள்ள குறைபாடுகள் எதிர்காலத்தில் ஏற்படாதவாறு செயற்பட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் இலங்கையில் சிவில் விமான சேவைச் செயற்பாடுகளை முகாமைத்துவத்திற்கு உட்படுத்தும் போது சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பினால் தொடர்ந்தும் நடாத்தப்படும் கணக்காய்வுகளுக்குரிய செயற்பாடுகள் சர்வதேச தரத்துக்கு

மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட ஒழுங்கு விதிமுறைகளுக்கு இணங்கப் பேணப்படுவதாக உறுதிப்படுத்தும் மிகப்பெரிய பொறுப்பு இவ்வதிகார சபைக்கு வழங்கப் பட்டுள்ளமையினால் தங்களது உரிய கணக்காய்வுச் செயற்பாடுகளில் இது தொடர்பாக கவனம் செலுத்துமாறும் தயவாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் தங்களது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சில வாசகங்களுக்குரிய அடிப்படைக் கணக்காய்வுகள் இவ்வதிகார சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருப்பது அவ்வறிக்கை வெளியிடப்பட்டதன் பின்னராகும். அவ்வாசகங்களுக்கு உரியதாக விரிவான அடிப்படையில் உரிய விடயங்களை முன்வைக்க இவ்வதிகார சபைக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்பதனையும் தயவாய் குறிப்பிட விரும்புகிறோம்.



ஜெனரல் றொஹான் டி சில்வா தளுவத்த,

தலைவர்.

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

# இணைப்பு - 1 : CAA இன் நிர்வாகக் கட்டமைப்பு

## Civil Aviation Authority of Sri Lanka Functional Responsibility Chart



## இணைப்பு - 2 : விமானப் போக்குவரத்துச் சம்பவங்கள் - 2011




| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| FUEL | Fuel related | | | | | SEC | Security related |
| RAMP | Ground Handling | | | | | TURB | Turbulence encounter |
| GCOL | Ground collision | | | | | ATM | Air Traffic Management/ No Contact |
| LALT | Low altitude operations | | | | CABIN | Cabin safety events | |
| MAC | AIRPROX/near miss/ midair collision | | | BIRD | Bird strikes | | |
| SCF-NP | System/component failure or malfunction (non- power plant) | OTHER | Other | | | | |
| SCF-PP | Power plant failure or malfunction | | | | | | |

**Note : All aircraft occurrences reported during the year 2011 from aircraft registered in Sri Lanka and occurrences occurred into any aircraft within the territory of Sri Lanka**

# இணைப்பு - 3 : USOAP ஆய்வு முடிவுகள்

## USOAP ஆய்வு முடிவுகள்

### நாட்டினால் மேற்கொள்ளப்படும் சராசரி செயற்றிறன்மிக்க அமுலாக்கல்




### ICAO SARPS அமுலாக்கத்தின் பயனுறுதித்தன்மை



## நாடுகளின் பாதுகாப்பு மேற்பார்வை இயலளவு




## ICAO பாதுகாப்பு மேற்பார்வை ஆய்வு முடிவுகள்

## செயற்றறன் அமுலாக்கலின் பற்றாக்குறை வீதம்



இணைப்பு -4 : விமானப் போக்குவரத்து எரிபொருள் விலை முரண்பாடுகள்



## இணைப்பு - 5 : ஏற்றல் வரிச் சேகரிப்பு

| நன்மை பெறுவோர் | 2009 (ரூபா மில்லியனில்) | 2010 (ரூபா மில்லியனில்) | 2011 (ரூபா மில்லியனில்) |
|---|---|---|---|
| ஏ.ஏ.எஸ்.எல் | 1,499 | 1,887 | 1,927 |
| இலங்கை சுற்றுலாச் சபை / இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை | 749 | 943 | 976 |
| இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை | 53 | 72 | 84.6 |

## வருமானம் மற்றும் செலவீனம் 2011

### செலவீனங்கள்




### வருமானங்கள்



## இணைப்பு - 6 : CAA ஊழியரால் பயன்படுத்தப்பட்ட விடுமுறைகள்



## இணைப்பு - 7 : பயணிகள் வெளியேறுகைகள் மற்றும் உள்வருகைகள்






## இணைப்பு - 8 : தொலைதொடர்புக் கோபுரங்களின் நிர்மாணம்

